# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 28 சனிக்கிழமை (15.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 323





14 மேற்குலக நாடகத்தின் ஒரு சுருக்கமான வரலாறு





21 அனு உலையை நிறுத்துமாறு நீதிமன்றில் மனுத்தாக்கல்





23 பரசூட் செயலிழந்து பாட்டி மரணம்





25 பழிவாங்கும் படலம் ஆரம்பம்


# காணிப்பதிவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனு

## கூட்டமைப்பு விரைவில் தாக்கல் செய்யும்

கொழும்பு, ஒக்ரோபர் 15

வடக்கில் உள்ள அனைத்துக் காணிகளையும் அரசு பதிவு செய்வதை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யவுள்ளது. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் கூட்டமைப்பின் சார்பில் அடுத்த வாரம் இந்த மனுவைத் தாக்கல் செய்வார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கில் காணிகளைப் பதியும் நடவடிக்கைகளை அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. இது குறித்து பொதுமக்களிடம் சந்தேகங்களும் குழப்பங்களும் நிலவுகின்றன. வடக்கில் உள்ள சட்டத்தரணிகள் இந்த நடவடிக்கையை எதிர்த்து வருகின்றனர். எனினும் அரச அதிகாரிகள் பதிவுகளைத் தொடர்ந்து வருகின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கில் அவசர அவசரமாகக் காணிகளை அரசு பதிவு செய்ய வேண்டியதன் நோக்கம் என்ன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கேள்வி எழுப்பி வந்ததுடன் எதிர்ப்பும் தெரிவித்து வருகிறது. இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்துவதற்கான பிரேரணை அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை

பக் 27

# நகர அபிவிருத்தி அதிகார சபை பாதுகாப்பு அமைச்சில் இணைப்பு

கொழும்பு, ஒக். 15

நகர அபிவிருத்தி அதிகார சபையைப் பாதுகாப்பு அமைச்சுடன் இணைத்துப் புதிய விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை அரசு அதிரடியாக வெளியிட்டிருக்கிறது.

இதன் பிரகாரம், இதுவரை தனியாக இயங்கிய பாதுகாப்பு அமைச்சு இனிமேல் பாதுகாப்பு மற்றும், நகர அபிவிருத்தி அமைச்சு என்ற பெயரில் செயற்படும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை இதுவரை காலமும் பாதுகாப்பு அமைச்சின் கீழேயே செயற்பட்டாலும் அதற்கு முழுமையான உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைக்க

பக் 27

# தெற்கு மீனவர்கள் வடக்கில் இனி தொழில் செய்ய அனுமதியில்லை

யாழ்ப்பாணம், ஒக். 15

தெற்கில் இருந்து வரும் மீனவர்கள் வடக்கில் தங்கியிருந்து கடல்தொழிலில் ஈடுபடுவதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பி உள்ளது. இதனைத் தொடர்ந்து தென் பகுதி மீனவர்கள் வடமராட்சி கிழக்கில் தங்கியிருந்து கடல்தொழில் செய்வதற்கு அனுமதிப்பதில்லை என்று வடக்கில் உள்ள கடல்தொழிலாளர் சங்கங்கள் கூடித் தீர்மானித்துள்ளன.

அண்மையில் கூடிய வடமராட்சி கிழக்கு

பக் 27

# இழுத்தடிக்காது அரசியல் தீர்வை உடன் முன்வைக்க வேண்டும் அரசு

## மாவை சேனாதிராசா எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஒக். 15

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருமித்த கருத்துடனேயே செயற்படுகின்றது. எனினும், அரசு ஒருமித்த கருத்துடன் செயற்படுகிறதா என்பது சந்தேகமே. கூட்டமைப்புக்குத் தமிழ் மக்கள்



வழங்கிய ஆணையையும், சர்வதேசத்தின் எதிர்பார்ப்பையும் கருத்திற்கொண்டு அரசே தீர்வை விரைந்து முன்வைக்க வேண்டும்,

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடா

பக் 27

# தமிழக மீனவர்களுக்கு கடற்படைப் பாதுகாப்பு

சென்னை, ஒக்.15

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களைத் தடுப்பதற்காக அவர்களுக்கு இந்தியக் கடற்படையின் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று மாநில மற்றும் மத்திய அரசுகளுக்கு மதுரை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் சட்டத்தரணி ஸ்டாலின் என்பவர் பொதுநல வழக்காக, கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கும் விளையாட்டு இடத்திற்கும் முப்படை பாதுகாப்பு அளிப்

பக் 26

# யாழ்.நகர் சம்பத் வங்கியில் நள்ளிரவில் புகுந்த நபர்!

## 'அலாரம்' அலற விரைந்து மடக்கினர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்.நகரிலுள்ள சம்பத் வங்கி அலுவலகத்தினுள் நேற்று முன்தினம் வியாழன் இரவு 11 மணிளவில் திடீரென உட்புகுந்தார் ஒருவர். இதனைக் கவனித்து விட்டார் அங்கு காவல் கடமையில் நின்றவர்.

உடனடியாக அவர் இலத்திரனியல் சமிக்ஞை (அலாரம்) உபகரணம் மூலம் தகவல் கொடுத்தார் யாழ். பொலிஸாருக்கு. விரைந்து வந்தனர் பொலிஸார். சந்தேக நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

தற்போது சந்தேகநபர் பொலிஸ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நபர் இன்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார் என்று கூறினார் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சமன் சிகேரா. (ஓ-4)

# வீதி அகலிப்பின்போது காணி சுவீகரிப்பு; மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.15

வீதி அகலிப்பின் போது சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு நட்டஈடு பெற்றுத் தருமாறுகோரி மனித உரிமை ஆணைக் குழுவின் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

வீதி அகலிப்புப் பணிகளின் போது சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளுக்கு நட்டஈடு வழங்கப்படாதுவிடின் அது குறித்து முறையீடு - செய்ய முடியும். இது சம்பந்தமாக முறைப்பாடு செய்பவர்

பக் 27

# உயர் பாதுகாப்பு வலய படைமுகாம்கள் விவரம் சேகரித்துச் சென்ற ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் (முகாம் பகுதிகள்) குறித்து கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு யாழ்ப்பாணத்துக்குத் தீடிரென வருகை தந்து விவரங்களைப் பெற்றுச் சென்றிருக்கிறது.

நேற்றுமுன்தினம் வந்த ஆணைக் குழுவினர் குடாநாட்டில் அண்மையில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் மல்லாகத்தில் அமைந்துள்ள அகதி முகாமுக்கும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கடந்த புதன்கிழமை மன்னார் மாவட்டத்துக்கு சென்றிருந்த நல்லி ணக்க ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்களும் மொழி பெயர்ப்பாளரும் அங்குள்ள சிறுவர்களைச் சந்தித்தனர். இதன் தொடர்ச்சியாகவே நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை யாழ். மாவட்டத்துக்கு விஜயம் செய்தனர்.

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை அவதானித்துள்ளனர். வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப் பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர். இதன் போது கூரையில்லாத வீடுகள், தகரக் கூடாரங்களுக்குள் வாழும் மக்களையும் சந்தித்து கலந்துரையாடினர்.

மயிலிட்டியைச் சேர்ந்த

பக் 27

# இந்தியா - சீனா இடையே போர் மூளும் ஏதுநிலை

## எதிர்வு கூறுகிறது ஊடகம்

கொழும்பு, ஒக். 15

"ஆசிய நாடுகளான சீனா மற்றும் இந்தியா ஆகியவற்றுக்கு இடையில் போர் மூளும் சாத்தியங்கள் அதிகமாக உள்ளன" - என்று எச்சரித்துள்ளது 'சிலிகோன் இந்தியா' என்ற இணையத் தளம்.

தென்சீனக் கடல் தொடர்பில் இந்த இரு ஆசிய நாடுகளுக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள மோதலானது பூகோளத்தின் கவனத்தைத் திடீரெனத் திசைதிருப்பியுள்ள விடயமாக உள்ளது எனறும் அது குறிப்பிட்டுள்ளது.

தென்சீனக் கடலில் அதிகரித்துவரும் இந்தியாவின் ஊடுருவலே இதற்கான காரணம் என்று அந்த

பக் 27


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழைக்கான சாத்தியம்

## COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
ஐப்பசி 14 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,549.91↓
மிலங்கா(MPI) 5,878.33↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 9992.61 Mn
பங்குகளின் அளவு(No.) 50.69Mn
வியாபாரம்(No.) 11,135
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
சாம்சன் இன்ரநசனல் 160.00
யூனியன் கெமிக்கல் 811.80
சிற்றி கவுசிங் 22.20
த பினான்ஸ் 43.70
ரிவரீனா ஹொட்டல் 110.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
இன்பா(க) எஸ்றக்ஷ் 27.50
எ.எம்.பைனான்ஸ் 480.00
எஸ்.எம்.பி லீசிங்(w) 1.20
சொப்லொஜிக் பைனான்ஸ் 47.80
செலிங்கோ இன்சூரன்(x) 327.30
மேலதிக தகவல்கள்- www.cse.lk

## துமிந்த அச்சுறுத்தல்

உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வா தன்னை அச்சுறுத்தியிருந்தார் என கொட்டிகாவத்தை - முல்லேரியா பிரதேச சபையின் முன்னாள் தலைவரான பிரசன்ன சோலங்க ஆராச்சி வெல்லம்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

### இரத்தினபுரியில் ஆயுதக் கும்பல் வெறியாட்டம்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சுட்டுப் படுகொலை

தாய், தந்தை, பிள்ளைகள் என ஒரு குடும்பத்தையே அவர்களின் வீட்டில் வைத்து கோரத்தனமாக - கொடூரமாக இனந்தெரியாத ஆயுதக்கும்பல் ஒன்று சினிமாப் பாணியில் சுட்டுப் படுகொலை செய்துள்ள பயங்கரச் சம்பவம் இரத்தினபுரி, உடவளவை பனஹடுவ பிரதேசத்தில் புதன்கிழமை இரவு அரங்கேறியுள்ளது.

முல்லேரியாச் சூட்டுச் சம்பவத்தால் நாட்டில் ஏற்பட்ட பதற்றநிலைமை இன்னும் முழுமையாக தணியாத நிலையில் மீண்டும் இவ்வாறானதொரு மிலேச்சத்தனமான படுகொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதானது பெரும் பரபரப்பையும் - அச்சத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

புதன்கிழமை இரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற இந்த கோரச் சம்பவத்தில் தந்தையான எல்.கே.லலித் (வயது - 37), தயார் இந்திராணி (வயது- 32), மகன் எம்.கே.டிலான் சதுரங்க (வயது 14), மகள் ரசிகா (வயது - 8) ஆகியோரே படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என உடவளவை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த குடும்பத்தலைவன் பிரபலமான வாகன வியாபாரி என்றும், தொழில் ரீதியில் ஏற்பட்ட பிரச்சினையே இந்த சம்பவத்துக்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தையடுத்து கொதிப்படைந்த பனஹடுவ பிரதேச வாசிகள் அலைபோல் திரண்டு வீதியில் இறங்கிக் கொலையாளிகளை உடன் கைது செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படாத நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் உடவளவை பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

## நாகர்கோயில் சந்தி ஊடான போக்குவரத்து ஆரம்பம்

பருத்தித்துறை - ஆழியவளை - கட்டைக்காடு பிரதான பாதையில் நாகர்கோயில் சந்தியில் பழுதடைந்த மதகு தற்காலிகமாக திருத்தப்பட்டதையடுத்து அதனூடாகப் பஸ் சேவைகள் மற்றும் வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த கால யுத்தத்தினால் சேதமடைந்திருந்த இந்த மதகு மீது இரும்புத் தகடு போடப்பட்டு போக்குவரத்துச் சேவைகள் நடைபெற்று வந்தன. இரும்புத் தகடு மதகைவிட்டு நகர்ந்ததையடுத்து இதனூடாகப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன. மீண்டும் இந்த மதகு மீது இரும்புத் தகடு இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறையிலிருந்து வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள செம்பியன்பற்று, மருதங்கேணி, ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய இடங்களுக்கானபஸ்சேவைகள் நடைபெற்று வருகின்றன. (த-236)

## சீனப் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் குழு கொழும்பில்!

சீனாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது. சீனப் பாதுகாப்பு அமைச்சின் வெளிநாட்டு விவகாரத் தலைவர் மேஜர் ஜெனரல் குவான் லிஹுவா தலைமையிலான இந்தக் குழுவினர் புதன்கிழமை காலை இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இரு நாட்டு பாதுகாப்பு உறவுகளையும் பலப்படுத்திக் கொள்வது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பிலுள்ள பாதுகாப்புச் சேவைகள் கல்லூரிக்கு 10 மில்லியன் யுவான் பெறுமதியான கருவிகளை வழங்குவதற்கான உடன்பாடு ஒன்றும் இந்தச் சந்திப்பின்போது கையெழுத்திடப்பட்டுள்ளது.

பின்னர் சீன பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவைச் சந்தித்து இரு நாட்டு இராணுவங்களுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பாகப் பேச்சுகளை நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை இராணுவம் நடத்தும் நிபுணத்துவ பயிற்சிகளுக்கு சீன இராணுவ அதிகாரிகளை அதிகளவில் அனுப்பி வைக்குமாறு இலங்கை இராணுவத் தளபதி அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன் இலங்கை இராணுவத்துக்கு கண்ணிவெடிகளை அகற்றும் 100 கருவித் தொகுதிகளை வழங்கவும், சீன போர்ப் பயிற்சிக் கல்லூரிகளில் இலங்கைப் படை அதிகாரிகளுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கவும் இருநாட்டு அதிகாரிகளும் இணக்கம் கண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ர)

## வாகனங்களை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்க

உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள், சைக்கிள் என்பன மல்லாகம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் உரிமையாளர்கள் மல்லாகம் நீதிமன்றப் பதிவாளர் காரியாலயத்தில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளுமாறு மல்லாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

வாகன இலக்கங்கள் வருமாறு:

மோட்டார் சைக்கிள்கள் - என்.பி.எம்.சி. 6962, 88ஸ்ரீ4731, 500-3562, சைக்கிள்கள் - லுமாலா லேடிஸ் சைக்கிள் 6958831, ஈஸ்ரன் 02 ஈஆர் 8389 (த)

## டிஜிற்றல் நிறுத்தல் அளவைகளுக்கு கட்டாயம் முத்திரையிட வேண்டும்

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ். குடாநாட்டில் உள்ள வர்த்தக நிலையங்களில் தற்போது கடைத்தேவைக்காகப் பயன்படுத்தப்படும் டிஜிற்றல் நிறுத்தல் அளவைக்கருவிகளுக்குக் கட்டாயம் முத்திரையிடப்பட வேண்டும் என்று யாழ் செயலக நிறுத்தல் அளவைத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

குடாநாட்டில் தற்போது பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் இவ்வாறான டிஜிற்றல் நிறுத்தல் அளவைக்கருவிகள் முத்திரையிடாமல் பயன் படுத்தப்பட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு டிஜிற்றல் நிறுத்தல் அளவைக்கருவிக்கு முத்திரையிடாமல் பாவிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நிறுத்தல் அளவைத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

சில வர்த்தக நிலையங்களில் 15 கிலோவுக்கு மேற்பட்ட டிஜிற்றல் நிறுத்தல் அளவைக்கருவிகளுக்கு நேரடியாகச் சென்று முத்திரையிடப்பட்டுள்ளன.

15 கிலோவுக்கு உட்பட்ட டிஜிற்றல் நிறுத்தல் அளவைக் கருவிகளை நிறுத்தல் அளவைத்திணைக்களத்துக்கு எடுத்துச் சென்றே முத்திரையிட வேண்டும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.(த-26)

## பொது இடத்தில் மது அருந்தியவர் பொலிஸாரால் கைது

கரவெட்டிப் பகுதியில் பொது இடத்தில் மது அருந்திய ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கரவெட்டி கிழக்கு, கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். இதேவேளை அரச சாராயத்தை அனுமதியின்றி விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அதே பகுதியைச் சேர்ந்த வேறு ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் அ.க. நடராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.வழக்கை விசாரித்த நீதிவான் இவர்கள் இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இதேவேளை கரணவாய்ப் பகுதி வீதியொன்றில் குப்பைகளைக் கொட்டிய ஒருவரும் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பதில் நீதிவான் அ.க. நடராஜா இவருக்கும் ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (த-319)

## நிகழ்வுகள்

**வெள்ளைப் பிரம்பு தின விழா**

யாழ். விழிப்புலனற்றோர் சங்கமும் யாழ். லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இடம் பெறும்.

மாலை நிகழ்வாக இன்னிசை விருந்து இடம் பெறும். (ம-313)

**அறிமுக விழா**

நெடுந்தீவு முகிலனின் குறும்படம் ஆவணப் படம் பாடலின் அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியில் [illegible] தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-313)

**கலந்துரையாடல்**

மனித உரிமைகள் அமைப்பின் யாழ். மாவட்ட சமாதான நீதிவான்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு குருநகர் வீதி, அபிவிருத்தி அதிகார சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் பேரசிரியார் கலாநிதி ஜெயந்த களு போவல கலந்து கொள்வார். (ம-14)

**சட்ட ஆலோசனை**

மகளிர் அபிவிருத்தி நிலையமும் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையமும் இணைத்து இலவச சட்ட ஆலோசனை ஒன்றை இன்று சனிக்கிழமை தெல்லிப்பழை கட்டுவன் ஐயனார் கோயில் மண்டபத்திலும் நாளை ஞாயிற்றுக்கிழமை சித்தங்கேணி பண்ணாகம் அம்மாள் கலை மன்றத்திலும் முற்பகல் 9 மணி தொடக்கம் 2 மணி வரை நடாத்த வுள்ளனர்.

இந்த இலவச சட்ட ஆலோசனையில் காணாமற்போனோர், விவரம் சேகரித்தல் வன்முறை தொடர்பான வழக்குகள், காணிப் பதிவுகள், சிறுவர் பெண்கள் சட்ட ஆலோசனைகள் மரண சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை பெறும் வழி முறைகள் போன்றன குறித்த ஆலோசனை கள்வழங்கப்படவுள்ளன.

இதற்காக கொழும்பிலிருந்து சட்டத்தரணிகள் வருகை தரவுள்ளனர்.

பொது மக்கள் இவ் இலவச ஆலோச னைகளில் பங்கு கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் தமிழ் இலக்கிய விழா கோலாகலமாக ஆரம்பம்

மன்னார்,ஒக்.15

மன்னாரில் இந்தமுறை நடைபெறும் வடமாகாண தமிழ் இலக்கிய பெருவிழா நேற்றுக் காலை கோலாகலமாக ஆரம்பமானது. முதல் நாள் நிகழ்வு நேற்று காலை 9 மணியளவில் மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

பேராசான் கார்த்திகேசு சிவத்தம்பி அரங்கில் சமகால கலை இலக்கியங்களில் பண்பாட்டுக் கோலங்கள்' எனும் தொனிப் பொருளில் ஆய்வரங்கு கவிஞர் சோ . பத்மநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த ஆய்வரங்கில் நாடகங்களின் சமகாலப்பண்பாடு எனும் தலைப்பில் க.ரதிதரனும் புகலிட இலக்கியங்களில் சமகாலப்பண்பாடு எனும் தலைப்பில் கலாநிதி செ.யோகராஜனும் பத்திரிகை தவிர்ந்த ஊடகங்களின் சமகாலப்பயன்பாடு எனும் தலைப்பில் எஸ்.ரி.சிறிபிருந்திரனும் நவீன கவிதைகளில் சமகாலப்பண்பாடு எனும் தலைப்பில் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளாரும் ஆய்வுகளை நடத்தினர்.



ஊடகங்களின் சமகாலப் பயன்பாடு என்ற தலைப்பில் எஸ்.ரி.சிறிபிருந்திரன் ஆய்வுரையாற்றுகிறார்.



விழாவில் கலந்துகொண்டவர்கள்

மேற்படி ஆய்வரங்கு நிகழ்வில் பேராளர்களாக பாடசாலை ஆசிரியர்கள்,எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் மாணவர்கள் எனநூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். (ஒ-601)

# யாழ்.பொலிஸாரின் நடமாடும் சேவை இன்று வேம்படி மகளிர் கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்.பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் பொது மக்களுக்கான நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இன்று காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையின் போது மூக்குக் கண்ணாடி வழங்கல்,தேசிய அடையாளஅட்டைக்கு விண்ணப்பித்தல், பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்தல், வைத்தியப் பரிசோதனை மேற்கொள்ளல் ஆகியன இடம்பெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் பொது மக்களைக் கலந்து கொண்டு பயன்பெறுமாறு யாழ். தலைமைப் பொலிஸ் பரிசோதகர் சமன்சிகேரா கேட்டுள்ளார்.

வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா தலைமையில் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இதன்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றுக்கு தலா 3 லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் கட்டில்கள் இரண்டு வழங்கப்படவுள்ளன எனவும் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் மேலும் தெரிவித்தார். (த-14)

### தவறான பெயர், விவரங்களை வழங்கிய

# தம்பிக்காக நீதிமன்றில் ஆஜராகிய மூத்த சகோதரனுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 15

உழவு இயந்திரத்தில் மணல் கடத்திச் சென்ற வேளையில் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்ட நபர் ஒருவர், தமது பெயர், விவரங்களுக்குப் பதிலாக சகோதரனின் விவரங்களை வழங்கிவிட்டு பிணையில் சென்றிருந்தார்.

இப்போது அவரது சகோதரர் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

ஊர்காவற்றுறை, புளியங்கூடலைச் சேர்ந்த கஜேந்திரன் என்பவர் உழவு இயந்திரத்தில் மணல் கடத்திச் சென்றபோது ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டார். அவரை விசாரித்த பொலிஸார் தேசிய அடையாள அட்டை வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை கேட்டுள்ளனர். எந்த ஆவணங்களும் கைவசம் இல்லை என்று பிரஸ்தாப நபரான கஜேந்திரன் பொலிஸாருக்கு கூறியுள்ளார். அது மட்டுமன்றி தனது பெயர், விவரங்களுக்குப் பதிலாக அவரது மூத்த சகோதரனின் விவரங்களை வழங்கியுள்ளார். அதை அடுத்து புளியங்கூடலைச் சேர்ந்த வசீகரன் என்பவர் கையொப்பமிட்டு அவரது பொறுப்பில் கஜேந்திரன் பொலிஸ் பிணையில் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்

இந்த நிலையில் கஜேந்திரன் வழங்கிய விவரங்களைக் கொண்ட மூத்த சகோதரனான ரவிச்சந்திரன் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் கடந்த 4ஆம் திகதி ஆஜரானார்.

நீதிமன்றில் கஜேந்திரனுக்குப் பதிலாக வேறு ஒருவர் ஆஜரானதைப் பொலிஸார் அவதானித்துவிட்டனர். இது தொடர்பாக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவாவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. நீதிவான் விசாரித்ததில் 'குட்டு' அம்பலமானது. ரவிச்சந்திரன் நடந்ததைக் கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

தம்பியிடம் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை. அதன் காரணமாகவே அவர் எனது பெயரை பொலிஸாருக்கு வழங்கியுள்ளார் என்று நீதிவானிடம் கூறிய ரவீந்திரன் குற்றத்தையும் ஒப்புக்கொண்டார்.

ஆள் மாறாட்டம் செய்யப்பட்ட குற்றத்துக்காக அவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன், சந்தேக நபரான கஜேந்திரன் மற்றும் பிணையாளியான வசீகரன் ஆகியோரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. (ஒ-14)

# வல்வெட்டித்துறையில் முளைக்கும் புத்தர் சிலை

யாழ்ப்பாணம், ஒக்.15

வல்வெட்டித்துறைச் சந்தியில் உள்ள இராணுவ முகாமுக்கு அருகில் புனித செபஸ்தியார் கத்தோலிக்க தேவாலயத்துக்கு முன்பாக நேற்று மாலை புத்தர் சிலை அமைக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை-வல்வெட்டித்துறை பிரதான வீதியில் உள்ள வல்வெட்டித்துறைச் சந்தியில் தனியார் காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்குள் உள்ள அரச மரத்தடியிலேயே புத்தர் சிலையை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக தேவாலயத்தினர் கத்தோலிக்க உயர் பீடத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதய பிரதேசசபை உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இந்தச் சட்டவிரோதமான கட்டட வேலை தொடர்பில் தான் இன்று வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவருக்கு கடிதம் மூலம் அறிவிக்கவுள்ளதாகவும், இராணுவப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கும் அறிவிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சட்ட விரோதமான முறையில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் [illegible] [illegible] வுள்ளதாகவும் சிவாஜிலிங்கம் கூறினார். (ஒ-10)

### கலாசாலை விவகாரம்

# மனித உரிமை ஆணைக்குழுவிடம் ஆசிரிய மாணவர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.15

பலாலி ஆசிரியர் கலாசாலை தொடர்பில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்த கருத்துக்கு எதிராக கலாசாலை ஆசிரிய மாணவர்கள் சார்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாக தனக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருப்பதாக அரச அதிபர் தெரிவித்திருந்தார். இவ்வாறான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை என கலாசாலை அதிபர் மறுத்திருந்தார். அதே சமயம் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் கல்விப் புறக்கணிப்பு போராட்டத்தில் கடந்த புதன்கிழமை முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் கலாசாலையின் ஆசிரிய மாணவர்களினால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றும் அவர்கள் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் கலாசாலைக்கும் ஆசிரிய மாணவர்களினால் முறைப்பாடு ஒன்று தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த முறைப்பாடு நேற்றையதினம் கிடைக்கப் பெற்றதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் உறுதிப்படுத்தினார். (ஒ-15)

### புத்தூரில் குடும்பஸ்தர் சடலமாக மீட்ட சம்பவம்;

# இந்துமத குரு உட்பட மூவர் இரு வார விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஒக்.15

புத்தூர்ப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட இளம் சிங்கள குடும்பஸ்தரின் மரணம் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் இந்துமத குரு உட்பட மூவர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபர்களை இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

விறகு வெட்டும் தொழிலாளியான சுன்னாகத்தைச் சேர்ந்த ஹெட்டியாராட்சி சுரேஸ் (வயது-39) என்பவர் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் காணமற்போயுள்ளதாக மனைவியால் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாடு செய்யப்பட்ட இரண்டாம் நாள் குறிந்த நபர் புத்தூர் வீதியில் உள்ள மக்கிக் கிடங்குப் பகுதியில் அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சடலத்தை மீட்ட அச்சுவேலிப் பொலிஸார் ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்டு மல்லாகம், கல்லாரையைச் சேர்ந்த இருவரைக் கைது செய்திருந்தனர். அதைத் தொடர்ந்து சுன்னாகம் சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள இந்துமத குரு ஒருவரும் மூன்றாவது சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் மூவருமே நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

(ஒ-10-86)

# அனலைதீவு கிராம அலுவலர் மீதான குற்றச்சாட்டு பொய்

### விசாரணைகளின் முடிவில் தெரிவிப்பு

அனலைதீவு கிராமசேவகர் ரொபேட்சன் ஜோன்சன் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த பகுதி மக்களிடம் விசாரணை நடத்தியதில் அனலைதீவு ஜே/38 கிராம அலுவலரான ரொபேட்சன் ஜோன்சன் மீது அதிருப்தி கொண்ட சிலரே இத்தகைய தவறான முறைப்பாடுகளை அரச அதிபருக்கு தெரிவித்திருக்கலாமென மக்கள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

கிராம அலுவலர் நல்ல முறையில் அலுவலகத்திலிருந்து கடமைகளைச் செய்துவருபவர் எனவும் இயன்ற வரை பொது மக்களின் கோரிக்கைகளை தீர்த்து வைப்பவர் எனவும் தவறான செயற்பாடுகளில் இதுவரை ஈடுபடாதவர் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (உ-15)

# மன்னாரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 40 கண்ணி வெடிகள் பொலிஸாரால் மீட்பு

மன்னார், ஒக்.15

மன்னார் மாவட்டம் அடம்பன் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விடத்தல் தீவு பொலிஸ் பிரிவின் கீழ்வரும் அடம்பன் பிரதேசத்திலுள்ள வேட்டையான் முறிப்பு என்ற கிராமத்திலுள்ள மதகு ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த 40 கண்ணிவெடிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. மன்னார் பொலிஸாரின் கீழ்வரும் விடத்தல்தீவு விசேட பொலிஸ் குழுவினர் தமக்குக் கிடைத்த தகவல் 'ஒன்றின் அடிப்படையில் இவற்றை மீட்டனர்.

தற்போது இந்த கண்ணிவெடிகள் யாவும் இந்தப் பகுதியிலுள்ள இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதார பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு. அந்தோனிப்பிள்ளை பீலிக்ஸ் ஜேக்கப் (ஆசிரியர்) திருமதி. சாரதாதேவி கிருஸ்ணதாஸ் (அதிபர்) திருமதி. மேரி கொலஸ்ரிக்கா அன்றூட் நெல்சன் (ஆசிரியர்)

*திருமதி. சாரதாதேவி கிருஷ்ணதாஸ்* (B.A. Hons, Dip. in Edu, SLPS 2-I) *அவர்கள் தீவக வலயத்தில் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன் நாட்டின் ஜனாதிபதியிடம் "பிரதீபா பிரபா" எனும் விருதைப் பெற்றதையிட்டு எமது அதிபரை மனதார வாழ்த்துகின்றோம். அத்துடன் எமது பாடசாலை ஆசிரியர்களாகிய திரு. அந்தோனிப்பிள்ளை பீலிக்ஸ் ஜேக்கப், திருமதி. மேரி கொலஸ்ரிக்கா அன்றூட் நெல்சன் ஆகியோரும் தீவக வலயத்தில் சிறந்த ஆசிரியர்களாகவும் 'பிரதீபா பிரபா" விருதையும் பெற்றதையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.*

**ஆசிரியர் நலன்புரி சங்கம்,**
**யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்.**

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை கோட்டார் கலட்டி பெரிய நாக தம்பிரான் கோவிலுக்கு அருகாமையில்

தொடர்புகளுக்கு : 0772474472

## புதிய கடைகள் விற்பனைக்கு / வாடகைக்கு

இல. 60, ஜும்மா பள்ளிவாசல் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட கடைத்தொகுதியில் கடைகள் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.

தொடர்புகட்கு:
அ.தங்கராசா அன் சன்ஸ்
0778995431, 0750434277

## காவலாளி தேவை

ஆசைப்பிள்ளை அன் சன்ஸ் நிறுவனத்துக்கு அனுபவமுள்ள ஆண் காவலாளி தேவை. நேரில் வரவும். தகுந்த சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

**தொடர்பு: 0777578883**

## கணினி விற்பனைக்கு

P(VI) கணினி LCD Monitor மற்றும் அனைத்துப் பொருள்களுடனும் ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. Internet, Skype, V/call பாவிக்கலாம். Free 4GB Pen Drive/ Web Camera. 19750/= மட்டுமே. 0212224865

Sky Mega Pc
737, K.K.S. Road, Jaffna.
(யாழ். இந்துக் கல்லூரி முன்பாக)

## நினைவஞ்சலி

மலர்வு
19 ✵ 05 ✵ 1932



உதிர்வு
15 ✵ 09 ✵ 2011

### அமரர் கந்தசாமி காமாச்சியம்மா
**(யோகம்மா)**

கடந்த ஆவணிமாதம் 29 ஆம் நாள் (15.09.2011) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் செய்தி கேட்டு, அன்னையின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் செலுத்தியோருக்கும், உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் நினைவாக நாளை (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நல்லூர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*17/18, நல்லூர் வடக்கு,*
*நல்லூர்.*

க.தர்மராஜா (தருமண்ணை-நல்லூர்),
க.பாக்கியராஜா (விஜயன்-நல்லூர்),
மற்றும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா முத்தையா

(இளைப்பாறிய ஆசிரியர், சுழிபுரம் பத்திரகாளி கோயில் முன்னாள் பொருளாளர், சமாதான நீதிவான்)



உடுவிலைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் திசமளையை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய கந்தையா முத்தையா கடந்த 13.10.2011 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசமணி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், கருணைராஜன் (பிரான்ஸ்), வசந்தி (கனடா), சாந்தி (பிரான்ஸ்), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், றமணி (பிரான்ஸ்), இலங்கேஸ்வரன் (கனடா), சற்குணராஜா (பிரான்ஸ்), கலைரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான நடராசா, திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, பத்மநாதன் (ஆசிரியர்-கொழும்பு), இந்திராவதி (கனடா), கமலநாதன் (பிரான்ஸ்), சோதிநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், கஜன், சாருஜன், லவண்ஜா, ராகவன், சுகன்யா, சாரங்கன், சாருஜா, அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் துக்கப்பகிர்வு நிகழ்வு உடுவிலில் நடைபெறும். அவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.

*தகவல்:*
பெறாமக்கள்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

[ஓய்வுபெற்ற பிரதான லிகிதர், சமாதான நீதிவான்.]



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற பிரதான லிகிதரும் சமாதான நீதிவானும் ஆகிய கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் 11.10.2011 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற வயிரமுத்து (மலேசியன் புகையிரத ஊழியர்)-செல்வநாயகி தம்பதியரின் மருமகனும், அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும், மாசிலாமணியின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற முருகேசுவின் மைத்துனரும், ஜெயக்குமார் (ஜேர்மனி), ஜெயகரன் (ஜேர்மனி), ஜெயபாலன் (சுவிஸ்), ஜெயேந்திரன் (சுவிஸ்), சுபத்திரா (திருகோணமலை), ஜெயமோகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், எல்காட், சுதாமதி, கௌரி, தீபா, கார்த்தியாயினி, திருச்செந்தில்நாதன் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மாமனும், சாறா, சாசா, சில்வானா, நிதர்சன், நிவேதன், மிதுசன், குகதீஸ், பிரதீஸ், பிரதீக்கா, பிரஜீத், பிரஜீத்தா, தாட்சாயினி, செந்தூரன், திருமகள், ஜெயேந்தினி, ஜதுர்சன், ஜெனிசா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயில் வீதி,
கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்
குடும்பத்தினர்.


## தீபத் திருநாளை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

(ராசி சில்க்ஸ் & நல்லி சில்க்ஸ் இணைந்து வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை)




**நல்லி சில்க்ஸ்**
121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5573

**ராசி சில்க்ஸ்**
தொ.பே: 021 222 5571

*15.10.2011 தொடக்கம் 26.20.2011 வரை திருமணச் சாறி, கொட்டன்சாறி, சல்வார்கள், சல்வார்த் துணிகள் [கொட்டன் சில்க்ஸ்] மற்றும் அனைத்து உடுபுடைவைகளையும் ஒரே இடத்தில் மிக மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தெற்கில் அரசியல்வாதிகள் பலரின் செல்லப்பிள்ளைகளாக பாதாள உலகினர்

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற (மூன்றாம் கட்ட) உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது, கொழும்பு மாநகர சபைப் பிரதேசத்தில் உள்ளடங்கும் முல்லேரியாவில், அரசாங்கக் கட்சிக்கு ஆதரவான இரு குழுக்களுக்கு இடையே நடைபெற்ற ஆயுதமோதலின் விளைவாக மொத்தம் நான்கு பேர் உயிரிழந்தனர்; மூன்று பேர் காயமுற்றனர் என்பது பழைய செய்தி.

மரணமானவர்களில் ஒருவர் முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனாதிபதியின் இந்நாள் ஆலோசகரும் ஆவார். வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்குச் சற்றுத்தொலைவில் நடைபெற்ற அன்றைய துப்பாக்கிச் சூட்டுச் சண்டையில் காயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா ஆவார்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த இரண்டு அரசியல் பிரதானிகள் இடையே, அவர்களின் ஆதரவாளர்களிடையே, நடைபெற்ற ஆயுத மோதல், ஜனநாயகத்தை, அதன் பிரதான நாடிகளில் ஒன்றான வாக்களிப்பின் பெறுமதியை மிகவும் கீழ் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. இதனை வெறும் குழுச் சண்டையாக மட்டும் பார்க்க முடியாது. இலங்கையின் ஜனநாயகப் பண்புகளில் இதுவும் ஒன்றாக உள்ளடங்கிவிட்டதோ என்ற ஐயத்தையும் தோற்றுவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, சட்டவிரோத ஆயுதங்களைக் களைவதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அவை பறிமுதல் செய்யப்படும் என்றும் அரச தலைவர் மற்றும் அமைச்சர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதனைச் செய்யும் பொறுப்பு இராணுவத்தினரிடமும் விசேட அதிரடிப் படையினரிடமும் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

வாக்களிப்பு நிலையத்துக்குச் சற்றுத் தொலைவில், ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் துப்பாக்கிச் சூட்டில் மோதிக்கொண்டது அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை மட்டுமன்றி அதன் சுயரூபத்தையும் வெளிப்படுத்தி உள்ளது எனலாம்.

பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்களை அரசியலில் அறிமுகப்படுத்தும் மாபெரும் குற்றத்தை, எங்கள் நாட்டில் அரசியல் கட்சிகள் செய்கின்றன. கசிப்புக்காரர்கள் வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களின் பிள்ளைகள் தேர்தல்களில் வேட்பாளர்களாக நிறுத்தப்படுகின்றனர். அவர்களை வேட்பாளர்களாக நிறுத்துவதில் கட்சிகளுக்கு இடையே போட்டி கூட இடம்பெறுவதுண்டு. இத்தகைய போக்கினால் அரசியலில் வன்முறைகள் உண்டாவதை எவராலும் தடுக்க முடியாதுள்ளது. -

எவ்வாறு இருப்பினும் துப்பாக்கிக் கலாசாரம் ஒழித்துக் கட்டப்படும். அதற்கு நான் ஒரு போதும் இடம் அளிக்கமாட்டேன் - என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

மூத்த அரசியல் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார, இரண்டு பாதாள உலகக் கோஷ்டிகளுக்கு இடையில் நடைபெற்ற கொலை மோதல்கள் குறித்துத் தெரிவித்த பின்வரும் கருத்தும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்:

லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலைக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முற்றாக பொறுப்புக்கூற வேண்டும். போர் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கழிந்த பின்னரும், நாட்டில் அமைதியை ஏற்படுத்த பாதுகாப்புச் செயலாளரால் முடியாது போயுள்ளது. -

ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவரால்கூட நாட்டில் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் இல்லை என்பது பாரதூரமான விடயம். -

அமைச்சர் மேர்வின் சில்வாவின் முட்டாள்தனமான செயற்பாடுகளுக்கு எதிராகவும் ஆளும் கட்சியினர் குரல் கொடுக்க வேண்டும் - என்று அவர் வலியுறுத்தி உள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்துக் கருத்து வெளியிட்ட அரசின் சிரேஷ்ட அமைச்சரும் இடதுசாரித் தலைவருமான டியூ குணசேகரா -

பாதாளக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் அரசியலுக்கு வந்தால் நாட்டில் இவ்வாறான கொடூரச் சம்பவங்களே அரங்கேறும் எனத் தெரிவித்திருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இதுவரை காலமும் மாற்றுக் கட்சிக்காரருக்கு இடையே நடைபெற்ற தேர்தல் மோதல்கள், வன்செயல்கள் இப்போது ஒரே கட்சி ஆதரவாளர்களிடையே, அதுவும் ஆளும் கட்சியைச் சேர்ந்த இரண்டு கோஷ்டிகளிடையே நடைபெற்றிருப்பது நாட்டின் அரசியல் கலாசாரம் அதள பாதாளத்துக்குள் வீழ்ந்துவிட்டது என்பதனை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது. இது பெரும் வெட்கக் கேடானது. அரசுக்கு பெரும் அபகீர்த்தியை உண்டாக்கி உள்ளது. அதனை ஜனாதிபதியும் உணர்ந்திருக்கிறார்.

முல்லேரியாத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், அரசுக்கு மட்டுமன்றி அனைவருக்குமே பின்னடைவை உண்டாக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தெற்கில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நடைபெற்று அரச அரசியல்வாதி கொலையுண்டதும், மற்றவர் உயிர் ஆபத்துடன் இருப்பதும் அரசாங்கத்தைப் பல்வேறு காத்திரமான, காட்டமான நடவடிக்கைகளின் பக்கம் ஈர்த்துள்ளது; அவற்றை நடைமுறைப்படுத்தத் தூண்டியுள்ளது.

அரசியல்வாதிகள் தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பணிக்கமர்த்துவதை, அரசு உடனடியாகத் தடை செய்துள்ளது. அதுபோலவே அனுமதிப்பத்திரம் பெறாத ஆயுதங்களை எவரும் வைத்திருக்கக் கூடாது என்றும் தடை விதித்துள்ளது.

ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயுதக் குழுக்களிடம் உள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்த சிபார்சு, மாதங்கள் பல கடந்தோடியும், அதனைச் செயற்படுத்த வேண்டியவர்களின் கவனத்தை ஈர்த்ததாக இல்லை!

தனக்குத் தனக்கென்றால் சுளகு படக் படக்கென்று அடிப்பது போல, தெற்கின் அரசியல் தலைவர்கள் - அரசாங்கம் - முல்லேரியா வன்செயல் கண்டு துடிப்புடன் நடவடிக்கை எடுக்கிறது. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து ஆயுதங்களைக் களைவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்ததாக இல்லை. அது குறித்து, அரசு தனது கண்களை இறுக மூடிக் கொண்டுவிட்டதா, என்ன?

# ஆயிரம் பாடசாலை அபிவிருத்தியில் 40 பாடசாலைகளில் முதற்கட்டப்பணி



மஹிந்தவின் சிந்தனையின் கீழ் ஆயிரம் பாடசாலைகளைத் தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 120 பாடசாலைகளில் முதல் 40 பாடசாலைகள் 2012 ஆம் ஆண் டுக்குள் தரம் உயர்த்தப்படும் என்று வடமாகாண கல்வித் திட்டப் பணிப்பாளர் கே.ஜே.பிறட்லி தெரிவித்தார்.

ஆயிரம் பாடசாலைகளை அமுலாக்கும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஆளுநரின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மஹிந்தவின் சிந்தனையின் கீழ் ஆயிரம் பாடசாலைகளைத்தரம் உயர்த்தும் திட்டம் தொடர்பில் வடமாகாணத்தில் உள்ள 120 பாடசாலைகளில் 40 பாடசாலைகளை அடுத்த ஆண்டுக்குள் தரம் உயர்த்தப்படவுள்ளன.

இந்த நோக்கத்துடன் இலங்கை கல்வி அமைச்சில் இருந்து வடமாகாண ஆசிரியர் கல்விப் பணிப்பாளர் எஸ்.முரளிதரன் வடமாகாண கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர் ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

இரு பணிப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்ட 40 பாடசாலைகளையும் நேரடியாகப் பார்வையிட்டு முழு அபிவிருத்திகளையும் மேற்கொள்ளவுள்ளனர். அத்துடன் இரண்டாம் நிலைக்கல்வி தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இதற்காக முதற்கட்ட செயற்பாடாக 40 பாடசாலைகளுக்கும் நேரடியாக விஜயம் செய்து தேவைகளையும் பிரச்சினை களையும் கேட்டறிந்தனர். அத்துடன் வலயக் கல்வி பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களுடனும் கலந்துரையாடி ஒப்பந்தம் ஒன்றையும் கைச்சாத்திட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் வடமாகாணத்தில் உள்ள 40 பாடசாலைகளும் 2012 ஆம் ஆண்டு தேசிய அளவில் திட்டமிடப்படவுள்ளது.

தரமான 2 ஆம் நிலைக் கல்வியை அமுல்படுத்தும் போது பாடசாலைகளுடைய தேவைகள், விஞ்ஞான ஆய்வு கூடம்,தரமான நூலகம், விளையாட்டு மைதானம், விளையாட்டு செயற்பாட்டுக்குரிய கட்டுமான வசதிகள் என்பவற்றையும் இப்பாடசாலை வழங்கப்படவுள்ளது என்று மேலும் கூறப்பட்டது. (ம-311)

# நாவலப்பிட்டியில் இந்து எழுச்சி விழா

கொழும்பு நாவலப்பிட்டி இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் கதிரேசன் மண்டபத்தில் இந்து சமய எழுச்சி விழா நடைபெறவுள்ளது

எதிர்வரும் 23 ஆம் திகதி இதனை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்றத் தலைவர் எஸ். இராசேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதின முதல்வர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் உட்பட நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சைவ சமயத்தவர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-36)

# ஐந்து வலயங்களுக்கு வாகனங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.15

வடமாகாணத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களுக்கு மேலதிக வாகன வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், வலிகாமம், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய கல்வி வலயங்களுக்கே ஐந்து வாகனங்கள் கடந்த புதன்கிழமை கொழும்பில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களுக்கான இரண்டு வாகனங்களும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன. (த-26)

# கண்ணகை அம்மன் துறைக்கான இ.போ.ச.பஸ்சேவை நிறுத்தம்

## அனலைதீவு, எழுவைதீவு மக்கள் சிரமம்

ஊர்காவற்றுறை, ஒக்.15

அனலைதீவில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிப் புறப்படும் மூன்றாவது படகிலும் எழுவைதீவில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிப் புறப்படும் இரண்டாவது படகிலும் பயணிக்கும் மக்களின் வசதி கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் மேற்கொள்ளப்பட்டுவந்த பஸ் சேவை திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிக்குத் தனியார் பஸ் சேவை இடம்பெற்று வருகின்ற போதிலும் அவற்றில் பயணிகள் இடமின்றி நசிபட்டே பயணிக்க வேண்டியுள்ளதாகக் கூறப்பட்டது.

ஊர்காவற்றுறைக்கு 777 இலக்க வழியினூடான பஸ் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், ஏன் இலங்கைப் போக்குவரத்துச் சபை இவ்வாறு செயற்படுகின்றது என இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே கண்ணகை அம்மன் இறங்கு துறைக்குக் காலை 9.40 இற்கு வரும் எழுவை தீவு, அனலைதீவு மக்களுக்கு பொருத்த மான சேவைகளை இ.போ.ச வழங்க வேண்டும் என்று இப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாவசெல்வத்தைத் தொடர்புகொண்டு கேட்டபோது,

இந்த விடயம் தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. நான் யாழ். சாலை முகாமையாளராகப் பொறுப்பேற்று மூன்று தினங்களே கழிந்துள்ளன. எனினும் இன்று (நேற்று) தொடக்கம் அனலைதீவு, எழுவைதீவு மக்களின் நன்மை கருதி அந்தச் சேவையை மீண்டும் வழங்க ஏற்பாடு செய்யப்படும்- என்றார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கலாசார சீர்கேடுகளைத் தடுப்பதற்கு பாடசாலைகளில் "நிழல்களின் மாற்றம்" விழிப்புணர்வு

## அமெரிக்கத் தூதரகம் அனுசரணை வழங்குகிறது

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாணத்தில் அன்றாடம் அதிகரித்து வரும் இளம் வயதுக் கர்ப்பம், போதைப் பொருள் பாவனை, கலாசார சீர்கேடுகள் மற்றும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளால் ஏற்படும் விபரீதங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது.

''நிழல்களின் மாற்றம்'' என்ற பெயரில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நிகழ்சித் திட்டத்துக்கு இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அனுசரணை வழங்குகின்றது என்று இந்தத் திட்டத்தின் இணைப்பாளரும் ஏற்பாட்டாளருமான சுலோசனா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச மற்றும் தனிப்பட்ட அமைப்புக்களைச் சேர்ந்த ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி யாழ்ப்பாணத்தின் பாரம்பரியம், பண்பாடு மற்றும் கலாசாரத்தில் பெரிய சீரழிவுகள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் ஏற்படும் விபரீதங்களையும் பாதிப்புக்களையும் எவ்வாறு தடுப்பது, அவற்றிலிருந்து விடுபடுவது எப்படி என்ற வழிகாட்டல்களையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதே ''நிழல்களின் மாற்றம்'' நிகழ்சித் திட்டத்தின் நோக்கம்.

நாளை மறுதினம் 17 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் இது தொடர்பான பயிற்சிப் பட்டறைகளையும், கருத்தரங்குகளையும் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

கடந்த 30 வருட போர்ச் சூழலில் கட்டுப்பாடும், பாதுகாப்பும், சரியான வழிகாட்டலும் இல்லாமையே இளம் வயதுக் கர்ப்பங்கள் ஏற்படக் காரணமாக அமைகின்றன.

அறியாமையும் விளக்கம் இன்மையும் முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன. எனவே, பாடசாலை மாணவர்கள் மூலம் இந்தச் செய்தியையும், தற்காப்புக் கலையையும் மக்கள் மத்தில் கொண்டு செல்ல திட்டமிட்டுள்ளோம்.

''நிழலின் மாற்றங்கள்'' என்ற இந்த நிகழ்ச்சித் திட்டம் எந்த விதமான உரையாடல்களும் இன்றி அங்க அசைவுகள் மற்றும் அபிநயங்கள் மூலமாகவே வெளிப்படுத்தப்படும். கிட்டத்தட்ட வீதி நாடகங்களைப் போல் மேடை நிகழ்ச்சியாக இது அமையும். இந்த நிகழ்சித் திட்டத்தில் 14 வயது முதல் 25 வயதிலான இளம் பராயத்தினருக்கு பயிற்சிகள் அளிக்கப்படும்.

இளம்பராயக் கர்ப்பம், குடும்ப வன்முறை, போதைப் பொருள் பாவனை, தொலைக்காட்சிப் பாதிப்பு என்பன முக்கிய தொனிப் பொருளாக எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

இளம் வயதில் கர்ப்பம் அடைவதற்கு அடுத்ததாக குடும்ப வன்முறை, கணவன்மாரால் கொடுமைப்படுத்தப்படும் பெண்கள், பாடசாலை செல்லும் வயதில் உள்ள பிள்ளைகளை வீடுகளிலும் கடைகளிலும் வேலைக்கு அமர்த்தி துன்புறுத்தல், சில குழந்தைகள் பெற்றோர்களினாலேயே கொடுமைப்படுத்தப்பட்டுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இளைஞர்கள் இளம் பராயத்தில் ஏற்படும் கூடாத நட்புக்களால் போதைப் பொருள் பாவனைக்கு மட்டுமன்றி சட்ட விரோதமான நடவடிக்கைகளுடனும் தொடர்புடையவராகிவிடுகின்றனர்.

தொலைக்காட்சி நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களின் பாதிப்பு சில நல்ல குடும்பப் பெண்களையும் தடுமாற்றம் அடையச் செய்துள்ளது. இதனால் பல குடும்பத் தகராறுகள் நீதிமன்றம்வரை சென்று விவாகரத்துகளுக்கு வழியமைத்துள்ளன.

இவையெல்லாம் திருத்த முடியாததோ அல்லது நல்வழிப்படுத்த முடியாத ஒன்றோ அல்ல. ஆரம்பத்திலேயே இவை தொடர்பாகவும், இதனால் ஏற்படும் பின் விளைவுகள் தொடர்பாகவும் விளக்கமளித்துத் தெளிவுபடுத்தப்பட்டால் இவற்றில் இருந்து மீட்டு எடுக்க முடியும்.- என்று கூறினார்.

நாளை மறுதினம் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரை பாடசாலைகளில் பாடசாலை மாணவர்களுக்கான நிகழ்சிகள் இடம்பெறும்.

அதேவேளை பாடசாலைகளை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளுக்காக 18 ஆம் திகதி யாழ். அமெரிக்கன் கோணரில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை செயலமர்வும் 19 ஆம் திகதி யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் மாலை 3 மணி முதல் 4.30 மணிவரை ஒரு நிகழ்வும் நடத்தப்படவுள்ளன.

இதில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக சமூகம், புத்திஜீவிகள், இளைஞர், யுவதிகள் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ளலாம். (ம-2)

# பார்வையற்றோருக்காக அனுதாபப்படாதீர் சமூகத்தில் அவர்களுக்கு மதிப்பளியுங்கள்



இன்று வெள்ளைப் பிரம்பு தினம். இந்த வெள்ளப் பிரம்பு 1931 ஆம் ஆண்டு அமெரிக்க இரினோய் மாவட்டத்திலுள்ள பியோரியா என்ற இடத்தில் முதன் முதலாக பார்வையற்றவர்களின் அடையாள சின்னமாகச் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டது.

இதற்கான முயற்சிகளை முன்னின்று மேற்கொண்டவர்கள் அந்த நாட்டு லயன்ஸ் கழகத்தினர்.

அதனைத் தொடர்ந்து ஏனைய ஒவ்வொரு நாடுகளும் ஒவ்வொன்றாக இந்த வெள்ளைப் பிரம்பைப் பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாக ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர்.

இன்று உலகம் முழுவதிலும் இந்த வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாகப் பாவனையிலுள்ளது.

வெள்ளை பிரம்பு என்றால் என்ன? அதனை யார் பாவிக்கிறார்கள் என்ற விளக்கம் இன்று கூடப் பலருக்குத் தெரியாது இருக்கிறது. இது மிகவும் கவலை தரக்கூடிய விடயமாகும்.

இது சாதாரண வெள்ளை நிற பிரம்பு மட்டுமே. இது நான்கு துண்டுகளாகக் காணப்படும். எடுத்து செல்லச் இலகுவாக அதனை நான்காக மடித்து கொள்ள முடியும். ஒருவர் வெள்ளைப் பிரம்பை வைத்திருந்தால் அவர் பார்வையற்றவர் அல்லது பார்வைக் குறைபாடுடையவர் என்று நாம் அனைவரும் அவர்களை அடையாளம் கண்டு கொள்ள வேண்டியது எமது கடமையாகும். அவர்களைக் கண்டால் அவர்களுக்கு உதவ வேண்டும். அவர்கள் வெள்ளைப் பிரம்பை தட்டித் தட்டிப் போகிறார்கள் தானே போகட்டும் என்று அலட்சியம் செய்யாமல் அவர்கள் வீதியைக் கடக்க உதவ வேண்டும்.

வெள்ளைப் பிரம்பை இரண்டாக மடித்து வீதியின் குறுக்கே காட்டினால் அவர்கள் வீதியைக் கடக்கப் போகிறார்கள் என்று அர்த்தம். அதனைப் பார்வையுள்ளவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். பல பார்வையற்றவர்கள் வீதியைக் கடக்க முடியாது பல நேரம் காத்து நிற்க வேண்டிய நிலை கூட காணப்படுகிறது.

அவர்களுக்கு நாம் உதவி செய்தால் அவர்கள் இலகுவில் வீதியை கடந்து தமது தேவைகளை உரிய நேரத்துக்குச் செய்ய வசதியாக இருக்கும். வெள்ளைப் பிரம்பை நான்காக மடித்து உயர்த்திக் காட்டினார்கள் என்றால் அவர்கள் வரும் வாகனத்தை மறிக்கிறார்கள் என்று அர்த்தம்.

சட்டத்துக்காக மட்டுமன்றி நாம் மனிதர்கள் மனிதாபிமான ரீதியாலாவது சிந்தித்து அதன் அடிப்படையிலாவது வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்வோருக்கு உதவ முன்வர வேண்டும்.

உதவிகள் செய்யாது விடினும் அவர்களுக்கு உபத்திரவம் கொடுக்காது இருக்க வேண்டும். இடையூறுகள் விளைவிக்காது இருக்க வேண்டும்.

வெள்ளைப் பிரம்பை கொண்டு செல்பவர்களுக்குப் பல உரிமைகள் இருக்கின்றன.

1. வீதியில் நடந்து செல்லும் போது மற்றவர்கள் ஒதுங்கி வழி விட்டு செல்லவேண்டும்.

2. வீதியை கடக்கும் வேளை வாகன சாரதிகளும் பாதசாரிகளும் அவர்கள் மீது அக்கறை காட்டி உதவ வேண்டும்.

3. ஏந்தவொரு பொதுப் போக்குவரத்து வாகனத்தையும் எந்த இடத்திலும் மறிக்கவோ ஏறிக் கொள்ளவோ உரிமையுண்டு.

4. வெள்ளைப் பிரம்போடு செல்லும் ஒருவருக்கு யாதேனும் விபத்து எற்பட்டால் விபத்தை ஏற்படுத்தியவருக்கு அதிக பட்ச தண்டனை வழங்குவதற்குச் சட்டத்தில் இடமுண்டு.

விழிப்புலனற்றவர்களைக் கண்டால் அவர்களுக்கு உதவுங்கள்.

அவர்கள் பாதையில் பயணிக்கும் போது சிரமமின்றிப் பயணத்தை மேற்கொள்ள உதவுங்கள்.

இன்று மட்டுமன்றி எந்த நாளும் நாங்கள் அவர்களுக்கு உதவுவோம் என்று ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்ளுவோம்.

இந்த வெள்ளைப் பிரம்பை பார்வையற்றோர் மட்டுமன்றி பார்வைக் குறைபாடுடையவர்களும் பாவிக்கலாம்.

இவர்கள் பார்வைக் குறைபாடுடையவர்கள் மட்டுமே தவிர அவர்கள் வேறு எந்த குறையும் அற்றவர்கள். அவர்களைப் பார்த்து அனுதாபப்படாதீர்கள் சமூகத்தில் அவர்களுக்கு மதிப்பளியுங்கள்.

அவர்கள் தமது சொந்தக் காலில் நின்று உயர எங்களால் ஆன உதவிகளை ஒவ்வொருவரும் வழங்க முன்வரவேண்டும். அவர்களுக்கு உள்ள திறனை நாம் எவ்வாறு வெளியில் கொண்டுவர முடியும் என்று நாம் சிந்தித்து உதவவேண்டும். அவர்களுக்குரிய சுயதொழில்களை ஏற்படுத்திக் கொடுக்க உரிய அதிகாரிகள் இந்த நாளில் முன்வரவேண்டும்.

ஒருவர் கைத்திறன் நன்றாகச் செய்கிறார் என்றால் அவருக்கு அதனை எவ்வாறு விருத்தி செய்ய உதவலாம்? அதனை கொண்டு அவரின் எதிர்காலத்தை முன்னேற வாயப்புக்கள் உள்ளதா? அதற்கு என்ன செய்யலாம்? எவ்வாறு உதவிகளை பெற்றுக் கொடுக்கலாம்? என்று சிந்திக்கவேண்டும்.

அவர் செய்திருக்கிறார். நாம் பாராட்டுகிறோம். அதைப் பற்றி கதைக்கிறோம். அத்துடன் அது நின்றுவிடும். அந்தப் பாராட்டு அவர்களது எதிர்காலத்துக்கு உதவுமா என்று சிந்தியுங்கள்.

ஒருவர் பாடுகிறார், அதனை கேட்கிறார்கள், கை தட்டுகிறார்கள், கை கொடுக்கிறார்கள். அது அவரின் எதிர்காலத்துக்கு உதவிடுமா? அவர்களுக்கு எதிர்காலம் ஒன்று இருக்கிறது அதனை எவ்வாறு நாம் ஏற்படுத்திக் கொடுப்பது. அவர்களும் தம் வாழ்வில் உயர வேண்டும் என்று சிந்திப்போம்.

சிந்தித்துக் கதைத்தால் மட்டும் அது செயல் வடிவம் ஆகாது எவ்வாறு செயற்படுத்துவது. எவ்வாறான உதவிகளை வழங்கலாம் என்று சிந்திக்கவேண்டும்.

**சுபா, மானிப்பாய்**

தினங்களைக் கொண்டாடுவதில் மட்டும் சந்தோசமில்லை. ஆதனால் அவர்களை சந்தோசப் படுத்த முடியாது.

அவர்களுக்கான சுயதொழில்களை ஏற்படுத்தி கொடுப்பதிலும் தான் இருக்கிறது அவர்களது சந்தோசம்.

விழிப்புலனற்றவர்களுக்கு உதவுவோம். அவர்களையும் வாழ்வில் உயர்த்திடுவோம் என்று வெள்ளைப் பிரம்பு தினமாகிய இன்று உறுதிகொள்வோம்.

## வெள்ளைப் பிரம்பு தின செய்தி

உலகெங்கும் பரந்து வாழும் விழிப்புல வலுவிழந்த உடன் பிறப்புக்களே, முதற்கண் உங்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த வெள்ளைப் பிரம்பு தின வாழ்த்துக்கள். விழிக்குறை ஒளிமயமான வாழ்வுக்கு ஒரு போதும் தடையன்று. நம் அக விழிகள் ஒளி பெற்றுப்பிரகாசிக்கும் போது புற விழிகளில் நிலவும் இருள் [illegible] துயரங்களும் தடைகளும் துச்சமாய், தூசியாய்ப் போய் விடும்.

''அறிவுடையோர் அனைத்தும் உடையோர்'' என்ற இன்றைய அகிலத்தின் சித்தாந்தத்தை உங்கள் மனங்களில் ஆழப் பதித்துக் கொள்ளுங்கள். உங்கள் அறிவுப் பரப்பை விசாலித்துக் கொள்வதற்கு அனைத்து வழிகளிலும் முயலுங்கள். புதிது புதிதாய்க் கற்றுக்கொள்ளுங்கள், புதிய புதிய துறைகளில் பிரவேசியுங்கள். தேங்கிய குட்டையாய் இல்லாமல் தெளிந்த ஆறாய் உங்கள் வாழ்வை மாற்றிக் கொள்ளுங்கள்.

அதேவேளை, வாழ்வில் நீங்கள் கண்ட உயர்வை, வெற்றியை உங்கள் உடன் பிறப்புக்களும் காண வேண்டுமென ஒரு கணமேனும் சிந்தியுங்கள், செயற்படுங்கள். நிச்சயம் வளமான வாழ்வு உங்கள் வசமாகும்.



ஆ.ரவீந்திரன்,
தலைவர்,வார்வகர், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் அரச ஊழியர் தங்குவதற்கு ரத்மலானையில் நவீன வசதியுடன் விடுதி

யாழ்ப்பாணம்,ஒக்.15

இந்தியாவில் டில்லி, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் அரசு அலுவலர்கள் தங்குவதற்கு ''அரசு இல்லம்'' இருப்பது போன்று வடமாகாண அரச ஊழியர்கள் தங்குவதற்கு நவீன விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இது அபிவிருத்தியின் ஒரு படிக்கல்லாகும்.

இவ்வாறு வடக்கு மாகாணப் பொதுநிர்வாகப் பிரதி பிரதம செயலாளர் இராஜநாயகம் தெரிவித்தார். வடக்கு மாகாண அரச அலுவலர்களுக்கான விடுதியை வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி இரத்மலானையில் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தலைமை தாங்கிய பொதுநிர்வாகப் பிரதிப் பிரதம செயலாளர் தி.இராஜ நாயகம் மேலும் தெரிவிக்கையில்;

நீண்ட கால முயற்சியின் பின்னர் வடக்கு மாகாண அலுவலர்களுக்கான விடுதி வசதியளிப்புத் திட்டம் நிறைவேறியுள்ளது.

வடக்கு மாகாண அரச அலுவலர்கள் கடந்த காலங்களில் பெருமளவு பணம் செலவழித்துக் கொழும்பில் விடுதிகளில் தங்கித் தமது கடமைகளை நிறைவேற்றினர்.

இவ்வாறான ஒரு நெருக்கடியை நீக்கும் முகமாக வடக்கு மாகாணத்துக்கென 45 மில்லியன் ரூபா செலவில் விடுதி வசதி எமக்குக் கிடைத்துள்ளது.

இந்தத் திட்டம் முழுமையாக முன்னேற வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண முன்னாள் ஆளுநரின் செயலாளர் சி.ரங்கராஜன், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி ஆகியோர் முன்னின்று செயற்பட்டுள்ளனர்-என்றார். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி சிறப்புரை ஆற்றினார். (ம-302)

# நிறுத்தல் அளவைப் பகுதியினர் சந்தைகளில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்.குடாநாட்டின் பிரதான மரக்கறிச் சந்தைகள் மீது யாழ். செயலக நிறுத்தல் அளவைப் பகுதியினர் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

மருதனார் மடம், சுன்னாகம், சாவகச்சேரி, கொடிகாமம், திருநெல்வேலி போன்ற பிரதான சந்தைகளில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளின் நிறுத்தல் அளவைக் கருவிகளே இதன் போது திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது நிறுத்தல் அளவைக் கருவிகள், தராசுகளின் படிகள் ஆகியவற்றுக்கு இவ்வாண்டுக்கான முத்திரையிடாத வியாபாரிகள் பலர் அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டனர்.

இவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டதாக யாழ். செயலக நிறுத்தல் அளவைகள் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ். கிருஷ்ணதாசன் தெரிவித்தார். (த-26)

# குடாநாட்டில் 5 தபாலகங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ். குடாநாட்டில் ஐந்து தபாலகங்களைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபர் என்.இரத்தின சிங்கம் தெரிவித்தார்.

சங்கானை, அச்சுவேலி, வட்டுக்கோட்டை, சுண்டிக்குளி, பருத்தித்துறை ஆகிய ஐந்து தபாலகங்களும் விரைவில் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த ஐந்து தபாலகங்களுக்கும் கட்டடங்களைப் புனரமைப்பதற்குரிய நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவுள்ளது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை- சுண்டிக் குழித் தபாலகம் பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்தத் தபாலகத்தின் கூரைகள் சேதமடைந்துள்ளமையால் மழை காலங்களில் மழை நீர் உட்புகுந்து கொள்வதால் தபாலகப் பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (த-26)

# 9 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் வடமராட்சி கிழக்கில் வேலைத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.15

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் வடமாராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 9 லட்சத்து 75ஆயிரம் ரூபா செலவில் 12 வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மணற்காடு வீட்டுத்திட்டத்துக்கான மின் விநியோகம் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குடத்தனை தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்தி வேலைகள் ஒரு லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தரவை சனசமூக நிலையத்திற்கான கணினி அறை வேலைகள் 75 ஆயிரம் ரூபா செலவிலும், குடத்தனை தமிழ்கலவன் பாடசாலையின் கட்டடப் புனரமைப்புப் பணிகள் ஒரு லட்சம் ரூபா செலவிலும் வடமராட்சி கிழக்கு கலைவாணி கூட்டுறவு நிலைய வேலைகள் ஒரு லட்சம் ரூபா செலவிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

செல்வா கூட்டுறவு நிலைய வேலைகள் ஒரு லட்சம் ரூபா செலவில் ஆரம்பமாகவுள்ள துடன் ரம்போ விளையாட்டுக் கழகத்துக்கான விளையாட்டு உபகரணங்கள் 25 ஆயிரம் ரூபா செலவிலும், சிவனொளி விளையாட்டுக் கழகத்துக்கான விளையாட்டு உபகரணங்கள் 25 ஆயிரம் ரூபா செலவிலும், பாரதி விளையாட்டுக் கழகத்துக்கான விளையாட்டு உபகரணங்கள் ஒரு லட்சம் ரூபா செலவிலும், சக்திவேல் விளையாட்டுக்கழகத்துக்கான விளையாட்டு உபகரணங்கள் ஒரு லட்சம் ரூபா செலவிலும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் குடத்தனை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கான ஒலிபெருக்கி வசதி 25ஆயிரம் ரூபா செலவிலும், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கான அலுவலகத் தளபாடம் 50ஆயிரம் ரூபா செலவிலும் வழங்கப்படவுள்ளன. (த-319)

# யாழ்.ஆஸ்பத்திரிக்கு வந்தது 'அசோக் லேடன்'

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்.போதனா வைத்திய சாலைக்குப் பத்துச் சில்லுகள் கொண்ட 'அசோக் லேடன்' லொறி ஒன்று சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கொழும்பில் வைத்துக் கடந்த திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலை செயலாளரிடம் லொறியைக் கையளித்தார்.

மருத்து வகைகளை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கு இலகுவாகவும் மற்றும் வைத்தியசாலையின் ஏனைய பணிகளை இலகுவில் மேற்கொள்ளவும் இந்த லொறி பயன்படுத்தப்படும் என்று வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-4)

# எரிகாயங்களுக்கு உள்ளான பெண் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், ஒக்.15

எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் கடந்த 3ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை ஒரு மணி அளவில் மரணமடைந்துள்ளார். கரவெட்டி மேற்கைச் சேர்ந்த திருமதி காண்டிராஜா ராஜலக்சுமி (வயது-25) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு மரணமடந்துள்ளார். (த-78)

# விபத்தில் படுகாயமடைந்த சிறுவனுக்கு ஆரம்ப கட்டச் சிகிச்சை கூட இல்லை

## வைத்தியரின் அசமந்தம் குறித்து விசனம்

பூநகரி உழவு இயந்திரத்தினால் மோதுண்டு தலையில் பலத்த காயங்களுக்கு இலக்கான ஐந்து வயதுச்சிறுவனுக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பக் கட்டச் சிகிச்சை கூட வழங்காமல் அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதையிட்டு பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி பாடசாலைக்குச் சென்று விட்டு 11.30 மணிக்கு வீடு திரும்பிய சிறுவன் பக்கத்து வீட்டுச் சிறுவர்களுடன் விளையாடுவதற்காகச் சென்ற வேளையில் வேகமாக வந்த உழவு இயந்திரம் மோதி காயப்படுத்தியது.

தலையில் பலத்த காயங்களுக்கு இலக்கான பூநகரி செல்வபுரத்தைச் சேர்ந்த கேதீஸ்வரன் குயிலவன் (வயது-5) என்னும் சிறுவன் பூநகரி பிரதேச வைத்தியசாலையில் எந்தவொரு சிகிச்சையும் வழங்கப்படாமல் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ்மூலம் அனுப்பி வைக்கப்பட்டார்.

வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்ட சிறுவனுக்கு அங்கிருந்த வைத்திய அதிகாரி ஆரம்ப கட்ட சிகிச்சை ஏதும் வழங்காத நிலையில் அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லுமாறு பணித்துள்ளார்.

இந்தச் சிறுவனுக்கு சிகிச்சை ஏதும் வழங்கப்படாமல் அம்புலன்னில்அனுப்பி வைக்கப்படுவதை அறிந்த அங்கிருந்த பொதுமக்கள் வைத்தி யசாலை பொறுப்பதிகாரி சிறுவனுக்கு அன்புலன்ஸ் வைத்து ஆரம்ப கட்டச் சிகிச்சை மேற்கொண்ட பின்னர் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

பூநகரி வைத்தியசாலை உதவி மருத்துவ உத்தியோகத்தர் போன்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரியும் சிறுவனுக்கு சிகிச்சை அளித்து ஏனோ தானோ என செயற்பட்டது குறித்து பொது மக்களால் கவலை தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் த.குகதாஸ னிடம் தொடர்புகொண்டு கேட்ட போது அவர் இந்தவிடயம் தொடர்பாகக் கருத்துக்கூற மறுத்துவிட்டார். (த-207-14)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்று பாடசாலை அதிபர் சி.சிவநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரட்ணம், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (ம-207)

# மூடப்பட்ட சங்கக் கிளைகளைத் திறப்பதானால் ரூ.3 லட்சத்துக்கு மேல் வியாபாரம் கட்டாயம்

## உத்தரவாதம் கோருகிறார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

சண்டிலிப்பாய், ஒக்.15

வியாபாரமின்மை காரண மாக மூடப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளை மீண்டும் திறக்க வேண்டுமானால் மேற்படி கிளைகளில் மாதாந்தம் 3 லட்சம் ரூபாவுக்கு மேல் வியாபாரம் இடம்பெற வேண்டும்.

இந்த நிபந்தனையைச் சம்பந்தப்பட்ட பொதுச் சபை உறுப்பினர் ஏற்றுக் கொண்டால் மூடப்பட்ட கிளைகளைத் திறப்பதில் எந்தவித ஆட்சேபனையுமில்லை.

இவ்வாறு யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் மானிப்பாய் பல நோக் குக் கூட்டுறவுச் சங்கத்தின் [illegible] பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது கூறினார்.

சங்கத் தலைவர் அ.அப்புத்துரை தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் ஆணையாளர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

சங்கத்தின் கீழ் இயங்கி வரும் கிளைகளில் போதிய வியாபாரம் இடம்பெறாததால் சங்கத்துக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஊழியர்களின் வேதனம், கிளைகளின் வாடகைப் பணம் உட்பட மாதாந்தம் கொடுக்கப் படும் பணத்துக்கேற்றவாறு வியாபாரம் இடம்பெறுவதில்லை.

இதனால் சங்கத்தின் நன்மை கருதிப் பல கிளைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது.

மூடிய கிளைகளைத் திறக்கும் படி பொதுச்சபை உறுப்பினர் கேட்பதில் தவறில்லை. ஆனால் திறக்கப்படும் கிளைகளில் மாதாந்தம் 3 லட்சம் ரூபாவுக்கு மேல் வியாபாரம் நடக்க வேண்டும். இதற்கு அந்தந்தக் கிளைகளுடன் சம்பந்தப்பட்ட பொதுச் சபை உறுப்பினர் உத்தரவாதம் அளிக்க வேண்டும். பல வருடங்களாக அந்தந்தப் பகுதி மக்களின் நலன் கருதி 23 கிளைகளுடன் இயங்கிவந்த இந்தச் சங்கம், வியாபாரமின்மையால் 9 கிளைகள் மூடப்பட்டு 14 கிளைகளுடன் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
15 ஒக்ரோபர் 2011 சனிக்கிழமை

## இலங்கை-பிலிப்பைன்ஸுக்கு இடையில் விரைவில் நேரடி விமான சேவை

பிலிபைன்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் விரைவில் இதுகுறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

பிலிபைன்ஸுக்கான இலங்கைத் தூதர் நாவலகே பெனட்குரே பிலிபைன்ஸின் பெசே நகரில் வைத்து பிலிபைன்ஸ் உப ஜனாதிபதி ஜெஜொமர் சி.பினாயுடன் இது குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதேவேளை இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவை வலுப்படுத்த நேரடி விமான சேவை வழிவகுக்கும் என்று இலங்கைத் தூதர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் பிலிப்பைன்ஸிற்கும் இடையிலான நேரடி விமான சேவையொன்று இல்லை. இதனால் கட்டுநாயக்கவுக்கும் மணிலாவிற்கும் இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் ஊடாக ஒரு வாரத்திற்கு இரண்டு தொடக்கம் நான்கு விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படலாம் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. (வ)

## உலக அஞ்சல் தினப் போட்டியில் வடக்கில் நால்வருக்கு சிறப்பு விருது

யாழ்ப்பாணம், ஒக்.15

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வடமாகாணத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கு சிறந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.


பிரதம தபாலகத்துக்குக் கிடைத்த விருது

இதில் யாழ்.மாவட்டத்தில் இருந்து ஒருவரும், வவுனியாவில் இருந்து இருவரும் முல்லைத்தீவில் இருந்து ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சிறந்த உப அஞ்சல் அதிபராக திருமதி கே.வசந்தாதேவி (தொண்டமானாறு) இரண்டாம் இடத்தையும் சிறந்த அஞ்சலராக என்.தேவநாதன் (முல்லைத்தீவு அஞ்சலகம்) மூன்றாம் இடத்தையும், சிறந்த தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தராக எஸ். வேகாவனம் (வவுனியா அஞ்சலகம்) மூன்றாம் இடத்தையும் சிறந்த கோலவுடையாளர் (சீருடை) போட்டியில் எஸ்.ஜெகநாதன் (வவுனியா அஞ்சலகம்) இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (வ-26)

## மூளாயில் குரங்குகள் தொல்லை

சுழிபுரம், ஒக். 15

குரங்குக் கூட்டத்தின் தொல்லையால் மூளாய் கிராமத்தில் தினமும் பெரியளவில் நஷ்டம் ஏற்படுகின்றது.

வீட்டுக் கூரை ஒடுகளை எடுத்து எறிந்து பெரும் அட்டகாசம் செய்து வருகின்றன. நான்கு முதல் ஐந்து வரையான பெரிய குரங்குகள் கூட்டமாக வந்து வீடுகளின் கூரை மேல் ஏறி ஓடுகளை கழற்றி எறிந்து நஷ்டம் செய்கின்றன.

மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை, மூளாய் ஐக்கிய பரஸ்பர சங்கக்கூரைமுகட்டு ஓடுகள் கடந்த சனிக்கிழமைசேதம் செய்யப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் வெடிகொளுத்தி விரட்டும் போதும் அவை தப்பி ஓடி விடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-28)

# செய்தித் துளிகள்

15 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணத்தை சென்னைக்குக் கொண்டுசெல்ல முயற்சித்த இலங்கையர் ஒருவர் கடந்த புதன்கிழமை நள்ளிரவு கட்டுநாயக்க விமான நிலைத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

* * *

கொலன்னாவ மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் தொடர்ந்தும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். கொலன்னாவ சந்தியை அண்மித்த வீதியின் ஒரு பகுதி தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளது.

* * *

நாடு திரும்பியுள்ள அகதிகள், உறவினர் வீடுகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோர் மற்றும் மீள்குடியேற்றப்பட்டோர் ஆகியோருக்கு பிரஜாவுரிமை பெற்றுக்கொடுக்க நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

* * *

கடற்கொள்ளைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இலங்கை - அமெரிக்க கடற்படையினர் காலி துறைமுகத்தில் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

* * *

வெளிநாடுகளில் பணிபுரியும்போது பல்வேறு நோய்த்தாக்கங்களால் பாதிக்கப்படுபவர்களுக்கான காப்புறுதிக் கொடுப்பனவுத் திட்டம் விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

தேசியக் காப்புறுதி நிதியத்தின் விசேட பிரிவு ஒன்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் கடந்த புதன்கிழமை ஸ்தாபிக்கப்பட்டது.

* * *

ஆஸ்திரேலியாவுக்குப் படகுமூலம் செல்ல முயற்சித்தபோது கைதுசெய்யப்பட்ட நபர்களில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூவருக்கும் பிணை வழங்க நீதிமன்றும் அனுமதி மறுத்துள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட இவர்களை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் செல்ல முயற்சித்தபோது கைதுசெய்யப்பட்ட 39 பேரில் 33 பேருக்கு தலா 10 லட்சம் ரூபா வீதம் தனிநபர் பிணை வழங்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

* * *

லஞ்சம் பெறப்படுகின்றமை தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கான பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன என்று லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்தது. இதனால் விசாரணைகள் தாமதமடைகின்றன எனவும் அந்த ஆணைக் குழு குறிப்பிட்டது.

(வ-சி)



## 183 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் தங்கராசா நிரஞ்சன்

(முதலாம் வருட முகாமைத்துவபீட மாணவன், கொழும்பு பல்கலைக்கழகம்)

கடந்த (16.04.2011) சிவபதமடைந்த எமது மகனின் மரணச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலி மூலமும் வேறுபல வழிகளிலும் உதவியும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (15.10.2011) சனிக்கிழமை காலை 9 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக அன்பாக ஏற்றுக்கொள்ளவும்)

அப்பா, அம்மா, அண்ணா, தங்கராசா ஜெகசோதி, நிருபன்
(4 ஆம் வருட மாணவன், மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
குடும்பத்தினர்

953, கே.கே.எஸ்.வீதி, தட்டாதெரு.
ஸ்ரீ கண்ணன் நகைத்தொழிலகம், யாழ்ப்பாணம்.

அன்னை மடியில்:
12.09.1988

ஐயப்பன்அணைப்பில்:
16.04.2011



இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

V Care

DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic

தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது வவுனியா-19,20 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு-021-2220288.




V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.
Head Office Colombo - 011 4874854

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
07.04.1922

மறைவு:
26.09.2010



அமரர் அப்பாப்பிள்ளை பொன்னுத்துரை

ஒருவருடம் எமை ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்ட ஆண்டவனே
மீளாத்துயில் கொண்ட எம் அண்ணாவை
எம்மிடம் தந்துவிடு
விழித்திரையில் உன் விம்பம் ஒளிக்குதண்ணா
கண்ணீரின் நடுவினிலே உன் உருவம் ஆடுதண்ணா
சாவு என்ற சதிகாரர் விரித்த வலையினிலே
எங்கள் சந்தோசம் அனைத்தும் சமாதி ஆனது நீதனே

பலகோடி இன்பங்கள் இருந்தென்ன
பலநூறு உறவுகள் இருந்தென்ன
மகனே நீ பிரிந்த இடைவெளியை யார்தான் நிரப்புவாரோ
நித்தமும் தவிக்கின்றோம் நின் நினைவுகளில் நாம் நின்று
மாணம் ஏது உந்தனுக்கு
எங்களுடன் எப்போதும் வாழ்கின்ற நீதனே
பிரிந்த உன் ஆத்மா இறைவனின்
பாதார விந்தங்களில் சீர்பெற்று வாழ்க

கடந்த 26.09.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குல விளக்கு அமரர் அப்பாப்பிள்ளை பொன்னுத்துரை அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வு இன்று (15.10.2011) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு அனைவரும் வருகை தந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

39, இராவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியனம் கேட்டீர்களா?

மோசடி செய்வதற்கென்றே
பல கூட்டங்கள் இந்நாளில்..

இலங்கையில் 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட 'வைற் கொலர்' எனப்படும் வியர்வை சிந்தாது கஷ்டப்பட்டு உழைக்காது நாகரிகமான முறையில் மோசடி களில் ஈடுபடுவோர் உள்ளதாகப் பொலிஸ் தகவல் கள் தெரிவிக்கின்றன. கனவான்களைப் போன்று தோற்ற மளிக்கும் இவர்கள் பெரியளவில் மோசடி களில் ஈடுபடுவதாகவும், இந்தக் குற்றவாளிகளால் வருடாந் தம் 5 பில்லியன் ரூபா மோசடி செய்யப்படு வதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. இத்த கைய 'வைற் கொலர்' மோசடிக்காரர்கள் பற்றிய தகவல்களை அம்பலப்படுத்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள தாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வைற்கொலர்' ஜொப் என்பது கண்ணியத் தொழில்கள் என்று கருதப்படும்.சமூகத்தில் மதிப்பு மிக்க தொழில்கள் கண்ணியத் தொழில்களாகும். கண்ணியத் தொழில்களில் பிள்ளைகளை ஈடுபடுத் தவே ஒவ்வொரு பெற்றோரும் விரும்புவர். இந்தத் தொழில்களில் பலவும் வாண்மைத் தொழில்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. அத்தகைய தொழில் களில் ஈடுபட்டிருப்போருக்கு சமூக மதிப்பும் உள்ளது. ஆனால் சில பிரகிருதிகள் அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பானாம் என்ற நிலையில் தமது தொழிலைக் கேவலப்படுத் தும் வகையில் செயற்படுவர். அவ்வாறானவர்களால் தொழில்களின் சமூகப் பெறுமானம் குறைந்து, ஒட்டுமொத்தமாக அந்தத்தொழிலில் ஈடுபடுபவர்கள் எல்லோர் மீதும் சமூகம் சுட்டுவிரல் நீட்டும் நிலை ஏற்படுவது துர்ப்பாக்கியமானது.

மருத்துவத்துறையிலும் இத்தகைய மோசடிப்பேர் வழிகள் அதிகமாகும்.தனியார் வைத்தியசாலைகள் பலவற்றை ஆயுள்வேத வைத்தியப் பயிற்சி பெற்ற பலர் நடத்துகின்றனர்.அவர்கள் ஆங்கில மருந்து களையே வழங்குகின்றனர்.அதைவிட எந்தப் பயிற்சியும் பெறாமலே பல வைத்தியசாலைகள் இயங்குகின்றன.

அரச செயலகத்தில் பிறப்பு,இறப்பு, விவாகச் சான்றிதழ்களையோ,காணி உறுதிப் பிரதிகளையோ பெறுவதற்குப் பலரும் தரகர்களையே நாடுகின்றனர். அவர்களும் மக்களின் அறிவின்மையைப் பயன்படுத்திப் பணமீட்டுகின்றனர். ஓர் பாடசாலையில் ஜீ.சீ.ஈ சாதாரண தர மாணவருக்கு தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக மாணவனொருவனின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தை உறுதிப் படுத்த வேண்டியிருந் தது. அப்போதுதான் அது பதிவு செய்யப்படாத பத்திரம் என்பது தெரிந்தது. வீட்டில் பிறந்த பிள்ளைக்கு அவ்வேளை பதிவு செய்யாமல் விட்டுவிட்டு, பின்னொரு காலத்தில் தரகர் மூலம் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறப்பட்டிருந்தது.நல்ல வேளை விட யத்துக்குப் பொறுப்பான ஆசிரியர் தலையிட்டு முறைப்படியாக காலங்கடந்த பிறப்புக்கு விண்ணப் பித்து ஆவன செய்தமையால் உண்மையான பத்திரம் பெறப்பட்டது.

இன்னொரு சம்பவம் சட்ட மோசடிக்காரர்களை வெளிப்படுத்துவதாகும்.ஒரு ஆசிரியத் தம்பதி தமக்கான காணியொன்றைக் கொள்வனவு செய்ய விரும்பியது.உரிமையாளர் உறுதிப் பிரதியை வழங்கினார்.அவர்கள் அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்த போது அது பதிவு செய்யப்படாதது தெரிந்தது.காணி, உரிமையாளரின் பெற்றோரின் பெயரில் இருந்தது. இதை எழுதிய சட்டத்தரணி இறந்து தசாப்தங்கள் கடந்து விட்டன.அவரை எழுப்பிக் கேட்கவும் முடியாது. அக்காணி தற்போதய உரிமையாளர்களுக்குச் சீதனமாக வழங்கப்பட்டதாகும். இப்போது வேறு சட்டமுறையாகக் காணியைப் பதிய நடவடிக்கை எடுத்துள்ளனர் வயோதிபர்களான காணி உரிமையாளர்கள்.

திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக் கொண் டேயிருக்குது.அதைச் சட்டம் போட்டுத் தடுக்குற கூட்டம் தடுத்துக் கொண்டேயிருக்குது.திருடனாப் பாத்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்று நம்ம தலைவன் வாத்தியார் படத்தில பாடினது இதுகளைக் கண்டுதானோ?

விழிச்சான் குஞ்சு.

# முல்லேரியா சம்பவம் குறித்து அரசு பாரபட்சமற்ற விசாரணை நடத்தும்

## இந்தியாவில் இருவர் கைது; ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.15

முல்லேரியாவில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம் பவம் குறித்து அரசு பாரபட் சமற்ற விசாரணைகளை நடத் தும். இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளவர்களெனக் கருதப்படும் இந்தியாவுக்குத் தப்பியோடிய இரண்டு சந்தேக நபர்களை பாதுகாப்புத்துறை யினர் கைதுசெய்துள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் குறித்து அரசு சட்டத்தின் பிர காரமே செயற்படும் என்பதால் முல்லேரியா சம்பவத்தால் அர சுக்கு எந்தவித தாக்கமும் ஏற் படாது.

- இவ்வாறு நேற்றுமுன் தினம் கருத்து வெளியிட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் காலை பத்திரிகை ஆசிரியர்களுடன் சந்திப் பொன்றை நடத்தியபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது:

சட்டவிரோத ஆயுதங்களைக் கண்டுபிடித்து கைப்பற்று வதற்காக இராணுவமும், விசேட அதிரடிப்படையும் இணைந்து தீவிர தேடுதல் வேட்டைகளை நடத்தவுள்ளன. இனிமேல் பாதுகாப்புத் தரப்பினர் சீருடை இல்லாமல் தமக்குரிய கடமை களில் ஈடுபடடியாது.

அதேபோல், முக்கிய அரசி யல் பிரமுகர்களிடம் பாதுகாப் புக் கடமைகளில் இருக்கும் அதிகாரிகள் தொடர்ந்து ஒரே இடத்தில் கடமையில் ஈடுபடக் கூடாது. எனவே, அண்மையில் இடம்பெற்ற முல்லேரியா துப் பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் நாம் சில முக்கிய தீர்மானங் களை எடுத்துள்ளோம்.

இந்தச் சம்பவம் குறித்து முழுமையான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. சந்தேகநபர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தி யாவுக்குத் தப்பியோடிய இரண்டு சந்தேகநபர்களைக் கைதுசெய் திருக்கிறோம்.

அவர்கள் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் ஆளுங் கட்சியின் பயணத்துக்கு எந்த வொரு தடையையும் ஏற்படுத் தாது. ஒருவரின் உயிரிழப்பு என்பது பாதிப்புத்தான் என்றாலும் இனிவரும் காலங்களில் நாம் இவ்வாறான மோதல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான அரசியல் கலா சாரம் மாற்றப்படவேண்டும். காலாகாலமாக இவ்வாறான மோதல்கள் இடம்பெறுகின் றன. முன்னைய காலங்களில் அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கு மிடையில்தான் இவ்வாறான மோதல்கள் இடம்பெற்றன. இப்போது ஒரே கட்சிக்குள் மோதல்கள் இடம்பெறுகின் றன.

விருப்பு வாக்கு முறைமை, சட்டவிரோத ஆயுதங்கள்தான் இவற்றுக்கு மூல காரணமாக இருக்கின்றன. ஆனால், ஆயுதம் எடுத்தவர்களுக்கு ஆயுதத் தினால்தான் சாவு என்பதை சொல்லிவைக்க விரும்புகி றேன்.

தேர்தலில் வேட்பாளர்களை நியமிக்கும்போது சரியான விடயங்கள் கவனத்திற்கொள் ளப்படவேண்டும் - என்றார் ஜனாதிபதி.

(ச- சி)

## அரசின் திட்டத்தில் மாற்றமில்லை என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஒக். 15

முக்கியமான மாநகரசபை களைக் கூட்டுத்தாபனமாக மாற் றும் அரசின் திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லையென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மாநகரசபைகள் தமது கடமை களைத் தொடர்ந்து செய்யவேண் டும். அரசும் தனது கடமையைச் செய்யும். முக்கியமான மாநகர சபைகளைக் கூட்டுத்தாபன மாக்க அரசு நடவடிக்கை எடுக்கு மென நாம் முன்னரே கூறியிருந் தோம் என்று அவர் தெரிவித் துள்ளார்.

இதன் பிரகாரம் தெஹிவளை - கல்கிசை மாநகரசபை, கோட்டே ஜயவர்தனபுர மாநகர சபை, கொழும்பு மாநகரசபை என்பன முதலில் கூட்டுத்தாபன மாக மாற்றப்படும். இப்படி மாற்றப்பட்டாலும் கூட மேயர் கள் மாறமாட்டார்கள். அவர் களின் அதிகாரங்கள் மாறா என்று அவர் தெரிவித்துள்ளார்.

### தோல்விக்குக் காரணம்?
#### சிரித்தார் மஹிந்த

நேற்றுமுன்தினம் அலரிமாளி கையில் ஜனாதிபதியைச் சந் தித்த பத்திரிகை ஆசிரியர்கள், கொழும்புத் தேர்தலில் ஆளுங் கட்சி தோல்வியடைந்தது ஏன் என்று கேட்டனர்.

இந்தத் தோல்விக்கு எது காரண மென நீங்கள் நினைக்கிறீர் களோ அதைத்தான் நானும் நினைக்கிறேன். கடைசி நேரத் தில் ரணில் வீதிக்கு இறங்கி ஓட்டோவில் போக ஆரம்பித்து [illegible] மேலும் தெரிவித்தார். (ச)



மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இலங்கை வந்த வியட்நாம் ஜனாதிபதி ட்ரேங் டென் செங் மற்றும் அவரது பாரியார் மெய் தாய் ஹன் உள்ளிட்ட குழுவினரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவும் அவரது பாரியாரும் அழைத்து வந்தனர்.

## தேர்தல் முறையில் மாற்றம் விரைவில் என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஒக். 15

தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரும் நடவடிக்கை விரைவில் பூர்த்தி அடையும் என தான் எதிர்பார்க்கிறார் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல நம்பிக்கை தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு கடந்த புதன்கிழமை. தகவல் திணைக்களத்தில் நடை பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

நாட்டில் நடைமுறையிலுள்ள தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவருவதற்கான திட்டம் பூர்த்தி அடையும் நிலையை மிகவும் நெருங்கி உள்ளது. நாடாளுமன்றத்தில் இரண்டா வது வாசிப்புக்கும் இது எடுத் துக் கொள்ளப்பட்டுள்ளது. ஒரு சில திருத்தங்கள் மேற்கொள் வதற்கான தாமதமே தற்போது நிலவுகின்றது.

எவ்வாறாயினும் வெகுவிரை வில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலான தேர்தல் முறை ஒன்று முன் வைக்கப்படும்.

தற்போதுள்ள தேர்தல் முறை யில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதை அனைத் துத் தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அத்துடன் அடுத்து வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது புதிய தேர்தல் முறை பெரும்பாலும் அமுல் படுத்தப்படலாம்- என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

ஒட்டுசுட்டானில் மீளக்குடியமர்ந்த மக்களின் மின்சாரம், கல்வி, சுகாதரம், விவசாயம், குடிதண்ணீர், பொதுச்சந்தை போன்ற அடிப்படைவசதிகள் முழுமையாக நிறைவேற்றப்படாத நிலையிலும் செயற்பாடுகள் குன்றிய நிலைலும் காணப்படுகின்றன. ஒவ்வொரு தேவையையும் தனித் தனியாக நாம் பார்ப்போமாயின்:

**மின்சாரம்**

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 80 வீதமான மக்கள் விவசாயிகளாகவும் 20 வீதமானவர்கள் தச்சுத் தொழில் செய்பவர்களாகவும் மற்றும் கணினிப் பயிற்சி பயிற்றுவிப்பாளர்களாகவும் இருப்பவர்கள். மின்சாரத்தை உபயோகித்துப் பல வேலைகளைச் செய்கின்றனர். இந்த நிலையில் மின்சாரம் இதுவரை வழங்கப்படாத காரணத்தால் மக்களது சுயவேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இதுமட்டுமல்ல கல்விக் கூடங்களில் வழங்கப்பட்ட கணினிச் சாதனங்கள் மின்சாரம் இன்றி முடங்கிக் கிடக்கின்றன. அத்துடன் கல்வி கற்கும் மாணவர்கள் கல்வியை வ்சதியாகக் கற்றுக் கொள்ள முடியவில்லை. ஒட்டுமொத்தமாகத் தற்போது நடைபெறும் விஞ்ஞான உலகத்தில் மின்சாரம் கூடக் கிடைக்காத நிலையில் இந்தப் பிரதேச மக்கள் வாழ்வில் முன்னேற்றகரமான செயற்பாடுகளில் இறங்க முடியாமல் தவிக்கின்றனர்.

**கல்வி**

இந்தப்பிரதேசத்தில் கல்விக் கூடங்கள் யுத்த சூழ்நிலையின் பின் புனரமைக்கப்படாதநிலை காணப்படுகின்றது. தற்போதும் நிரந்தரக் கட்டடம் இல்லாமையால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. அத்துடன் பாடசாலை வளாகம் திறந்த வெளியாகச் சுற்றுப்புற வேலிகள் அமைக்கப்படாது கட்டாக்காலி கால்நடைகள் தங்கும் இடமாக உள்ளதோடு பாடசாலையூடாக பிரயாணங்களை மேற்கொள்வதனையும் அவ தானிக்க முடிகிறது. மேலும் பாடசாலையில் பொதுவிளையாட்டு மைதானம் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்படாததால் பல்வேறு விளையாட்டுக்களில் மாணவர்கள் பங்கு பற்ற முடிவதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக இந்தப் பிரதேசத்தில் நடைபெறும் முன்பள்ளிகள் யுத்தத்தால் சேதமடைந்து புனரமைக்கப்படாத நிலை காணப்படுவதால் சிறார்கள் மரங்களின் கீழும் கல்வி கற்கின்றனர்.

பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய கட்டாய தேவை ஒன்று உள்ளது. தொண்டர் ஆசிரியர்கள் ஊதியத்தை எதிர்பாராது ஆசிரியர்களுக்குச் சமமாகவும் அதற்கு மேலாகவும் தமது கிராம மாணவர் முன்னேற வேண்டுமென்ற பெருநோக்கோடு தம்மை முழுமையாகக் கற்பித்தலில் அர்ப்பணித்துள்ளனர். தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமையால் அவர்கள் மனத்தாங்கலுக்குள்ளாகி உள்ளனர்.இதனால்ஆசிரியர்கள்முழுமையாக தமது செயற்பாட்டில் அக்கறை காட்டாது செயற்பட்டதால் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 90 வீதமான மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை அடையமுடியாத நிலை காணப்பட்டது. ஆகவே தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்தை அரசு தாமதிக்காது வழங்கி சிறார்களின் கல்வியை மேம்படுத்த அக்கறை செலுத்த வேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**சுகாதாரம்**

ஒட்டுசுட்டான் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மீள் குடியமர்வதற்கு முன்பும் மீள்குடியமர்ந்த பின்பும் வைத்தியசாலை வசதிகள் கிடைக்கவில்லை. இங்குள்ள மக்கள் வறுமை நிலையில் உள்ள மக்கள். அத்துடன் செடிகள், பற்றைகள் நிறைந்த இடங்களில் வாழ்பவர்கள். அவர்களுக்கு நோய் ஏற்பட்டால் அதற்கான மருத்துவ வசதிகளைப் பெற வசதிகள் கொண்ட வைத்தியசாலைகள் மிக முக்கியமானதொன்றாகும். அத்துடன் கர்ப்பிணித் தாய்மார்களின் பிரசவத்தின்போது வைத்தியசாலையில் தங்கி நிற்கக் கூடிய வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைகள் அமைக்கப்பட வேண்டும். 24 மணித்தியாலமும் சிகிச்சை பெறக்கூடிய நிலையில் இங்கு வைத்தியர்களை நியமிக்க வேண்டும். தற்போது கூட நாடளாவிய ரீதியில் சுகாதார்வாரம் நடைபெற்று வருகிறது. ஆனால், எமது பிரதேசசபையினரால் சுகாதாரவாரம் கடைப்பிடிக்கப் படவில்லை. அதனைப் பற்றிய எந்தவித சிந்தனையும் இல்லாமல் இருக்கின்றனர். ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்பட்ட போதிலும் அவசரத்துக்கு சிகிச்சை பெறமுடியாதுள்ளது. எனவேசகல வசதிகளும் கொண்ட வைத்திய சாலை இங்கு அமைக்கப்படுவது மிகப் பொருத்தமாகும்.

**விவசாயம்**

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 80-90 வீதமான மக்கள் விவசாயத் தொழிலையே கொண்டுள்ளனர். பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன்கட்டு குளம் காணப்படுகிறது. மேலும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் இங்கு காணப்படுகின்றன.

ஆனால் சிறிய நீர்ப்பாசனக் குளங்களில் சில புனரமைக்கப் படாமல் உள்ளன. தற்போது 2 ஆயிரம் குளத் திருத்தத் திட்டத்தின்கீழ் சில குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன்கட்டு குளத்துக்கு மிக நீண்ட காலமாகத் திருத்த வேலைக்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறாததால் குளத்துடன் சம்பந்தப்பட்ட வேலைகள் மற்றும் அதன்கீழ் உள்ள வாய்க்கால்கள் வேலைகள் யாவும் 35-40 வருடங்களாகத் திருத்தப்படாது இடிந்தும் தூர்ந்தும் காணப்படுகின்றன. சரியான முறையில் நீர் முகாமைத்துவத்தைப் பேணி ஒழுங்காக நீர் பாய்ச்ச முடிவதில்லை. சில வாய்க்கால்கள் முற்றாகத் தடைப்பட்டதுடன் அங்கு வாழ்ந்து பயிர் செய்த மக்கள் வேறு இடம் சென்றுள்ளனர். வாய்க்கால்கள் பல தூர்ந்து போகும் நிலையில் உள்ளன. குளத்தின் கொள்ளளவு 22 அடியாக இருந்தபோதும செய்கைக் காணிகள் எவ்வளவோ இருந்த போதும் செய்கை பண்ணக் கூடிய நிலையில் பெருங் காடுகளாகவும் பற்றைகளாகவும் மரங்கள் வளர்ந்துள்ளன. மக்கள் வாழ்ந்த இடங்களில் பயன்தரு மரங்களான தென்னை, பலா, தேசி போன்ற பல பயிர்களைக் காடுகளின் மத்தியில் காணலாம். இதற்கு உதாரணமாக பரசங்குளம் என்னும் கிராமம் இப்போது மக்களே இல்லாத காடாக மாறியுள்ளது. இந்தக் காடுகளை அழித்து மீண்டும் மக்கள் குடியமர வசதிகள் செய்யப்பட வேண்டும். சிறு குளங்களுக்குக் கீழ் உள்ள வாய்க்கால்கள்திருத்தப்பட வேண்டும். வாய்க்கால்கள் திருத்தப்பட்டால் நீர்ப் பாய்ச்சல் இலகுவாகுவதுடன் நீரை வீண்விரயம் இல்லாதுதடுக்க முடியும். அத்துடன் இந்தப் பிரதேசத்தில் சிற்றாறுகள் ஓடுகின்றன. அவற்றில்சிலவற்றைதடுத்து அதன் பக்கத்தில் உள்ள காணிகளுக்கு நீரை வழங்கினால் அதிகமான மக்கள்பயன் பெறுவர். வறுமை நிலையும் ஒழிக்கப்பட்டு அனைவரும் விவசாயத்தில் ஈடுபட வாய்ப் பளிக்கும் என்பது உண்மை.

**வீதி**

கடந்த 30 வருடங்களுக்கு மேல் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் எந்த வீதியும் புனரமைக்கப்படாது மக்கள் பெரும் சிரமத்தில் பயணத்தை மேற் கொண்டனர். விடுதலைப் புலிகள் காலத்தில் கிரவல்கள் பரவியும் பிரதான வீதிகள் குழிகள் நிரப்பப்பட்டும் வீதி வேலைகள் மேற் கொள்ளப்பட்டன. கடந்த காலங்களில் பிரதேச சபையினரால் நிர்வகித்துச் சிறந்த சிறுவீதிகளாகப் போக்குவரத்துக்குப் பயன்பட்டன. அத்துடன் விவசாயக் காணிகளுக்குச் செல்லக் கூடிய விவசாயப் பாதைகள் எனப் பல பாதைகள் அமைத்து மக்களின் பாவனைக்கு இலகுவாக்கப்பட்டது. ஆனால் தற்போது பிரதேச சபை நிர்வகித்து வந்த ஒழுங்கைகள் பாவனையின்றியும் திருத்தப்படாமலும் இருக்கின்ற நிலையில் அதனூடாகப் போக்குவரத்துக்கள் செய்ய முடியாத நிலை காணப்படுவதால் சிலருடைய காணிகள் ஊடாகப் போக்குவரத்தைச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர். *(தொடரும்)*

இராஜ் தனபால்

உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...

City & Guilds

சர்வதேச அங்கீகாரம் பெற்ற

Engineering Qualifications



Civil Engineering | Quantity Surveying | Electrical & Electronics | Motor Vehicle | Mechanical



City & Guilds Progression Path

- Postgraduate Diploma Level (IVQ Level 7) 12 months
- Professional Engineer (Equivalent to BEng-UK)
- Graduate Diploma Level (IVQ Level 6) 12 months → JOB
- NCT/NCIT → Advanced Diploma Level (IVQ Level 5) 12 months → JOB
- A/L → Diploma Level (IVQ Level 3) 12 months → JOB
- O/L → Certificate Level (IVQ Level 2) 5 months

City and Guilds UK
பொறியியல் பாடநெறிகளை
A/L வர்த்தகப் பிரிவு, கலைப் பிரிவு மாணவர்கள்
Certificate மட்டத்திலிருந்தும்,
கணிதப் பிரிவு,
விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்
Diploma மட்டத்திலிருந்தும் தொடரலாம்

Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது

0214 66 66 99 / 0771 067 394


SIPL JOB NETWORK | LEARNING PLUS | WORK PLACE LEARNING

SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

Colombo | Kandy | Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைபாடுகளுடன் மன்னார் பொது விளையாட்டரங்கு; மலசலகூட சிக்கலால் அயல் வீடுகளுக்கு ஓடும் வீரர்கள்



மன்னார்,ஒக்.15

மன்னார் பொது விளையாட்டு மைதானம் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதால் விளையாட்டு வீரர்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் நகரப் பகுதியில் அமைந்துள்ள ஒரேயொரு பெரிய விளையாட்டு மைதானமாக இது விளங்குகின்றது. இதனால் மன்னாரில் இடம் பெறுகின்ற முக்கிய விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் என்பன இந்த மைதானத்திலேயே இடம்பெறுகின்றன. ஆனால் இங்கே உரிய வசதிகள் எதுவும் இல்லாததால் இந்த மைதானத்தை உபயோகிப்பவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக இந்த மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆண், பெண்களுக்கான மலசல கூடங்கள் பாவனைக்குதவாத நிலையில் மிக மோசமாகக் காட்சியளிக்கின்றன.

இவற்றைப் பார்ப்பதற்கே அருவருப்பாக உள்ளதால் இவற்றின் பக்கம் எவருமே திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை.

அத்துடன் மைதானத்தை உபயோகிக்கும் ஆண், பெண் விளையாட்டு வீரர்கள் மைதானத்துக்கு அருகிலுள்ள வீடுகளையே தமது இயற்கைக் கடன்களுக்காகப் பயன்படுத்துகின்றனர். இதனால் சில வேளைகளில் தேவையற்ற பிரச்சினைகளும் தோன்றுகின்றன.

அத்துடன் வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தரும் விளையாட்டு வீரர்களின் நிலை தான் பரிதாபகரமானதாக உள்ளது.

எனவே இந்த மைதானத்துக்குப் பொறுப்பானவர்கள் இனியும் அக்கறையின்றி இருக்காது இதிலுள்ள குறைபாடுகளை அகற்றி விளையாட்டு வீரர்கள் எந்தவிதக் குறைகளுமின்றித் தமது விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு உதவ வேண்டுமென்பதே மன்னார் மக்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது. (க-601)

# டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் விசேட வேலைத்திட்டம் மன்னாரில்

மன்னார், ஒக். 15

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நுளம்பை முற்றாக ஒழிக்கும் செயற்றிட்டத்தைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டெங்கு நுளம்பை முற்றாக ஒழிக்கும் முகமாக வீடுகளைப் பரிசோதனை செய்யும் வேலைத்திட்டம் ஒன்றைப் பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

இதன் ஆரம்ப நிகழ்வு மன்னார் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி விஜயசிங்க, பிரதான பொலிஸ் பரிசோதகர் சி.ஐ.அத்துகோரல, மன்னார் வைத்தியசாலை அத்தியட்சகர் எம்.எச்.எம்.அசாத், மன்னார் நகரசபைச் செயலாளர் குரூஸ், மன்னார் மாவட்ட உதவிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அரவிந்தன் மற்றும் நூற்றுக்கணக்கான பொலிஸார் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது இவ் வேலைத்திட்டம் தொடர்பாக பொலிஸாருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

பொலிஸாரின் இத்தகைய முன்மாதிரியான செயற்பாடுகள் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுமென பலரும் தெரிவித்துள்ளனர். (க-601)

# ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலையில் சிறப்பான ஆசிரியர் தின நிகழ்வு

அக்கராயன், ஒக். 15

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலையில் ஆசிரியர் தின நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற் றுள்ளன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ந.சௌந்தரராசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்துவரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் ஆசியுரையினை அக்கராயன் மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ச.பாஸ்கரன் நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் எஸ்.சபாரட்ணம், அக்கராயன் கிராம அலுவலர் கு.துஷ்யந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

பெற்றோர் சார்பில் சுதாயினி உரை நிகழ்த்தினார். ஆசிரியர்களுக்கு அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் ஸ்கந்தபுரம் கிராம மக்கள் பெருமளவில் கலந்துகொண்டமை விழா ஏற்பாட்டாளர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியது.

மேலும் ஆசிரியர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளில் சிறப்புடன் ஈடுபடுவதற்கு இந்த நிகழ்வு உந்துதலை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-410)

# உள நல விழா

கிளிநொச்சி, ஒக்.15

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் உலக உள நலவிழா சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வைத்திய அதிகாரிகளின் உரைகள் இடம்பெற்றன. அத்துடன் வைத்திய சாலையில் கடமை புரிபவர்கள் இசை நிகழ்வுகளை நடத்தினர்.

இந்த நிகழ்வில் வைத்திய சாலைச் சமூகத்தினரும் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் பொதுமக்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். (க)

# பூநகரி பிரதேச விவசாயிகளுக்கு மானிய விலையில் உர விநியோகம்

பூநகரி, ஒக்.15

பூநகரிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விவசாயத்துக்கான மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறையில் ஆலங்கேணி கமக்கார அமைப்பு, நல்லூர் கமக்கார அமைப்பு, சாமிப்புலம் கமக்கார அமைப்பு, கௌதாரிமுனை கமக்கார அமைப்பு, பள்ளிக்குடா கமக்கார அமைப்பு, சின்னப்பல்லவராயன்கட்டு கமக்கார அமைப்பு ஆகியவற்றுக்கு ஒழுங்கு முறைப்படி உரவகைகள் வழங்கப்படும் எனவும் வழங்கலுக்குரிய திகதியை 0773655147 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்றும் பூநகரி கமநலசேவை நிலையம் அறிவித்துள்ளது. (எ)

# வவுனியா தமிழ் வித்தியாலயத்திலிருந்து சித்திபெற்ற மாணவர்களுக்கு கௌரவம்



வவுனியா,ஒக்.15

வவுனியா தமிழ் வித்தியாலயத்தில் இருந்து கடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் முகமாக பரிசளிப்பு விழாவும் பாராட்டு வைபவமும் நடைபெற்றுள்ளன.

இந்த வைபவம் கடந்த 30 ஆம் திகதி மேற்படி பாடசாலையின் ஐயாத்துரை மண்டபத்தில் நடைபெற்றது. வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ப.சத்தியலிங்கம் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜ், வவுனியா நகரசபை உப தலைவர் எம்.எம். ரதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வுக்கு முன்னதாக விருந்தினர்கள், பாடசாலை அதிபர் ம.ச.பத்மநாதன், பாடசாலையின் ஆரம்பப் பிரிவு அதிபர் ந.ச.செல்வரத்தினம் தரம் ஐந்தில் கற்பித்த ஆசிரிய, ஆசிரியைகளான சிவப்பிரகாசம், ரூபன், கந்தையா செல்வகுமார், ஞானசுந்தரம், ஐங்கரன், திருமதி ராஜினி மன்றுளாடி, திருமதி மஞ்சுளா இரவீந்திரன் ஆகியோருடன் பிரதி அதிபர்கள், தர இணைப்பாளர்கள், ஆசிரியர்கள், சித்தியடைந்த மாணவர்கள் ஆகியோர் பாண்ட் வாத்திய இசையுடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பாடசாலை மட்டத்தில் முதலாவது இடத்தையும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்ற வடிவேல் ஹர்சனும் ஏனைய சித்தியடைந்த மாணவர்களும் பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (க-431)

# அக்கராயன்குளத்தின் கீழ் 3, 600 ஏக்கரில் நெற்செய்கை

அக்கராயன், ஒக்.15

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் 3 ஆயிரத்து 600 ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அக்கராயன் குளத்தின் கீழான காலபோக நெற்செய்கைக்கான கூட்டத்தில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்தக் குளத்தின் கீழான இறுதி விதைப்பு நாள் அடுத்த மாதம் 15 ஆம் திக்தியென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாய்க்கால்களைத் துப்புரவு செய்யும் இறுதிநாள் இந்த மாதம் 20 ஆம் திகதியாகும். மேலும் அக்கராயன் குளத்தின் கீழுள்ள முதல் நீர் வழங்கல் குளத்தில் 10 அடி நீர் வந்தடைந்த பின்னர் டிசெம்பர் முதலாம் திகதி குளத்தின் நீர் திறந்து விடப்படும்.

அறுவடை வேலைகள் யாவும் மார்ச் மாதம் முதலாம் திகதி முடிவுறுத்தப்பட வேண்டும்.

இதேவேளை இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் எதிர்வரும் மார்ச்மாதம் 31 ஆம் திகதிவரை கால்நடைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (க-410)

# கோவில்குளம் சிறுவர் இல்லத்தில் சிறப்பான முப்பெரும் விழாக்கள்



வவுனியா,ஒக்.15

வவுனியா கோவில் குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சிறுவர் இல்லத்தில் அதன் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் சர்வதேச சிறுவர் தின விழாவும் கொண்டாடப்பட்டுள்ளன.

கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சப்பிரகமுவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி நாகேஸ்வரன், வவுனியா நகரசபையின் உப- தலைவர் எம்.எம்.ரதன், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், அலுவலர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறுவர் மலர்ப் புத்தகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

இந்த இல்லம் 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேலும் வவுனியா கோவில் குளம் சிவன் ஆலயத்தின் நிதி உதவியுடன் இந்த இல்லம் இயங்கி வருகிறது. இங்கு போரால் தாய் தந்தையரை இழந்த 197 சிறுவர்கள் உள்ளனர். இவர்களுள் 64 பேர் ஆண்கள், 133 பேர் பெண்கள். இவர்களுக்கான விடுதிகள் தனித்தனியே உள்ளன. இந்தச் சிறுவர்கள் தரம் 1 தொடக்கம் ஜி.சி.ஈ. உயர் தரம்வரை கல்வி கற்கின்றனர். இந்தச் சிறுவர் இல்லத்தின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் போது தலைவரால் சில வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன.

அதில் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் மேலதிக கட்டட வசதிகள் , சிறுவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங் கள் மற்றும் வசதிகள் என்பன அடங்கியிருந்தன. (க-431)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவையினங்கள்



**மிகப் பெரிய பறவை:**

பறவை இனங்களில் மிகப் பெரியவை காண்டோர் பறவைகள். இவை தென் அமெரிக்க மலைகளின் மேற்குப் பகுதிகளில் காணப்படுகின்றன. ஆண்டியக் காண்டோர், கலிபோர்னியக் காண்டோர் என இரு வகைகள் உண்டு. இதன் இறக்கையின் நீளம் 3 மீற்றர். 11.கி.கி நிறையிருக்கும் இவை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் முட்டையிடும்.

**அதிவேகப் பறவை:**

பறவைகளில் அதிவேகமாகப் பறக்கக் கூடிய பறவை ஸ்பைன் டெய்ல்ட் ஸ்விப்ட். இந்த ஸ்பைன் டெய்ல்ட் ஸ்விப்ட்டி பறவையின் வேகம் மணிக்கு 16 கி.மீ ஆகும்.

**மிக நீண்ட அலகுள்ள பறவை:**


பறவை இனத்தில் மிக நீளமான அலகை உடைய பறவை பெலிகன். இதன் மூக்கின் கீழே பை போன்ற அமைப்பு இருக்கிறது. இந்த பை போன்ற அமைப்பைக் கொண்டு மீனைப் பிடிக்கும். நீரோடு பையினுள் மாட்டிக் கொள்ளும் மீன்களை, நீரை வெளியேற்றி விட்டு உட்கொள்ளும்.

**சிறிய பறவை:**

கியூபன் பீஹம்மிங்ஸ். இதன் இறக்கையின் நீளம் 2.5 செ.மீ. ஆகும். பறவையின் மொத்த நீளம் 6 செ.மீ.ஆகும். இதன் எடை 2 கிராம்.

**பல நிறப் பறவை:**

கறுப்பு, வெள்ளை, மஞ்சள், நீலம், பச்சை எனப் பலவகை நிறங்களில் காணப்படும் பறவையினம் டகன். தென் அமெரிக்காவின் அடந்த காடுகளில் காணப்படும் டகன் பறவைகளில் மட்டும் 40 வகைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். பழங்கள் மட்டுமே இவற்றின் விருப்ப உணவு. முட்டையிடும் காலத்தில் மட்டும் பூச்சிகள், புழுக்கள், தவளை போன்ற உயிரினங்களைச் சாப்பிடுகின்றன.



நிஸா

## கிளி ஜோசியம்

(சென்றவாரத் தொடர்ச்சி)



''கவலைப்பட வேண்டாம். கண்டம் என்றால் பெரிய ஆசியாக் கண்டமில்லை. சாதாரண எமகண்டம்தான். எமன் எருமை மாட்டின் மேலதான் வருவார். அதனால் உங்கள் குருவை எருமை மாட்டுடின் மேல் எக்காரணத்தைக் கொண்டும் நீங்கள் உட்காரவைக்கக் கூடாது. இந்தக் கண்டமும் உயிருக்கு சேதம் அடையும் படியெல்லாம் வராது. அதனால் நீங்கள் பயப்பட வேண்டாம். வருகின்ற மார்கழி வரை நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும் ஜாக் கிரதையாக இருக்க வேண்டும்''என்றார்.

சீடர்கள் உடனே! ''ஆஹா! தங்கள் வாழ்வில் நடந்ததை அப்படியே சொல்கிறாரே! இவர் அல்லவா முக்காலமும் உணர்ந்தவர்'' என்று கூறினர். ஜோசியர் சொன்னது சீடர்களுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

''சரி! சீடர்களே! இங்கே பேசிக்கொண்டு உட்கார்ந்திருங்கள்! நான் இதோ வந்து விடுகிறேன்,'' என்று தாம்பூலத்தட்டில் இருந்த காசை எடுத்துக்கொண்டு, ''பக்கத்துக் கடையில் சாப்பிட்டுவிட்டு வருவோம்!'' என்று போனார்.

''அப்பாடா! இப்ப அப்ப மதியம், பிரியாணி நல்லா மூக்கைப் பிடிக்கச் சாப்பிடலாம். இன் றைக்கு நல்லா ஒரு தூக்கம் போடலாம். இன்றைய பொழுது எனக்கு இனிமையாய்க் கழியும். இரவு சாப்பாட்டுக்கு எப்படியும் அவர்களிட மிருந்து பணம் பெற்று விடலாம்...'' என்று நினைத்துக் கொண்டே கடையை நோக்கிப் போனார்.

''சீடர்களில் ஒருவன் ''இருபது ரூபாய்க்கே இந்த ஜோசியர் இவ்வளவு சொல்கிறார். இப்பதான் நம் மனதுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது. அப்போ, ஐம்பது ரூபாய்க்கு பார்த்தா, இன் னும் நம்மள என்னென்ன புடிச்சிருக்குன்னு நிறைய சொல்லுவார் போல இருக்கே,'' என்றான்.

உடனே பாவாடை, ''சீடர்களே! ஜோசியர் சொன் னதும் நாம் நம் குருவுக்கு யானை வாங்கிவிட்ட மாதிரி எனக்கு சந்தோஷமாய் இருக்கு,'' என்றான்.

''எனக்கு இப்போதுதான் ஞாபகம் வருகிறது. ஜோசியர் வந்ததும் நம் குருவுக்கு யானை எப்போது கிடைக்கும்? என்று மறந்து விடாமல் கேட்போம்,'' என்றான்.

''ஆமாம்! ஆமாம்!'' என்று மற்ற சீடர்கள் சொன்னார்கள். ஜோசியர் ஏப்பம் விட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

''சீடர்களே! என்ன முடிவு எடுத்திருக் கிறீர்கள்?''என்று கேட்டார்.

''நாங்கள் கைரேகை ஜோசியம் பார்க்கலாம் என்று முடிவெடுத்து உட்கார்ந்திருக்கிறோம்'' என்றனர்.

''நானும் அதைத்தான் சொல்வீர்கள் என்று நினைத்தேன்... சரி! கைரேகை பார்க்க வேண்டுமானால் உங்கள் குருவினுடைய கை வேணுமே!'' என்றார்.

உடனே, சண்டன் எழுந்து, ''ஜோசியரே! எங்கள் குருவுக்கு நான் வலது கை போன்றவன். அப்படியானால் எனது வலது கையைப் பார்த்துச் சொல்லுங்கள்'' என்றான்.

உடனே முண்டன் எழுந்து, ''ஜோசியரே! எங்கள் குருவுக்கு நான் இடது கை போன்றவன், அப்படியானால் எனது இடது கையைப் பார்த்துச் சொல்லுங்கள்,'' என்றான்.

''சீடர்களே! கைரேகையைப் பொறுத்தவரை இரண்டு கையையும் பார்த்துச் சொல்வது அல்ல. ஆண் களுக்கு வலது கையும், பெண்களுக்கு இடது கையும் பார்க்க வேண்டும் என்று ஒரு வரை முறை இருக்கிறது'' என்று ஜோசியர் சொல்ல சீடர்கள் அமைதியானார்கள்.

சண்டன் காணிக்கையாகப் பத்து ரூபாயை வைத்தான்... காசைப் பார்த்தவுடன் ஜோசியர் சண் டனுடைய வலதுகையைப் பார்த்துச் சொல்லலானார்.

(தொடரும்)

## சிந்திக்க சில வரிகள்

- அன்பின் விலை அன்புதான்.
- கடந்ததை நினைத்துப்பார்; நடந்த பாதையை திருப் பிப்பார்; உன்னை உனக்கே புரியும்.
- அதிஷ்டத்தை நம்பி இருப்பவன் முட்டாள்; உழைப்பை நம்பி இருப்பவன் வீரன்.
- கடமை இனிமையாவது அன்பின் மூலம்தான்.
- ஒவ்வொரு அலையின் பின்னாலும் முழுச் சமுத் திரமும் நிற்கின்றது.
- தன்னலமற்றுப் பணி புரிபவனே மிகச் சிறப்பாகப் பணி புரிகின்றான்.
- படைப்பின் இரகசியங்கள் அனைத்துக்குள்ளும் நுழைய வழி அன்பு.
- நன்றி என்பது மனித வாழ்வில் யானைத் தந்தம் போன்றது. அது மிகவும் மதிப்புடையது.

சா. சிந்துஜா,
கோண்டாவில்.

## அறிந்தும் அறியாமலும்....

1.கேத்திர கணிதத்தின் தந்தை எனப்படுவர் யார்?
**பைதகரஸ்**

2. சாரணர் சிறுவர் இயக்கத்தை ஆரம்பித்தவர் யார்?
**பேடன்பவல்**

3. நோபல் பரிசை ஆரம்பித்து வைத்தவர் யார்?
**அல்பேட் நோபல் பிரபு**

4. அணுகுண்டைக் கண்டுபிடித்தவர் யார்?
**ஒக்கேராஹான்**

5. புகைப்படக் கருவியைக் கண்டு பிடித்தவர் யார்?
**எஸ்.ஜே.எம்.பாகுரே**

6. ஒட்சிசன் வாயுவைக் கண்டுபிடித்தவர் யார்?
**ஜோசப் பிறிஸ்லி**

7. சைக்கிளைக் கண்டுபிடித்தவர் யார்?
**மக்மில்லன்.**



சா.பபிதா, தரம் 8A
யா/ கோண்டாவில் இராம கிருஷ்ண
மகா வித்தியாலயம்.

## மழலைகளின் மொழி...




மகிழ்வு: திருநெல்வேலி ஸ்மாட் கிட்ஸ் முன்பள்ளிச் சிறார்களின் நவராத்திரி தின நிகழ்வுகள் அண்மையில் முத்துத் தம்பி மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றன. சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் சிப்பாய்களுக்கு வெளிநாட்டு ஆசைகாட்டி 14 லட்சம் ரூபாவுடன் தலைமறைவானார் பெண்

## கேகாலையில் பொலிஸார் வலைவீச்சு

கேகாலை, ஒக். 15

துபாயில் தொழில் வாய்ப்புப் பெற்றுத்தருவார் என்று கூறி இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற 44 பேரிடமிருந்து சுமார் 14 லட்சம் ரூபாவை மோசடியாகப் பெற்றுக்கொண்டு தலைமறைவான பெண்ணுக்கு கேகாலைப் பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது வருமாறு:

ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் கேகாலை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தனது வாகனத்திற்கு எரிபொருள் நிரப்புவதற்காக வந்துள்ளார். அச்சமயம், தானாக வந்த அவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட இந்தப் பெண், தான் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரெனவும், அங்கு பணிபுரிவதற்கு ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய்கள் தேவைப்படுகின்றனர் எனவும் கூறியுள்ளார்.

விரைவில் துபாய் முகவர் இங்கு வந்து நேர்முகப் பரீட்சையை நடத்துவார். தெரிந்தவர்கள் இருந்தால் அழைத்து வருமாறும் இந்தப் பெண், சிப்பாயிடம் கூறியுள்ளார்.

இவரது பேச்சில் ஏமாந்த சிப்பாய் தனக்குத் தெரிந்த ஓய்வு பெற்ற சிப்பாய்கள் 43 பேரை சேர்த்துள்ளார். அவர்களிடம் முற்பணமாக 25 தொடக்கம் 50. ஆயிரம் ரூபாவை இந்தப்பெண் பெற்றுக்கொண்டுள்ளார். மிகுதிப் பணத்தை துபாய் புறப்படும் தினத்தில் கொடுக்க வேண்டும் என்பது உடன்பாடு.

சில தினங்களுக்குப் பின் துபாய் முகவர் குறிப்பிட்ட தினத்தில் இலங்கை வருகிறார் எனவும், நேர்முகப் பரீட்சை கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெறும் எனவும் கூறிய பெண், விண்ணப்பதாரிகளை அன்று காலை கலிகமுவ நகரில் குறிப்பிட்ட இடத்தில் சேருமாறும், தான் அவர்களை அழைத்துச் செல்ல பஸ் ஒன்றுடன் வருவார் என்று கூறியுள்ளார்.

அதனையடுத்து, விண்ணப்பதாரிகள் சிலர் கலிகமுவ நகரிலும் சிலர் நட்சத்திர ஹோட்டல் முன்பும் முழுநாளும் காத்திருந்தனர். பெண் வரவேயில்லை.

அதன்பின் அனைவரும் ஒன்று திரண்டு அந்தப்பெண் தங்கியிருந்த கேகாலை, நிலிவத்த பிரதேசத்தில் உள்ள வீட்டுக்குச் சென்றனர். வீட்டு உரிமையாளர், இந்தப் பெண் வாடகைக்கு அந்த வீட்டில் தங்கியிருந்தார் எனவும், மூன்று நாள்களுக்கு முன்பு வீட்டைக் காலிசெய்துவிட்டு பொருள்களை லொறியொன்றில் ஏற்றிக் கொண்டு சென்றுவிட்டார் எனவும் கூறியுள்ளார்.

இதையடுத்து தாங்கள் நன்றாக ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை புரிந்துகொண்டவர்கள் கேகாலை பொலிஸ் விசேட குற்றத்தடுப்பு பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ச)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட 22 குடும்பங்கள் குடியமர்வு



கல்முனை,ஒக்.15

கல்முனை, கரைவாகு வட்டைப்பகுதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்டோர்களுக்காக கட்டப்பட்ட மாடிவீட்டுத் தொகுதியில் இதுவரையில் கையளிக்கப்படாத 22 வீடுகளில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குடியமர்ந்துள்ளனர்.

கல்முனையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோர்களுக்காக 456 வீடுகள் கட்டப்பட்டன. இதில் 427 வீடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன. எஞ்சிய 29 வீடுகளையும் பெற்றுக்கொள்வதற்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான குடும்பங்கள் விண்ணப்பித்திருந்தன.

இந்த விண்ணப்பங்கள் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் பரிசீலிக்கப்பட்டு முதற்கட்டமாக 7 வீடுகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வழங்கப்பட்டன. இந்த வீடுகளுக்காக விண்ணப்பித்திருந்த ஏனைய குடும்பங்கள் எந்தவித அனுமதியுமின்றி தாமாகவே 22 வீடுகளிலும் குடியமர்ந்துள்ளனர்.

இதுதொடர்பில் குடியமர்ந்த மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், எங்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்ற அதிகாரிகள் இதுவரை காலமும் இழுத்தடிப்புச் செய்து வந்த நிலையில், 7 வீடுகளை மாத்திரமே நேற்றுமுன்தினம் வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் ஏனையோர்களுக்கு வீடுகளை வழங்கப்படாமையானது அதிகாரிகள் எங்களை ஏமாற்றுவதாவே உள்ளது- என்றனர். (ச)



கண்டி மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளரின் செயல்களைக் கண்டித்து மாவட்ட பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கண்டியில் அமைந்துள்ள மத்திய மாகாண சுகாதார அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கடந்தவாரம் நடைபெற்ற சுகாதாரவாரத்தின்போது கண்டி மாவட்ட சுகாதார சேவைப்பணிப்பாளர் பொதுமக்கள் முன்னிலையில் தங்க இழிவாகப்பேசியதாகவும் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச)

# மாணவி மீது வன்புணர்வு; அதிபரிடம் பொலிஸ் விசாரணை

பலாங்கொடை, ஒக்.15

பலாங்கொடை பிரதேச பாடசாலையொன்றில் 13 வயது மாணவியொருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் குறிப்பிட்ட பாடசாலையின் அதிபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதிபர், சம்பந்தப்பட்ட மாணவியை பாடசாலையிலும், தனது வீட்டிலும் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமனலவெவ பொலிஸ் காவலரணுக்கு கிடைத்த அநாமதேயக் கடிதமொன்றை ஆதாரமாகக் கொண்டே விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.(ச)

# உயிர்ப் பலியை நிறுத்தினார் யோகேஸ்வரன் எம்.பி

மட்டக்களப்பு, ஒக்.15

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விளாவெட்டுவான் வீரமாகாளியம்மன் ஆலயத்தில் வருடாவருடம் நடைபெற்றுவந்த பலிப்பூஜை எனப் படும் மிருகங்களை உயிர்ப்பலியிடும் நிகழ்வை இந்த முறை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தடுத்து நிறுத்தியுள்ளார்.

இந்துக் கோயில்களில் மிருகங்களை உயிர்ப்பலியிடும் சம்பவங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கடந்த காலங்களில் நாடாளுமன்றத்திலும் அவர் விவாதித்திருந்தார்.

இதன் அடிப் படையிலேயே முன்னேஸ்வரம் போன்ற பல ஆலயங்களில் உயிர்ப்பலியிடுவதற்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த முறை அவரது தலைமையில் நடைபெற்ற மட்டக்களப்பு, வவுணதீவு வீரமாகாளியம்மன் ஆலயத்தில் வருடாந்த திருச்சடங்கு உற்சவத்தில் மிருகங்களை உயிர்ப்பலியிடும் நிகழ்வைத் தடுத்து நிறுத்தியுள்ளார். (ச)

# ரூ.2 லட்சத்து 56 ஆயிரம் வசூல்

கட்டுகஸ்தோட்டை, ஒக். 15

கட்டுகஸ்தோட்டை பொலிஸார் அண்மையில் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளின்போது வெவ்வேறு குற்றச்செயல்களுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்களிடமிருந்து 2லட்சத்து 55 ஆயிரத்து 950 ரூபா நீதிமன்ற அபராதமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. போதைப்பொருள், கஞ்சா, கசிப்பு ஆகியன வைத்திருந்தமை மற்றும் அரச அனுமதியின்றி சாராயம் விற்றமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி டீ.ஜயதிலகவின் தலைமையில் செயற்பட்ட பொலிஸ் குழுவினரே இந்த சுற்றிவளைப்புகளைமேற்கொண்டனர்.

# ஆசிரியரைக்கொன்ற குற்றச்சாட்டில் மூவருக்கு விளக்கமறியல் உத்தரவு

இரத்தினபுரி, ஒக்.15

எட்டு மாதங்களுக்கு முன் இரத்தினபுரியில் பாடசாலை ஆசிரியர் ஒருவரை மர்மமான முறையில் வெட்டிக்கொன்றுவிட்டு அவரது உடமைகளைக் கொள்ளையடித்தனர் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட மூவரை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவர்கள் ஆசிரியரைத் தாக்கி அவரிடமிருந்து 600 ரூபா பணத்தையும் செல்போனையும் கொள்ளையடித்த பின் அவரை கூரிய ஆயுதத்தினால் வெட்டியும், குத்தியும் கொலை செய்து சடலத்தைத் தேயிலைத் தோட்டப்பள்ளமொன்றில் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது, முதலாம், இரண்டாம் சந்தேக நபர்கள் வேறு கொலைச் சம்பவத்துடனும் தொடர்புபட்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சனத் ராஜசிங்க தலைமையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச)

# விவசாய அமைச்சால் உபகரணங்கள் கையளிப்பு

திருகோணமலை, ஒக்.15

கிழக்கு மாகாண விவசாய அமைச்சால் மூதூர் கிழக்கு விவசாயிகளுக்கு விவசாயப் பாதுகாப்புக்கான முட்கம்பிச்சுருள்களும் உபகரணங்களும் உப உணவுப் பயிர்களும் வழங்கப்பட்டன.

இந்தப் பொருள்கள் கடந்தகாலப் போர் சூழலினால் பாதிக்கப்பட்ட கிராமங்களான பெரிய நெய்யந்தை, சின்ன நெய்யந்தை, சீனன்வெளி, தில்லங்கேணி, வேம்படித்தோட்டம், கயமுந்தான், அம்மன்நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டன. (ச)

# பகிஷ்கரிப்புக்குப் பின்னர் கைதான சாரதிகள் விடுதலை

வெல்லாவெளி, ஒக்.15

கைதுசெய்யப்பட்ட குறுந்தூர பஸ்களின் சாரதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி மட்டக்களப்பு நகரிலுள்ள தனியார் பஸ்களின் சாரதிகளும் ஊழியர்களும் கடந்த புதன்கிழமை பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதையடுத்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை மட்டக்களப்பு குறுந்தூர பஸ்களின் சாரதிகளுக்கும் நெடுந்தூர பஸ்களின் சாரதிகளுக்குமிடையில் ஏற்பட்ட பிரச்சினையால் குறுந்தூர பஸ்களின் சாரதிகள் இருவர் மட்டக்களப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையால் கடந்த புதன் கிழமை காலை முதல் பிற்பகல் வரை மட்டக்களப்பு நகரில் குறுந்தூர பஸ்கள் சேவையில் ஈடுபட வில்லை. பிற்பகல் இரண்டு மணியளவில் கைது செய்யப்பட்ட சாரதிகள் விடுவிக்கப்பட்ட பின்னரே மட்டக்களப்பில் குறுந்தூர பஸ்களும், தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபட்டன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டியத்தில் (ன்) இசை



லலித கலைகளில் செவிக்கு இனிமை சேர்த்து சித்தி தரும் முதன்மைக்கலை இசைக்கலை. செவிக்கும் கண்ணுக்கும் விருந்தாகி நன்மை பயக்கும் செம்மைக் கலை நாட்டியக்கலை. நாட்டியக்கலையின் ஆற்றுகை வடிவம் கண்ணுக்கு விருந்தளிக்க ஆடலோடு இணைந்த இசைக்கலை செவிக்கு இனிமை பயக்குகிறது.

இதன் மூலம் நாட்டியமும் இசையும் பிரிக்க முடியாத ஒரு கூட்டுக் கலையாகின்றன. சாதாரணமாக நாட்டியப் பயிற்சியின்போது சொற்களும், ஜதிப்பிரயோகங் களும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் உருப்படிகளின் பயிற்சியின் போதும் அரங்க நிகழ்வுகளின் போதும் இசை என்பது முக்கியப்படுத்தப்படுகிறது. அந்த வகையில் நாட்டியக்கலையில் இசையின் பங்கு எத்தகையதாக வேண்டப்படுகிறது என்று பார்ப்போம்.

ஆதிகாலம் தொட்டு ஆடலும் இசையும் ஒன் றிணைந்து வளர்ந்து வந்தன. இந்துமத நிழலில் இவை இரண்டும் வழிபாட்டு ஊடகங்களாகப் பேணி வளர்க்கப்பட்டு வந்தன. இறைவனை ஏற்றிப் போற்றிப் பண்ணமைத்த பாடல்களால் பாடியும் அதே பாடலின் உச்சத்தில் பக்தி மேலீட்டால் ஆடியும் வழிபட்டு வந்தனர். அது மட்டுமன்றி மக்கள் வாழ்வியல் அம்சங்களான தொழில் முறைமைகள், பொழுதுபோக்கு என்பனவற்றில் ஆடலும், இசையும் பிரிக்க முடியாத ஒன்றாகப் பின்னிப்பிணைந்திருந்தன. இவ்வாறான பரிமாணத்தை யடைந்த ஆடல், இசைக்கலை, செந்நெறியாகிய பரதமாகவும் கர்நாடக இசையாகவும் எழுச்சி கண்ட போதும் இவை இரண்டும் ஒன்றாக இணைந் திருப்பதைக் காணலாம். எனவே செவ்வியல் கலையாகிய பரதநாட்டியத்துக்கும் பரத நாட்டியப் பயிற்சி மற்றும் அரங்க ஆற்றுகைக்கும் பரதநாட்டிய அறிக்கைப் பாடப் பரப்புக்கும் இந்தக் கலை முதன்மைத்துவம் வாய்ந்தது என்பது உண்மையே.

கூத்து என்பது ஆட்டமும், இசை யும், அபிநயமும் சேர்ந்தது என்பதை ''ஆட்டம் பாட்டம் அபிநயம் அன்ன கூத்தின் முறைமை'' என்று கூத்த நூலின் தொகை நூல் கூறுகிறது.

மேலும் '' ஆட்டம் பிறந்தது பாட்டம் பாட்டம் அதனிடை பிறந்தது அபிநயக் கூத்தே'' என்றும் அதே நூல் மேலும் விரித்துக் கூறுகிறது. ஆட லும் பாடலும் ஒன்றாக நோக்கப்பட்ட செய்தியை சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட வரிப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. அதாவது வரிப்பாடல்கள் என்பது ஆடலை யும், பாடலையும் குறிக் கும் பொதுப் பெயராகவே நோக்கப்பட்டுள்ளது என்பர். சங்க காலத்து கூத்துக்களில் பின்னணி இசை என்ற வகையில் கூத்துடன் இணைந்து இசை பாடப்பட்டது. பின்னர் வந்த காப்பிய காலத்தில் இசைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இசைக்கு ஏற்பவே ஆடல் ஆடப்பட்டது. ஆரம்பத்தில் வெறும் திருத்தமாக ஆடலும் வெறும் ஸ்வரமாகப் பாட்டும் இருந்தது. பின்னரே பொருள் பொதிந்த பாடலும் அதற்கு உரிய அபிநயமும் தோன்றியது என்பதை சாத்தனார்

'' ஆட்டம் தட்டாம் பாட்டம் பண்ணாம்
யாட்பு கூத்தின் அபிநயம் என்பர்'' இவையாவும் ஆடலும் இசையும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்திருந்த செய்தியையே கூறுகின்றன.

'' வேத்தியல் பொதுவியல் என்று இருக்கிறது
கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்
பண் யாழ் கரணமும் பாட்டும் பாடலும்
தண்ணுமைக் கருவியும் தாழ் தீம் குழலும்''

என்பது அந்தக்காலத்தில் ஆடல் நிகழ்ச்சிகளில் சிறந்து விளங்கிய தணிகையர் எவ்வாறு இசையிலும், தாளத்திலும் பல இசைக் கருவிகளை இசைப்பதிலும் திறனும் பெற்று விளங்கினர் என்பதை விளக்குகி றது. அரசர்களுக்காக ஆடும் வேத்தியல் பொது மக்களுக்காக ஆடும் பொதுவியல் என்பனவும் இந்தக் கூத்துக்கு இசை பாடும் பாடல்களும் தாளங்களின் நெறிகளாகிய செந்தூக்கு, மதலை, துணிவு, நிவப்பு, கழால், நெடுந்தாக்கு ஆகியவையும் கூத்துக்குரிய எட்டு விதிகளும் பண்ணல், பரிவட்டனை, ஆராய்தல், நைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என எட்டும் தண்ணுமை இசைதல் தளைச் சொற்கட்டுக்களைச் கற்றிருத்தல் புல்லாங் குழல் வாசித்தல் என அனைத்து வாத்திய இசையிலும் சிறந்தவளாக விளங்கினாள் என சங்கச் சங்கமருவிய கால ஆடல் நங்கையின் சிறப்புக்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி தொல்காப்பிய காலத்துக்கு முன் வாழ்ந்த பண் இசையிலும் கூத்திலும் சிறந்து விளங்கியமையையும் அறியலாம்.

நாட்டியத்தில் நால்வகை அபிநயங்கள் முக்கியப் படுத்தப்படுகின்றன. இந்த நால்வகை அபிநயங்களின் செம்மையே நாட்டியக் கலையின் வெற்றிக்கு வளிவகுக்கிறது. அந்தவகையில் அங்கங்களுக்கு முக்கியம் கொடுக்கும் ஆங்கீத அபிநயமும் பாவ, ரச வெளிப்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஸாத்விகா அபிநயமும் ஆடை ஆபரண ஒப்பனைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆஹார்ய அபிநய மும்,பாடல், வாத்திய இசை என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வாச்சிக அபிநயமும் நாட்டியத்தின் நால்வகை அபிநயங்களாகும்.

அதில் சிறப்பாக வாச்சிக அபிநயம் கான்பதே ஆடலின் இசையுடன் தொடர்பு படுவ தாகும்.

வாச்சிக அபிநயம் பற்றி நந்தி கேதீஸ்வரரின் அபிநய தர்ப்பணம் பின்வருமாறு கூறுகின்றது.

''ஒது, சுகீத வாசிகம், உபகீத வாசிகமும் சேர்ந்
தோது சு சப்தவாச்சிகம் உபதேச வாசிகம், எண்
நீதில் சுகீத வாசிக மாகும் இனிதம் பத்திரம்
கீதத்தை தானே பாடிக் கொண்டார் நயித்தற்
கென்னே''. அதாவது நாட்டிய நிகழ்வொன்றில் பாடல்கள் பாடும் முறைகள் பாடகன் பாடுவது மற்றும் ஆடல் நங்கை பாடி ஆடுவது வாத்திய இசைக்கேற்ப ஆடுவது தாளக் கணக்கிற்கு ஏற்ப ஆடுவது என இசையுடன் தொடர்புபட்ட அபிநயம் பகுதியை விளக்குவதாக உள்ளது.

(தொடரும்)

**அ.உமாமகேஸ்வரி (B.F.A)**
**உடுவில் தெற்கு, மானிப்பாய்.**

# கடந்த கால நினைவுகளிலிருந்து சற்று விடுபடலாமே...!



**- சோபனா**

கடந்த காலம் கழிந்துவிட்டது ! இனி நீங்கள் நிகழ்காலத்தில் தான் வாழ முடியும்; கடந்தது கடந்ததுதான். இந்த வாக்கியத்தை நீங்கள் நினைவில் நிறுத்தித் தொடர்ந்து கூறிவந்தால், அது உங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் மாற்றியமைக்கும்.

நீங்கள் இறந்த காலத்தில் வாழ முடியாது. பழைய சுகங்களை அசை போட்டு அனுபவிக்கலாம். பழைய துக்கங்கள் முழுவதையும் உங்களால் மறக்க முடியாமல் போகலாம். ஆனால் நீங்கள் பழைய சுகங்களை யும் துக்கங்களையும் பழைய நிகழ்ச்சிகளாகவே பார்க்கவேண் டும். நினைவுகளாக அவை உங்கள் மனதில் நிற்கலாம், ஆனால் நிகழ் கால உணர்ச்சிகளாக அல்ல. புத்திசாலித்தனமாக, வெற்றிகரமாக, மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கு இது ஒரு முக்கியமான பாடமாகும். பழைய சுகங்களும் பழைய துக்கங்களும் மறைந்து விட்டன. இறந்த காலம் கடந்து சென்றது. கதவை மூடிவிடுங்கள்.

பழைய சுகங்களும் பழைய துக்கங்களும் வெறும் நினைவுகளே. அவற்றை நிகழ்கால உணர்ச்சிகளாக மறு அவதாரம் எடுக்க வைக்காதீர்கள். இறந்த காலம் சென்று மறைந்தது என்பதை ஒப்புக்கொள்ளுங்கள். நிகழ்காலம் கண் முன் இருக்கும் உண்மை. இறந்த காலத்தில் வாழவோ இல்லை அதை மாற்றவோ நம்மால் முடியாது.

உங்களின் கடந்த காலத் தவறுகளும் சென்று ஒழிந்துவிட்டன. அதன் விளைவுகள் சில நிகழ்காலத்திலும் உங்களுக்கு இடையூறு தரலாம். நிகழ்காலத்தில் அவற்றை எதிர் கொள்ள வேண்டி வரலாம். நடந்து முடிந்த தவறுகளைத் திருத்த முடியாது. அவற்றிலிருந்து உண்மைகள் உணரப்பட வேண்டும். உணர்வு பூர்வமாக அலசுங்கள் உணர்ச்சி பூர்வமாக அன்று. பழைய சோகங்கள், தவறுகள், கோபங்கள் இவற்றை நினைத்து உணர்ச்சி வசப்படுவோர் நிகழ்காலச் சங்கடங்களை அதிகமாக்குகிறார்கள். மகிழ்ச்சியற்ற கடந்த காலத்தின் நினைவுகள் பற்றி உணர்ச்சி வசப்படும்போது நிகழ்காலம் மகிழ்ச்சியற்றதாகத்தான் இருக்கும். சென்றவை சென்று ஒழிந்தன, கதவைச்சாத்துங்கள். நிகழ்காலத்தில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கும் மனக் கதவைத் திறந்து வையுங்கள். இன்று கைகொடுப்பவை நிகழ்கால வாய்ப்புக்கள் மட்டுமே. இன்று இப்பொழுது தான் எம்முடைய நேரம்.

# “ நான் பேச எடுத்துக் கொண்ட விடயம் ”

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேற்குலக நாடகத்தின் ஒரு சுருக்கமான வரலாறு





**தொடர்ச்சியான நாடக வளர்ச்சி:**

மேற்குலகில் நாடகம். முதன் முதலில் எப்பொழுது ஆடப்பட்டது? எப்படி ஆடப் பட்டது? என்பதையே அறிய முடியாமல் உள்ளது.

ஆனால் அது தொடர்ச்சியாக வளர்ந்து வந்திருக்கிறது என்பதை மட்டும் அறியக் கூடியதாக உள்ளது. அது காலத்துக்குக் காலம் மாற்றம் அடைந்தே வந்துள்ளது. ஒவ்வொரு காலத்திலும் ஏற்பட்ட மாற்றங் களைக் குறிக்கும் நாடகங்கள் எமக்குக் கிடைத்திருகின்றன. முதன் முதலில் கிரேக் கரே சிறந்த நாடகங்களை எழுதி நடித்த னர். கி.மு ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டி லிருந்து அவர்களது நாடகங்கள் சில எமக்குக் கிடைக்கின்றன. கிரேக்கரிலி ருந்து இந்த நாடக வளர்ச்சியை ஒரு சங்கிலித் தொடராகக் காணலாம். அதன் பிறகு ரோம சாம்ராச்சியத்தில் நாடகங்கள் ஆடப்பட்டன. அவர்களுடைய நாடகங் களில் கிரேக்க நாடகங்களின் செல் வாக்கை அதிகமாகக் காணலாம். அந்த வகை நாடகங்களின் செல்வாக்கு ரோமி லிருந்து ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவியது.

ஐரோப்பாக் கண்டத்தில் கிறிஸ்தவ மதம் பரவிய பின்பு, முதலில் மதப் பிரசார நாடகங்களே நடிக்கப்பட்டன. என்பதற்குச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. அவை தேவாலய வளாகங்களிலேயே நடிக்கப்பட் டன.இந்த மத-நாடக உறவு, இன்றளவும் நீடிக்கின்றது.

காலக்கிரமத்தில் நாடகக்காரர்கள் மதத்தின் பிடியிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக நாடகங்களை எழுதி நடிக்கத் தொடங்கினர். அதன் பின்னரே நாடக வளர்ச்சியில் புதுமையும், விறு விறுப்பும், வேகமும் ஏற்பட்டன.

அந்தக் காலப்பகுதி மன்னராட்சிக் காலம். எனவே மன்னரையும் பிரபுக்களை யும் வைத்தே நாடகங்கள் எழுதப்பட் டன. மன்னரும் பிரபுக்களுமே நாடகப் பாத்திரங்களாக வந்தனர். அவர்கள் நடத்திய போர்கள், அடிதடிகள், காதல் கள், களியாட்டங்களே நாடகங்களில் சித்திரிக்கப்பட்டன. சாதாரண பொது மக்களும் அவற்றை விரும்பிப் பார்த்து மகிழ்ந்தனர்.

**மகாகவி ஷேக்ஸ்பியரது நாடகங்கள்(கி.பி.1564-1616)**

ஷேக்ஸ்பியர் ஒரு தலை சிறந்த நாடக மேதை. இன்றளவும் நிலைத்து நிற்கும் பல அற்புத நாடகங்களைப் படைத் தவர். ஆனால் அவரால் கூட காலத்தை விஞ்சிய நாடகங்களைப் படைக்க முடிய வில்லை. மற்றவர்கள் சென்ற வழித்தடத் திலேயே அவரும் சென்றார். மன்னர் களையும் பிரபுக்களையும் வைத்தே நாடகங்கள் எழுதினார்.

அவரது காலத்தில் ஆங்கில மொழி யில் அதிக எண்ணிக்கையான நாடகங் கள் இருந்தன. அவர் அவை எல்லாவற் றையும் படித்தார். அவை ஒவ்வொன்றி லும் தனக்குப் பிடித்த அம்சங்களை எடுத்துத் தான் எழுதிய நாடகங்களில் பயன்படுத்தினார். பழைய கதைகள், வரலாற்றுச் செய்திகளைக் கூட நாடக மாக்கினார். இரவல் வாங்க ஷேக்ஸ்பியர் தயங்கவில்லை. அதனால்தான் தொட் டது எல்லாவற்றையும் பொன்னாக மாற்றினார்.!

ஷேக்ஸ்பியர் ஒரு சிறந்த கவிஞர். அழகான கவிதை நடையில் நாடகங்கள் எழுதினார். ஆனால் அவரது கவிதையி னால் அவரது நாடகங்கள் புகழ்பெற வில்லை. மாறாக அவரது நாடகங்களது சிறப்பினாலேயே அவர் ஒரு சிறந்த கவிஞர் என்பதை உலகம் அறிந்து கொண்டது. அவரது காலத்திலேயே யோன்சன், மாளோப் போன்ற பல பெரிய கவிஞர்கள் நாடகம் எழுதிக்கொண்டி ருந்தனர்.

எல்லோரிலும் ஷேக்ஸ்பியரே சிறந்த கவிஞர் என்றும் சிறந்த நாடகாசிரியர் என்றும் பாராட்டப்பட்டார்.

அவரது காலத்தில் ஆங்கில நாடகம் உச்சக் கட்டத்தை அடைந்தது. அவ ருக்குப் பின் ஆங்கில நாடகம் மட்டு மல்லாது, ஐரோப்பிய நாடகங்களுமே தரத்திலும் செல்வாக்கிலும் இறங்கிக் கொண்டு சென்றன.

எல்லோரும் ஒரே வழித்தடத்தி லேயே சென்றனர். எவரும் புதுமைகள் செய்யவில்லை. (தொடரும்)

**கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை**

---

அனைவருக்கும் வணக்கம். நான் பேச எடுத்துக் கொண்ட விடயம் பூதம். பூதமெண்டு சொன்னவுடன் நீங்கள் ஒருத்தரையொருத்தர் பார்த்து "பேய் பிசாசைப் பார்த்த மாதிரி முழிக்கிறியள். பூதம் பற்றி நீங்கள் கன கதையள் கேள்விப்பட்டு இருப்பியள். வயசு வித்தியாசமின்றி சின்னாள்கள் தொடங்கி, பெரியாக்கள் வரை பயப்பட வேண்டியதுதான். எங்கட பெரியாக்கள் அப்பா அம்மா எல்லாம் "பிஞ்சு வயசிலே எங்களுக்கு "பேய் பிசாசு என்று சொல்லி "பயப்படுத்தி" வளர்த்துப் போட்டினம்.

தங்கட "காரியம் அலுவல் நடக்க வேணும்; தமக்குப் பிரச்சினையாக "நாங்கள் செயற்படத் தொடங்கினால் உடன பேய் பிசாசு, பூதத்தைப் பிடிச்சுக் கொண்டு வந்து எங்கள வெருட்டி "அடக்குவினம், குழப்படி செய்தா பூதம் வரும்; சாப்பிடாம அடம்பிடிச்சா.."அங்க பார் பிசாசு எட்டிப் பாத்திட்டுப் போகுது, கெதியாய் சாப்பிடு, வந்தால் பிடிச்சுக் கொண்டு போயிடும். என்ன நித்திரை கொள்ளாம குழப்படி; அந்த முனி வாற சத்தம் கேட்குது அது குழப்படி செய்து அடம் பண்ணுற பிள்ளையள பிடிச்சுக்கொண்டு போயிடும்; நித்திரையை கொள்ளுங்கோ; இல்லாட்டி கூப்பிட்டுப் போடுவன் கூப்பிடட்டே...?

நாங்கள் அப்ப பயத்தில கண்களை இறுக மூடிக் கிடந்தாலும், கண்ணுக்குள்ள இவை "கூப்பிட்ட பிசாசு, பேய்களெல்லாம் சுற்றிக்கொண்டு இருக்கும். எங்கள இப்படி வெருட்டி அடக்கி வைக்கிறதில இவையளுக்கு சரியான சந்தோஷம். எங்களால "பெரியாக்களின்ரை நிம்மதி, சந்தோஷம் கலைஞ்சு போகக் கூடாது. அவையள் பிரச்சினை இல்லாமல் இருக்க வேணும் பிறந்த கொஞ்சக் காலம் தான் எங்கள "தூக்கி வைச்சு கொஞ்சு, கொஞ்செண்டு கொஞ்சிவினம் கண்ணே மணியே, குஞ்சே என்று கனக்கச் சொல்லுவினம்.

கொஞ்சம் "எங்களுக்கு விவரம் தெரிஞ்சு கேள்வி கேக்க ஆரம்பிச்சால் பிறகு எல்லாம் தலை கீழாய் போய்விடும். பிறகென்ன அடுத்து "பேய், பூதம் வெருட்டுத்தான் நாங்கள் சமயப் பாடத்தில படிச்சனாங்கள் ஐம்பூதங்களைப் பற்றி. அவையாவன நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். உண்மையில் இவை பூதங்கள் தான், சும்மா பேசாம கொள்ளாம எங்கள மாதிரி குழப்படி செய்யாமை இருந்தா இவையளும் "அச்சாப்பிள்ளையள் தான். ஆனால் குழப்படி செய்ய வெளிக்கிட்டால் அவ்வளவுதான் தாங்க முடியாது. பூகம்பம்; வெள்ளப் பெருக்கு, சூறாவளி என்று கிளம்பினால் உலகமே அழிஞ்சு போயிடும். அதனாலதான் "பெரியாக்கள் இந்த ஐந்தினையும் "பூதங்கள் என்று கொல்லினம். இது உண்மையில இருக்குது. யாராலும் அடக்க ஏலாது.

அடங்கும் வரை காத்திருக்க வேண்டியதுதான். இது இயற்கை. ஆனால் இப்ப எங்கள பயம் காட்டுற பூதம், பேய், பிசாசு எண்டால், இவை உண்மையில இருக்கிறதோ எண்டு கேட்டால் அதுவும் குழப்பமாகத்தான் இருக்குது. ஒருபக்கம் இப்படிப் பேய், பிசாசு இருக்குதெண்டு ஒரு கூட்டம் அடிச்சுக் கூறி கொண்டு இருக்குது. இன்னொரு கூட்டம் இதெல்லாம் சும்மா கட்டுக்கதை, இந்த விஞ்ஞான உலகில தேவையில்லாமல் "புரளியைக் கிளப்புறாங்கள் என்று சொல்லுகினம். இதில நாங்கள் எதை நம்புறது? எங்கட பெரியவர்கள், அம்மா, அப்பாவுக்கு இதைப்பற்றி பிரச்சினை இல்லை. உண்மை பொய்யை அறிய அவையளுக்கு நேரமில்லை. பேய், பூதமென்று சொல்லி ஓர் உருவம் வைச்சிருக்கினம் "பெரியதலை, நீண்ட மயிர்கள், அகன்ற கண்கள், பற்களை வெளியே காட்டி நாக்கை வெளியே தள்ளி தொங்கப் போட்டுக் கொண்டு பாக்க பயமாகத்தான் இருக்கும். இப்படி உருவம் உள்ள "பேயை, எந்த மனிதப் பேயைப் பாத்து கீறிக் குடுத்ததோ தெரியாது. உந்தப் படமெல்லாம் உவையளுக்கு வசதியாய் போட்டுது எங்கள வெருட்டுறதுக்கு.

சில நேரங்களில வீட்டில அம்மா அப்பா சண்டை பிடிக்கேக்க அவையளை பாத்தா நாங்கள் படத்தில பாத்த "பேய், பூதம் மாதிரி தோற்றத்தில இருப்பினம், ஆளுக்கால் எறுமி, வெருட்டிக் காட்டுவினம் எங்களுக்கு அப்ப அவையளைப் பாக்கப் பயம் வராது; சிரிப்புத்தான் வரும். ஞானிமார் சொல்லிவினம் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் "ஒரு பேய் ஒளிஞ்சு கொண்டு இருக்கு என்று அது இப்படியான நேரத்திலதான் வெளிப்படுமோ?

எத்தனை காலத்துக்கு நாங்கள் உப்பிடி உவையின்ரை வெருட்டுக்குப் பயந்தபடி நடுங்கிக் கொண்டு வாழுறது? அப்ப அந்தக் காலத்தில அப்படி பழகிப் போட்டினம் இப்ப இந்த "விஞ்ஞான காலத்தில பல உண்மைகள் எங்களுக்குத் தெரிய வருகுது. எங்களைப் பயப்படுத்தி அடிமைப்படுத்த முடியாது. என்ன சொல்லுறியள் என்னைப் போன்ற மாணவ, மாணவிகளே? சமூகத்தில ஒரு பூதத்தை வைச்சுக் கொண்டு வெருட்ட வெளிக்கிட்டா பிறகு ஊரில சும்மா கிடந்த பூதங்களும் (மனிதர்களும்) மற்ற மனிதர்களை தமது தேவைக்காக வெருட்ட வெளிக்கிட்டுவிடும். கடைசியில வெளிக்கிட்ட எல்லாத்தையும் "அடக்குறது கஷ்டமாய் போய்விடும். யாராவது சின்னப்பிள்ளையெண்டு எங்களப்பார்த்து சும்மா பூதம் கீதமெண்டு வெருட்டிப் போயிடாதையுங்கோ. இல்லாத ஒன்றை வைச்சு வெருட்டி அப்படியே பழகிக் கொண்டு வந்தா அது இருக்கிற மாதிரியே நிலை கொண்டு வளர்ந்திடும்.

இப்ப கொஞ்சக் காலமாக எல்லாரும் பூதமெண்டு பயந்து கொண்டு இருந்தனாங்கள். அப்படி இருக்கெண்டு பலரும் ஒத்துக் கொண்டது. இப்ப ஓய்ஞ்சு போய்கிடக்கு. பூதமும், நாங்களும் ஒரே மாதிரியான ஆக்கள் காரணம், அவன் (ஆண்டவன்) ஆட்டு விக்கிறான். நாங்கள் ஆடுகிறோம். பூதமும் அதே போல "யாரோ ஆட்டுவிக்கிறார் அதுவும் ஆடுகின்றது. எல்லாம் காலத்தின் கோலம்." இப்ப "அப்பா, அம்மா குழப்படி செய்தால் கிறிஸ் பூதத்திட்ட பிடிச்சுக் கொடுத்துப் போடுவன் என்று பிள்ளையள் வெருட்டுதாம்? பாத்தியளே நிலைமையை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ். பிரதான தபால் அலுவலகத்தில் அஞ்சல் ஊழியர்கள் சிரமதானப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளையில்...**

(ம–311)



# பண்பைக் கற்பவர்களின் வீதம் எமது நாட்டில் குறைந்துள்ளது

**கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவிப்பு**

வலி.வடக்கு,ஒக்.15

இன்று எமது நாட்டில் பண்பைக் கற்பவர்களின் வீதம் மிகவும் குறைந்தே காணப்படுகிறது.

கல்வி நல்லவர்களிடமும் போய் சேருகின்றது கெட்டவர்களிடமும் போய் சேருகின்றது. நல்லவர்களிடம் செல்லும் கல்விக்கு அறிவும் தெளிவும் உண்டு. கெட்டவர்களிடம் செல்லும் கல்விக்கு இவை எவையும் கிடையாது.

இவ்வாறு தெரிவித்தார் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்.

உடுவில் பிரதேச சபையில் சர்வதேச வாசிப்பு தினம் சபைத் தலைவர் தி.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று நாட்டில் கற்றவர்களுடைய வீதம் அதிகமாகக் காணப்படுகின்ற போதிலும் நல்லவர்களுடைய வீதம் மிகவும் குறைந்தே காணப்படுகின்றது. பண்பைக் கற்பவர்களும் குறைந்தே காணப்படுகின்றார்கள்.

எல்லோரிடமும் கல்விச் சான்றிதழ்கள் இருக்கின்றன. பண்புச் சான்றுகள்தான் இல்லை. நல்ல விடயங்களைக் கற்பவர்களின் எண்ணத்தை குறைவடைந்தே வருகின்றன.

நல்ல நோக்கமும் எண்ணங்களும், சிந்தனைகளும் வளரவில்லை. இதனால் சமூகம் சீர்குலைந்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் பழக்க வழக்கங்கள் சரியில்லையென பலரையும் குற்றம் சாட்டும் நிலமை காணப்படுகின்றது. ஆசிரியர்கள் பெற்றோர்கள் என தொடர்ந்த வண்ணமே உள்ளன. இந்த நிலையை முற்றிலும் மாற்றவேண்டும்.

எதிர் காலத்தில் அதிகம் வாசிப்பதையும் கற்பதையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நூலகங்கள் வெறுமனே நூல்களைக்கொண்டு இருந்தால் மட்டும் போதாது. நூலக நுழைவாயிலில் பிரதேசத்தின் விவரங்கள் குறிப்பிடப்பிட்டு இருக்க வேண்டும். சனத்தொகை ஆண், பெண் எண்ணிக்கை தொழில் முயற்சிகள் மத விவரங்கள் போன்ற அடிப்படையான புள்ளி விவரங்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

வைத்தியசாலைகள் பொலிஸ் நிலையம் போன்ற அவசர தொடர்புகள் கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கங்கள் கூட பொது மக்களின் கண்ணில் தெரியக்கூடிய வகையில் வைக்கப்பட வேண்டிடும்.

அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நகரில் உரையாற்றிய இடத்துக்கு சுவாமி விவேகானந்தரின் பெயர் சூட்டப்பட்டு பாவனையில் உள்ளதுடன் அவர் உரையாற்றிய இடமும் கூட புனிதமடான இடமாக பேணப்பட்டு வருகின்றது. - என்றார். (ம-86)

# இன்றைய சிறார்களை நல்வழியில் வளர்த்தெடுக்க வேண்டியது அவசியம்

**ஊரியான் கிராம அலுவர் உரை**

கிளிநொச்சி, ஒக்.15

இன்றைய இந்தச் சிறார்கள் நாட்டின் எதிர்காலத் தலைவர்கள்.

அவர்களின் எதிர்காலத்தை நல்ல வழியில் இட்டுச் செல்ல வேண்டிய பெரிய பொறுப்பு எங்கள் எல்லோரதும் கைகளிலேயே உள்ளது.

இவ்வாறு ஊரியான் கிரா அலுவலர் எஸ்.வீரசிங்கம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஊரியான் பிரதேசத்தில் இயங்கும் அன்சார் முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வும் ஆசிரியர் மதிப்பளிக்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பின் தங்கிய எமது பிரதேசங்களில் இருந்து கடந்த காலங்களில் பல்வேறுபட்ட தலைவர்களும், புத்திஜீவிகளும் உருவாகி இருக்கிறார்கள்.

அதுபோல் இன்னும் இன்றைய இந்தச் சிறுவர்களும் வளர வேண்டும்.

அதற்கு நாங்கள் சகல வழிகளிலும் ஒத்துழைக்க வேண்டும்.

பின்தங்கிய எமது பிரதேசத்தின் பெருமைகள் அறிவாளிகளும், புத்திஜீவிகளும் உருவாகும் போதுதான் பேசப்படும்.

அதேபோல் இவர்களும் எதிர்காலத்தில் நல்ல நிலையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். - என்றார்.

முன்பள்ளிச் சிறாரின் பெற்றோர் க.சதாவதானி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னதாக முதன்மை விருந்தினர்களும் முள்பள்ளிச் சிறார்களும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

சிறார்களின் கலை நிகழ்வுகளும் நடை பெற்றுள்ளன.

(ம-6)

# மன்னார் வலய வணிகவிழாப் போட்டி முடிவுகள்

**தரம் 10**

**குறு வினா விடை (எழுத்து)** - ஜே.ஆன்சாளினி பீரீஸ் (புனித சவேரியர் பெ.கல்லூரி), ஜே.டிசான் லியோன் (பற்றிமா ம.ம.வித்தி), எஸ். பிரவிந்த் குரூஸ் (பற்றிமா ம.ம.வித்தி).

பேச்சு-ஏ.எல். ஜீவநேசன் குலாஸ் (புனித ஆனாள் ம.ம. வித்தி), வி.அபிராமி (முருங்கன் ம.வித்தி), ஜே.ஜீசஸ் பெல்டானோ (புனித வளனார் றோ.க.த.வித்தி).

கட்டுரை - ஜே.டிசான் லீயோன் (பற்றிமா ம.ம.வித்தி), ஜே.ஆன்சாளினி பீரிஸ் (புனித சவேரியார் பெ.கல்லூரி), எம். துஷாந்திக்கா (புனித சவேரியார் பெ.கல்லூரி).

**தரம் 11**

**குறு வினா விடை (எழுத்து)** - வை.சிகான் குருஸ் (பற்றிமா ம.ம.வித்தி), ஜே.நிதர்சனா (புனித சவேரியார் பெ.கல்லூரி), ரி.கோபிகா (புனித சவேரியார் பெ.கல்லூரி), எஸ். நவதீபன் (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி).

பேச்சு- ரி.கோபிகா (புனித சவேரியார் பெ.கல்லூரி), எம்.கே. மாறிமொய்றா (புனித சவேரியார் பெ.கல்லூரி), எஸ்.கபிலா (நானாட்டான் ம.வித்தி).

கட்டுரை-ஆர் வினோதினி டீறோஸ் (பற்றிமா ம.ம.வித்தி), எம்.எஸ்.எம் ஆஸீப் (புத் றிஷாட் பதியுதீன் ம.வித்தி), பி.லசந்திகா குருஸ் (பற்றிமா ம.ம. வித்தி).

**தரம் 12**

**குறு வினாவிடை (எழுத்து)** -எப்.மேரி விமல்டா பீரிஸ் (புனித சவேரியார் பெ.கல்லூரி), பி.தாட்ஷாஜினி (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), எஸ்.கெசற்றிங் (பற்றிமா ம.ம. வித்தி).

பேச்சு- ஏ.அன்ரனிஸ் லெம்பேர்ட் (புனித ஆனாள் ம.ம. வித்தி), எஸ்.கெசற்றிங் (பற்றிமா ம.ம.வித்தி),எஸ்.றஞ்சினி (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

கட்டுரை - பி.தாட்ஷாஜினி (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), ஏ.கிங்ஸ்லி றெவல் (புனித ஆனாள் ம.ம.வித்தி), ரெமியூலியஸ் மேரிகெலன் (புனித லூசியா ம.வித்தி). (ம)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் புதிய உறுப்பினர்களுக்கான முதலாவது கூட்டம் அண்மையில் வைத்தியசாலையின் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

மத்திய அரசின் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து 3 வருடங்களுக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் - பி.கிரிதரன், உப தலைவர் -எம்.பாலசுப்பிரமணியம், செயலாளர் - எஸ். பிரசாத், பொருளாளர் - தி.விமலன், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் - ப.செல்லத்துரை, எஸ். உதயகுமார், டி.யூலியற், கே.தங்கேஸ்வரன், வி.வேதநாயகம், எஸ். ஜெயசங்கர், கே.சிவயோகன். (ம-121)

## கோட்ட மட்ட சங்கீதப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட கோட்ட மட்டத்திலான சங்கீதப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு;

**க.பொ.த. சாதாரணதரம் (குழு)**

**யாழ்ப்பாணக் கோட்டம்**

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

**நல்லூர்க் கோட்டம்**

முத்துத்தம்பி ம.வி., யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்து கல்லூரி.

**கோப்பாய்க் கோட்டம்**

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி., ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

**க.பொ.த. உயர்தரம் (தனி)**

**யாழ்ப்பாணக் கோட்டம்**

கிறிஸ்ரி டிலானி அன்ரன்- திருக்குடும்ப கன்னியர் மடம், கீர்த்தனா ஆறுமுகதாசன்- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, றூபினா ஆனந்தராசா - திருக்குடும்பக் கன்னியர்மடம்.

**நல்லூர்க் கோட்டம்**

விசாளினி இராசலிங்கம் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, சரண்ணியா மனோகரன்- யாழ். இந்துக் கல்லூரி, சா.கனுஷிகா- கொக்குவில் இந்துக் கல்லூரி.

**கோப்பாய்க் கோட்டம்**

சி.விபூஷணி - நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, இ.சியாந்திகா - புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி, க.ரெறின் - உரும்பிராய் இந்துக் கல்லூரி. (ம)

## கௌரவிப்பு

அண்மையில் ஓய்வு பெற்ற கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் லயன் ப.செல்லத்துரையைக் கௌரவிக்கும் நிகழ்வு கைதடி தெற்கு சனசமூக நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் க.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மணிவிழா நாயகன் லயன் ப.செல்லத்துரை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் "சமூக ஜோதி" என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் கைதடி தெற்கு சனசமூக நிலைய அங்கத்தவர்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதம்



கந்தர்சஷ்டி விரதம் என்று ஒரு நோன்பு உண்டு. அந்தச் சமயத்தில் நீங்கள் திருச்செந்தூருக்குச் சென்றால், ஒரு வேடிக்கையான காட்சியைப் பார்க்கலாம்.

உபவாசம், அதாவது பட்டினி இருந்து பரம்பொருளின் கருணையைப் பெறவேண்டும் என்கிற எண்ணத்தில் ஏகப்பட்ட முருக பக்தர்கள், அந்தக் கோயிலில் ஆண்டு தோறும் ஒன்று கூடுவது வழக்கம்.

அந்தத் திருவிழா நடைபெறுகிற சமயத்தில், அங்கே உண்ணாநோன்பு இருக்கிற பலபேரோடு நீங்கள் பேசிப் பாருங்கள், உங்களுக்கு ஆச்சரியமான அனுபவங்கள் கிடைக்கும். கொஞ்சம் வேடிக்கையான அனுபவங்களாகவும் அவை இருக்கும்.

அங்கே கூடியிருப்பவர்கள் ஒருவருக்கு ஒருவர் இப்படிக் கேட்டுக் கொள்வார்கள். ''நீங்கள் என்ன பச்சரிசியா?'' என்று ஒருவர் கேட்பார். இல்லை, ''நான் வெறும் வெல்லம்!'' என்று ஒருவர் பதில் சொல்வார். ''நீங்கள் இளநீரா?'' ''இல்லை இல்லை, நான் எலுமிச்சைப்பழம்'' இப்படிப் பட்ட கேள்வி பதில்கள்தான் அங்கு மேலோங்கி இருக்கும்.

அதாவது, வெறும் இளநீரை மட்டுமே சாப்பிட்டு நோன்பு இருக்கும் பக்தர், ''நான் இளநீர்'' என்பார். எலுமிச்சைப்பழத்தை மட்டுமே சாப்பிட்டு விரதம் இருக்கும் பக்தர், ''நான் எலுமிச்சைப்பழம் மட்டுமே'' என்பார்.

வெறும் எலுமிச்சைப்பழச் சாறு, இளநீர், தேன் அல்லது வெறும் பச்சரிசிச் சாதம் ஒரே ஒருவேளை, வெறும் வெல்லம், தண்ணீர் தவிர வேறு எதுவுமே இல்லாத கொலைப்பட்டினி என்று ஒவ்வொருவரும், ஒவ்வொரு விதமாக அங்கு ஆறு நாள்கள் தொடர்ந்து உண்ணா நோன்பு மேற்கொள்வார்கள்.

அவர்கள் விரதம் இருக்கிற அந்தப் பகுதி வழியாக நீங்கள் சென்றால், அங்கே உண்மையிலேயே தக தக வென்று ஒரு நெருப்பு எரிந்து கொண்டிருக்கிற ஓர் உணர்வு உங்களுக்கு ஏற்படும். காரணம், ஒவ்வொரு மனிதனுக்கு உள்ளேயும் ஓர் அக்னி இருக்கிறது. 'ஜடராக்கினி' என்பது அதன் பெயர். அந்த அக்னி நன்றாக எரிந்து கொண்டிருந்தால்தான் ஒருவர் ஆரோக்கியமாக இருக்க முடியும்.

ஆனால், நாம் என்ன செய்கிறோம்? ஓயாமல் உணவை உள்ளே தள்ளிக்கொண்டே இருக்கிறோம். இதனால் அந்த நெருப்பு அணைந்து பாழாகி விடுகிறது. நமக்கு நோய் உண்டாவதற்கான மூலகாரணம் இது தான்.

கந்தர்சஷ்டியில் விரதம் இருந்தால் குழந்தை பிறக்கும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. இதெல்லாம் மூடநம்பிக்கை என்று பகுத்தறிவாளர்கள் பேசுவார்கள். இதைப் பற்றிக் கந்தர்சஷ்டி விரதம் இருப்பவர்களிடம் கேட்டுப் பாருங்கள், கதை கதையாகச் சொல்வார்கள். ''எனக்கு நீண்ட நாள்களாகக் காது கேட்காமல் இருந்தது, கந்தர்சஷ்டி விரதம் தொடர்ந்து இருந்ததால், இப்போது எனக்கு நன்றாகக் காது கேட்கிறது'' ''எனக்குக் கண்பார்வைக் கோளாறு இருந்தது, கந்தன் அருளால் இப்போது என் பார்வை பளிச்சென்று இருக்கிறது'' என்றெல்லாம், பல விதமான விஷயங்களைச் சொல்வார்கள்.

இவையெல்லாம், இறைவனுடைய அனுக்கிரகமா அல்லது வெறும் மூடநம்பிக்கையா? என்பது ஒரு பெரிய சர்ச்சையாக இருக்கிறது. நான் இதற்கு ஒரு விஞ்ஞானபூர்வமான விளக்கத்தை இப்போது சொல்ல விரும்புகிறேன்; மனிதனுடைய உடம்பில், இரத்தத்தின் சுற்றோட்டம் இடைவிடாமல் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்க வேண்டும். அந்த இரத்த ஓட்டம் எங்காவது அடைபட்டு நின்றுவிட்டால், அங்கு முதலில் வலி உண்டாகும். பிறகு நோய்க்கிருமிகள் அங்கு தங்க ஆரம்பிக்கும். கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பகுதியை அந்தக் கிருமிகள் செயலிழக்க வைத்துவிடும்.

அதாவது, நம் ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் நாள் தோறும் உருவாகும் கழிவுநீர் ஒரு குழாய் வழியாகச் சாக்கடையில் சேர்க்கப்படுகிறது. அந்தக் குழாயில் எங்காவது அடைபட்டு விட்டால், கழிவு நீர் மேற்கொண்டு செல்ல முடியாமல், நம் வீட்டுக் கழிவறையிலேயே தேங்கி நிற்கத் தொடங்கிவிடும். அதன் பிறகு என்ன ஆகும்? துர்நாற்றம் வீசத் தொடங்கும். இந்தத் துர்நாற்றத்துக்குக் காரணம் என்ன? அழுகிய பொருள்கள் தேங்குவதால், நோய்க்கிருமிகள் உற்பத்தியாகி நாற்றத்தை உண்டாக்குகிறது.

இதேபோன்று, சாக்கடைக்குழாய் அடைத்துக் கொண்டால், என்ன கொடூரம் நிகழ்கிறதோ, அதே கொடூரம்தான் நம் உடம்பின் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படும்போதும் உண்டாகிறது. ஐந்து புலன்களில் எதில் அடைபட்டாலும் அந்தப் பகுதி ஓர் ஒழுங்கீனமான செயற்பாட்டுக்கு உள்ளாகிவிடுகிறது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் வாகனங்களை, ஒரு குறிப்பிட்ட கிலோ மீற்றர் தூரம் பயணித்த பிறகு, திருத்தம் செய்கிறோம் அல்லவா? அதைப் போலத்தான், உண்ணாவிரதம் என்பது, நம் குடலை சுத்தம் செய்கிறது.

இந்த உண்ணாநோன்பு அல்லது உபவாசம் அல்லது உண்ணாவிரதம் அல்லது பட்டினி இப்படி நீங்கள் எந்தப் பெயரை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள்.

இதை மேற்கொள்கிறபோது என்ன ஆகிறது என்றால், இரத்த ஓட்டத்தை அது சீர்செய்கிறது. எங்கே அடைபட்டிருக்கிறதோ அந்த இடத்தை அது சுத்தம் செய்கிறது. உண்ணாநோன்பு இருக்கிறபோது, அடிக்கடி தண்ணீர் அருந்திக் கொண்டே இருப்பார்கள். சாக்கடையில் இருக்கும் கழிவுப் பொருள்கள், தண்ணீரைத் தூக்கி ஊற்றினால், போய்விடுகிறது அல்லவா? அதுபோலவே, தண்ணீர் உள்ளே போனவுடன் இரத்தத்தினுடைய திண்மை குறைந்து, இரத்தம் நீர்த்து விடுகிறது. எனவே, எங்கே அடைத்துக் கொண்டிருக்கிறதோ அது சரி செய்யப்பட்டு விடுகிறது.

சுகி. சிவம்

# வாசகர் திருமுகம்

## சைவக் கோயில்களில் நடக்கும் அன்னதானமும் அர்ச்சனைகளும்

இன்றைய காலகட்டத்தில் எங்கள் சைவக் கோயில்களில் திருவிழாக் காலங்களில் அன்னதானமும் அர்ச்சனையும் நடைபெறுவது யாவரும் அறிந்ததே. இன்று பக்தர்களுக்குப் பெரும் உதவியாகவும் திருப்தி தரக்கூடியதாகவும் நிகழ்வது இவைதான்.

இவற்றில் முதலாவதாக அன்னதான நிகழ்வைப் பார்ப்போம்.

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன் பெற்றான் பொருள்வைப்பு உழி'' என்கிறார் வள்ளுவர். உயரிய நோக்கோடு நடைபெறும் அன்ன தான நிகழ்வை ஒழுங்கான முறையில் நடத்த முடியவில்லையே ஏன்?

பேர்பெற்ற சைவக் கோயிலொன்றின் தேர்த்திருவிழாவுக்கு நானும் மனைவியும் மகளும் பேரக்குழந்தைகளும் சென்றோம். அன்னதான நிகழ்விலும் பங்குபற்றிச் செல்ல எண்ணி அங்கு சென்றோம். அங்கு பார்த்தால் எதுவித ஒழுங்கு முறையோ இல்லை. எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு இடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். ஆண்கள், பெண்கள்,குழந்தைகள் என்ற வேறுபாடு கிடையாது. ஒழுங்கு வரிசை கிடையாது. பெண்கள், குழந்தைகள் எல்லோரும் நெரிபட்டு, நசிபட்டுக் களைத்து இருந்து விட்டார்கள். நாங்களும் மூன்று முறை இதேநிலைதான். வேண்டாம் அன்னதானம் என்று வீடு வந்தோம்.

அதேபோல் தேரடி அர்ச்சனைக்கும் இதேநிலைதான். அர்ச்சனைத் தட்டோடு முண்டியடித்து இடிபட்டு அர்ச்சனைப் பொருள்களைக் கீழே கொட்டி நின்றால் (பலமணி நேரமாக) அர்ச்சனை செய்ய முடியவில்லை.

பின்பு ஒருவர் வந்து ஓர் உடைந்த ஏணி வைத்து ஏறி அர்ச்சனைத் தட்டைக் கொடுக்கச் சொன்னார். ஏதோ உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடுநடுங்கி ஏறி அர்ச்சனைக்குத் தட்டைக் கொடுத்தால் ஏனோ தானோ எனக் கொட்டிவிட்டு விபூதி, சந்தனம் தந்தார்கள். மிகுந்த களைப்புடன் இறங்கி வந்தேன். இதில் இன்னொரு விசேடம் தேங்காய் உடைப்பது தேரின் மேல் தட்டில். ஒருவர் தேங்காயை அடிக்கிறார். பாதித் தேங்காய் கீழே மண்ணில் விழுகிறது. இன்னொருவர் அதை எடுத்து மேலே அவரிடம் எறிகிறார். இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தது.

அடுத்ததொரு உலகப் பிரசித்தி பெற்ற கோயிலிலும் இதேநிலைதான். அர்ச்சனை நிகழ்வும் இடிபாடுதான். அந்தணப் பெருமகனார்க்கு கையில் காசுக் காணிக்கை செய்தார் ஒருவர். அவருடைய நட்சத்திரம் எல்லாம் சொல்லி விசேட அர்ச்சனை நடைபெற்றது. இதைவிட அன்னதான மடத்தில் பட்டபாடோ பெரும்பாடு. ஏதோ ஒழுங்கு முறையில் நடக்கும் என்று ஒரு மடத்துக்குச் சென்றோம். அங்கு பெண்களும் ஆண்களும் இடிபாடு. தாங்கேலாது சின்னஞ்சிறுசுகளுடன் அடுத்த மடத்துக்குச் சென்றால் அங்கும் ஒழுங்காக விடுவதாக வெயிலில் காய்ந்தோம். அதிலும் 2 வரிசை இடிபாடு. ஒருவிதமான உள்ளே சென்றால் உள்ளே வரிசையில் விட்டார்கள். சரிபரவாயில்லை என்று நின்றால் திடீரென இன்னொரு வரிசை இடிபாட்டில் மனைவியின் ஒரு கால் கதவுக்கு வெளியில் மறுகால் கதவுக்குள் ஒருவிதமாக விடுபட்டு உள்ளே சென்றாலும் இடிபாடு அங்கும்தான். கடவுளே நீதான் காக்க. ஏன் இந்த அன்னதானம்?

கவிஞர் வ.யோ

## உயர் கல்வி அமைச்சுக்குத் தமிழ்த் தட்டுப்பாடு

தமிழ்க் கொலைகள் வீதிகளிலும் அலுவலக அறிவித்தல் பலகைகளிலும் எனப் பொது நிலையங்களில் மும்மொழிகளாலும் இடம்பெற்றிருக்கும்.

பல அறிவித்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் குறிப்புகளில் அறிந்தும் அறியாமலும் தமிழ் கொலைகள் இடம்பெறுவதும் உரியவர்கள் (நானும் கூட) அவற்றைப் பார்த்தும் பாராமல் அலட்சியம் செய்வதும் திருத்தி வாசித்துச் செல்வதும் பத்திரிகைகளில் கண்டன எழுத்துக்களால் அறிக்கை விடுவதையும் தவிர வழுக்கள் மீளத் திருத்தப்படுகின்றனவா? என்பது கேள்விக்குறியே.

இத்தகைய தமிழ்த் தட்டுப்பாடு, கல்வித் துறைசார் உயர்கல்வி அமைச்சுக்கும் ஏற்பட்டுள்ளமையே கவலைக்குரிய விடயம். உயர்கல்வி அமைச்சால் பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குவதற்கான விண்ணப்படிவங்கள் அடங்கிய கடிதம், தபால் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்விண்ணப்பப் படிவத்துடன் உயர்கல்வி அமைச்சின் கடிதம், அமைச்சின் பிரத்தியேக கடிதத்தாளில் அச்சிட்டு இணைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தில் குறிப்பிட்ட அமைச்சின் பெயரானது ''உயழ கல்வி அமைச்சு'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கொலையைத் திருத்தியமைப்பதற்கு இந்த அமைச்சில் உயர் பதவியிலிருப்போருக்கு ''உயழ'' என்ற வழு தென்படவில்லையா? அல்லது அவர்களது பாராமுகமா இதற்குக் காரணம்?

இவற்றைவிட இந்த அமைச்சின் கடிதத்தின் விடய உள்ளடக்கத்திலும் இத்தகைய கொலைகள் பல இடம்பெற்றுள்ளன.

1. படிமுறை I எனக் குறிப்பிட்டுள்ள பந்தியின் ஆரம்பத்தில் தேசிய அடையாளா அட்டை பிணையாளிகளின் தேசிய அடையாளா அட்டைகள்.

2. அதே பந்தியில், கடன்தொகைக்கு ஏற்புடைய விநியோக கட்டளைப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டம்

(வேண்டம் என்பது வேண்டும், வேண்டாம் என்ற திரிபு நிலை)

3. படிமுறை III இன் கீழுள்ள பந்தி இலக்கம் 3 இல் பணத்தொகையைச் செலுத்தி இக்கணினிணை பெற்றுக்கொள்வதற்கு...

என்றவாறு இடம்பெற்றுள்ள வழுக்களை உரியவர்கள் கவனத்தில் எடுத்துச் செய்வன திருந்தச் செய்வார்களா?

கீதா கணேஷ்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## மணி கட்டுவது யார்?

ஈழத்து இந்துப் பெருமக்கள் கீரிமலையில் தீர்த்தமாடுவதை புனித காரியமாகக் கருதுகிறார்கள். முற்காலத்தில் அது நோய் தீர்த்ததலம் என்பது அதன் சரித்திரச் சான்றும் கூட. இன்று எம்மவர்கள் சிலரே அத்தி பூத்தாற்போல் பயந்து பயந்து பதுங்கிச் சென்று தீர்த்தமாடுகிறார்கள். இருந்தும் மரணித்தவர்களின் அந்தியேட்டி, திவசம் என்று கிரியைகளும் செய்கிறார்கள்.

தென் இலங்கையிலிருந்து வரும் சிங்கள யாத்திரிகர்கள் மாதகல் கடற்கரையில் சங்கமித்தை அந்தக் காலத்தில் அரச மரக் கிளையை இந்தியாவிலிருந்து கொண்டு வந்து இறங்கிய துறையில் புதிதாக அமைந்திருக்கும் பௌத்த விகாரையைத் தரிசிக்க கீரிமலையூடாகத் தமது பயணத்தைச் செய்கிறார்கள். இந்த இடம் கீரிமலையிலிருந்து 9 கிலோமீற்றர் தூரமாகும். ஏன் அந்த மாதகல் கடற்கரை விகாரையை வேறு பாதையால் அடைய முடியாதா?

அந்த யாத்திரிகர்கள் மனதில் எந்தத் தவறும் இல்லை. அவர்கள் கீரிமலைக் கேணியில் குளிப்பதை விரும்பவில்லை. நிச்சயமாகப் பெண்கள் கீரிமலையைச் சுற்றிப் பார்க்கவே விரும்புகிறார்கள். இங்கு ஆண்கள் குளிக்கும் கேணியில் பெண்களும் நீராடுகின்றனர். இதற்கு விளக்கமளிக்க எவருமே இல்லை.

இது ஒரு புனித தீர்த்தம் ஆசாரங்களைப் பின்பற்றி ஆண்கள் ஆண்களின் கேணியிலும் பெண்கள் பெண்களுக்கானகேணியிலும் தாராளமாக நீராடிச் செல்லலாம் என்று எடுத்துக் கூறுவதற்கு எவரும் இல்லை. அவர்களின் சிந்தையில் தவறு இல்லை. ஆனால் இது ஒரு வகையான கலாசாரச் சீர்கேடாகவே கருத இடம் உண்டு.

கீரிமலை புனித நகராகப் பிரகடனப் படுத்தப்பட்டால் அதன் தலையெழுத்தே மாறிவிடுமோ என நினைக்கும் பொழுது பயமாக இருக்கிறது. எமது ஆதங்கத்தை யாரிடம் எடுத்துச் சொல்வது?

- வாசகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: 0213215792
0774583278

## புதிய வீடு விற்பனை

இருபாலைச் சந்தியில் புதிதாக சீரமைத்த வீடு மேல்மாடி கீழ் மாடியில் 5 அறைகள், ஒரு அலுவலக அறை, 2 சமையல் அறைகள், 2வரவேற்பறைகள், குளியல் அறை, கிணறு தண்ணீர்த் தாங்கியும் உண்டு. மேற்குப் பக்கம் பருத்தித் துறை வீதி, கிழக்குப் பக்கமும் வீதி, தெற்குப் பக்கமும் வீதி உள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
077 4427689, 077 6660690, 021 3219747

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல செரமிக்ஸ் கடை ஒன்றுக்கு யாழ். ஸ்ரான்லி வீதி, பலாலி வீதியில் (கந்தர்மடம் சந்திக்கு முன்) ஓரளவு விசாலமான கடை அல்லது வீடு உடன் தேவை.

தொடர்பு: 0777578277,
0772510994, 0726801780

## வாடகை

உரும்பிராய் சந்தி பழைய தபாற் கந்தோர் ஒழுங்கையில் விசாலமான பெரிய வீடு, ஒரு வருட வாடகைக்கு விடப்படும். அல்லது உடன் விற்பனைக்கு. தொடர்பு (சனி, ஞாயிறுமட்டும்)
0777901367

## விற்பனைக்கு

கொழும்பிலிருந்து கொண்டுவரப் பட்ட ஒரு வயது நிரம்பிய டோமன் ஆண் நாய் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: DR. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் மேற்கு, தொ.பே: 077 1909378


# முல்லேரியா கொலை போன்ற நிலை தொடர்ந்தால் சர்வதேசம் அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்

## அமைச்சர் வீரவன்ஸ எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 15

அரசியல்வாதி ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு இன்னொரு மக்கள் பிரதிநிதி ஒருவரை கொலை செய்வது போன்ற வெறுக்கத்தக்க நிலை உருவாகுமாயின் சர்வதேசமும் எதிர்க்கட்சிகளும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் - என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள சட்டத்துக்கு அப்பால் சில அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர். கையில் கிடைக்கும் ஆயுதங்களினால், துப்பாக்கிகளினால் விலங்குகள்போல் மக்களைக் கொலை செய்கிறார்கள். இதனால் இந்த நாட்டில் நல்லதொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், எந்த ஒரு கட்சிக்குள்ளும் அரசியல் முரண்பாடுகள் இருக்கலாம். இருப்பினும் ஒருவர் மீது ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டு முன்னெடுக்கப்படும் அரசியலுக்கு நாம் தொடர்ந்தும் இடமளிக்கக் கூடாது.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துப் பெற்ற வெற்றியை பாதாள உலக அரசியல்வாதிகளால் மழுங்கடிக்க இடமளிக்கக் கூடாது - என்று கூறினார்.


## DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING

100% செய்முறை பயிற்சிகளுடன் கூடிய 5 நாள் முழுநேர பயிற்சி நெறி

- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- விரிவுரையாளர்கள் கொழும்பிலிருந்து
- ஒரு குழுவில் 10 பேர் மாத்திரமே
- 100% தொழில் வாய்ப்பைப் பெற
- வயதெல்லை கிடையாது

இலவச Study pack

- Computer Assembling - O.S Installation
- Partitions and formatting - Trouble shooting
- Introduction to LAN networking

ஆரம்பம் 28/10/2011

பயிற்சிக் கட்டணம் Rs. 5950/=

APSS Engineering (Pvt) Limited
242, Dr. Subramaniam Road
Chunnakam. 021-2241731
Hot Lines: 077 2306642
077 2418804, 077 3867695

City & Guilds


# பிற்போடப்பட்டுள்ளது

கெருடாவில், ஒக். 15

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்தால் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-253)


## உடனடி வேலை வாய்ப்பு

பல நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல்யமான கம்பனி யாழ்ப்பாணம் வந்துள்ளது. விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (வயதெல்லை 18-30) உங்கள் சுயவிபரக்கோவையினைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். விண்ணப்ப முடிவுத் திகதி 31.10.2011

வி.இ: 4185,மே/பா, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## SHAMROCK

A/L 2012 & REPEAT
PAPER CLASS PHYSICS
புலங்கள் Sat,Sun 4P.M
S.சசி B.Sc
CHE:- MA.நிரோஜன் B.Sc
Wed 3.30, Thu 6.15 AM
புலமைப்பரிசில் (5)
Mr.அன்ரன்
(பிரபல கல்லூரி ஆசிரியர்)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### நாகரத்தினம் திபாகர்

*(Sociology B.A (Hons)*



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக 27 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் கலைப்பிரிவில் பட்டத்தைப் பெற்ற நாகரத்தினம் திபாகர் அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பதவிகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்:
மல்ரி போன் சொப்,
*V.V.T. Road, Uduppiddy.*

உரிமையாளர்: *V.Vasanthan.*

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2011

காலம் - 10.11.2011 வியாழக்கிழமை
இடம் - கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
தலைமை - திரு.க.இலங்கநாதன் (சங்கத் தலைவர்)

மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 10.11.2011 வியாழக்கிழமை நடத்தத் தீர்மானித்திருப்பதனால் அங்கத்தவர் பிரேரணை இருப்பின் தங்கள் பிரேரணைகளை 28.10. 2011 வெள்ளிக் கிழமைக்கு முன் கிடைக்கக்கூடியதாகச் சங்க செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

ப.பரார்த்தனன்,
செயலாளர்.


## அவுஸ்திரேலியா செல்ல விரும்புகின்றீர்களா?

உங்களுக்குரிய பூரண ஆலோசனைகள் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**திசைகாட்டி**

(முன் மாதிரியான ஆலோசனை நிறுவனம்)
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
0214914527

## German, Swiss மொழிகள்

German Embassy இல் கேட்கப்படும் Certificate க்கு ஏற்றவாறு . A1-A2 அடுத்த வகுப்புக்கள் ஆரம்பமாகிறது.

No.10, Palaly Road, Jaffna. 0771604823.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம் 1978 புனர்பூசம் 4ஆம் பாதம் செவ்வாய் குற்றமற்ற 20¾ கிரகபாவமுடைய டாக்டர் (MBBS) மணமகனுக்கு அரச சேவையிலுள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள்.

தொடர்பு: 0213210054
0212228748

## காணி தேவை

தெல்லிப்பழையை அண்டிய பகுதியில் வீட்டுடன் அல்லது வெற்றுக்காணி தேவை.

தொடர்பு:0718034207

## விற்பனைக்கு

சுத்தமான இன ஜேர்மன் செப்பேட், அல்சேசன் நாய்க்குட்டிகள், டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு 0776687716

## விற்பனையாளர் தேவை (ஆண்கள் மட்டும்)

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

த.குமாரசாமி அன் சன்ஸ்,
248/1
K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.


## ஆண்டுகள் பதினொன்று கடந்தும் என்ன பரிதவிக்கின்றது எங்கள் உள்ளம் அம்மா

திருமதி தையல்நாகேஸ்வரி அரியநாயகம்

(தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை)



தோற்றம்: 14.08.1946
மறைவு: 16.10.2000
திதி: 15.10.2011

பதினொரு ஆண்டுகள் கடந்தும் அம்மா
பரிதவிக்கின்றது எங்கள் உள்ளம் இன்றும்
தாதியாய் சமூகத்தில் சேவைகள் பல ஆற்றி
தாய் பணியை செவ்வெனவே எமக்கு ஆற்றி
பாரினில் நாம் சிறப்புடன் வாழ்வதனை காணாமல்
பாதிவயதினிலே சிவன்பாதம் அடைந்திரே
ஆறாது அம்மா உன் நினைவுகள் எமக்கு
ஆண்டுகள் பல கடந்து போயினும்

81/2, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





2011.10.06 ஆம் திகதியன்று நல்லாசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருதை ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்ட எமது வித்தியாலய ஆசிரியர்களான திரு.சி.சிவகுமார், திருமதி அ.கருணாகரன் ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

திரு.சி.சிவகுமார் — திருமதி அ.கருணாகரன்

பாடசாலைச் சமூகம்,
யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி., மீசாலை.

## மரண அறிவித்தல்

### பரமநாதன் பொன்னையா



நெல்லண்டை வீதி, தும்பளையைச் சேர்ந்த பரமநாதன் பொன்னையா 13.10.2011 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பரமநாதன் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மூத்த மகனும் கதிரைவேற்பிள்ளை - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் பர்வதபத்தினிதேவியின் அருமைக் கணவரும் அரவிந்தன் (ஹாட்லிக் கல்லூரி), முரளீதரன் (விசுவமடு மகா வித்தியாலயம்), நந்தகோபன் (சிங்கப்பூர்), சிறீதரன் (லண்டன்), பெறாமகள் சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), சுஜிதா (புதுக்குடியிருப்பு பிரதேச சபை), பிரியா (சிங்கப்பூர்), தயாளன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் அபிஷங்கர், சங்கவி, அபிநயனி ஆகியோரின் அன்புப் பேரனும் சிவநாயகி, சிவநாதன் (ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை), காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் சகோதரரும் கமலநாதன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 16.10.2011 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்தில் தகனம் நடைபெறும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெல்லண்டை வீதி,
தும்பளை, பருத்தித்துறை.

(9031) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


**மேடம்:**
சக ஊழியர்கள் அல்லது நண்பர்கள் சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை, இன்றே சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். மற்றவர்கள் மத்தியில் உங் களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்வதில் அக்கறை காட்டு வீர்கள். பெண்கள் தொடர்பான விடயங்களில், பட்டும் படாமல் நடக்கவும்.


**இடபம்:**
நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களைத் தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். எளிதில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்று, நீண்ட நேரத் திற்கு இழுத்தடிக்கலாம். மறைமுக எதிர்ப்புகள், போட்டிகளைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக பிணை கொடுக்கும் சூழ்நிலை உருவாகலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலைப்பளு உண்டாகும்.


**மிதுனம்:**
எந்த விடயத்திலும் தெளிவான முடிவெடுத்து, மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில், கணிசமான பலன் கிடைக்கலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும்.


**கடகம்:**
வெளியூரில் வசிக்கும் உறவினர் ஒருவர், உங்களின் வீட்டிற்கு வரலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைக்க முடியாமல், நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளால் அவதிப் படலாம். சிலர் உங்களின் ஆசை, உற்சாகத்தைத் தூண்டும் வகை யிலான தகவல்களைச் சொல்லலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். குதர்க்கமான பேச்சுகளைத் தவிர்க்கவும்.


**சிங்கம்:**
கடந்த கால அனுபவம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஒருவரை அறிந்து கொள்வீர்கள். சில விடயங்களில் பிறரிடம் ஏமாறாமல் இருக்க, எச்சரிக்கை அவசியம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். பிடித்தமான பண்டமாக இருந்தாலும், அதிகமாகச் சாப்பிட வேண்டாம்.


**கன்னி:**
விளையாட்டாகச் செய்த காரியங்கள் விபரீதமாக முடியலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். திட்டமிட்ட காரியம் ஒன்றைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். தண்டச் செலவுகள் நேரும்.


**துலாம்:**
நண்பர் ஒருவரை நம்பி இறங்கிய காரியங்கள், நல்ல விதமாக முடியலாம். உங்களின் குடும்பப் பெருமை பற்றி, மற்றவர்களிடம் பேசி மகிழ்வீர்கள். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். கல்மனம் படைத்த சிலரிடமும் கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பரபரப்பாகச் செயற்படும் நாள்.


**விருச்சிகம்:**
சிலரிடம் கோபம், வேகமாக நடந்து கொள்வீர்கள். கடுமையாக இழுத்தடிக்கலாம் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடியும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் தலையில் சுமத்தித் தப்பித்துக் கொள்வீர்கள். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். மதிப்பு, கௌரவம் கூடும்.


**தனுசு:**
மற்றொருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல், அதை நீங்களே செய்ய நேரிடலாம். எதிர்பாராத தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். உறவினர் அல்லது நண்பர் ஒருவருடன் சேர்ந்து, வெளியிடங்களுக்குச் செல்லலாம்.


**மகரம்:**
உறவினர் ஒருவர் தங்களின் வேலைக்காக, உங்களின் உதவியை நாடலாம். உங்களுக்குத் தெரிந்த ஒருவரை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள். நண்பர்கள் அல்லது சக ஊழியர்கள் ஆதாயம் பெற, நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். சிலரின் தகுதிக்கு மீறிய செயற்பாடுகளைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள்.


**கும்பம்:**
பல மணி நேரமாகும் என நினைத்த வேலை ஒன்று, நொடிப்பொழுதில் முடியலாம். சில பொருள்களை சகாய விலைக்கு வாங்குவீர்கள். பிள்ளைகளின் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தப்பு எனத் தெரிந்தும், சில காரியங்களை துணிச்சலாகச் செய்வீர்கள். பெண்களால், சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். சுகமான அனுபவம் உண்டு.


**மீனம்:**
அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம். சில பொருள்களை கடனுக்கு வாங்கலாம். நீண்ட நாள்களாகத் தள்ளி வைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். சிறிய பிரச்சினை ஒன்றுக்காக ஒருவருடன் பெரிய அளவில் வாக்குவாதம் செய்யலாம். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். சோம்பல் கூடும்.

# சனியைப் போல் கொடுப்பவனுமில்லை கெடுப்பவனுமில்லை

பூமியில் பிறக்கும் ஒவ்வொரு மனிதரும் பிறக்கின்ற நேரத்தில் நிலவும் கிரக நிலைகளின் அடிப்படை யிலேயே அவரவர் வாழ்வில் சுக துக்கங்களை அனுபவிக்க நேர்கிறது என்பது இந்து மதத்தவர்களின் நம்பிக்கை ஆகும்.

அரசனாக வளமான சுகவாழ்வு வாழ்வதும் ஆண்டியாக வறுமையில் வாடுவதும், சிறந்த கல்விமானாகத் திகழ்வதும் நோய் நொடிகளால் வறுமையில் வாடுவதும், துன்பப்படுவதும், கல்வியில் சிறந்து கல்விமானாக திகழ்வதும், நல்ல தொழில் அமைவதும், நல்வழிப்படுத்தும் நல்ல குரு அமைவதும், நல்ல மனைவி வாய்ப்பதும் ஜாதகத்தில் கிரகங்களின் அமைப்பைப் பொறுத்தே அமைவதாகும். கிரகங்களின் தாக்கங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும், கெடுதல்களிலிருந்து விலகிக் கொள்ளவும் பல்வேறு பரிகாரங்களையும், சாந்தி ஹோமங்களையும், கிரக வழிபாடுகளையும் நமக்காக நம்முன்னோர்கள் வகுத்துள்ளார்கள்.

மழை பெய்வது இயற்கை நியதி அதை எம்மால் தடுக்க முடியாது. ஆனால் மழையில் நனையாது எம்மைப் பாதுகாக்க ''குடை'' பிடித்துக் கொள்வது போல், கிரங்களின் தாக்கத்திலிருந்து விடுபட இறை வழிபாடுகளை நம் முன்னோர்கள் நமக்கு வகுத்து வைத்தனர்.

வான் மண்டலத்தில் சஞ்சரிக்கும் கிரகங்களின் இருப்பு நிலைகள் மனித வாழ்வில் சகலருக்கும் வெவ்வேறு வகையான நன்மை தீமைகளை ஏற்படுத்துகின்றன. என்று நம் முன்னோர்கள் கண்டறிந்தனர். இதிலிருந்து பிறந்ததே ஜோதிட சாஸ்திரம், வான சாஸ்திரம் மற்றும் கணித சாஸ்திரம் என்பவை ஆகும்.

மனிதனுக்கு ஆரோக்கியத்தைத் தருபவன் சூரியபகவான். கீர்த்தியை சந்திரனும், செல்வத்தை அங்காரகனும் நல்ல புத்தியை புதனும் கௌரவத்தை குருபகவானும், நாவன்மையை சுக்கிரனும், தைரியத்தையும் நீண்ட ஆயுளையும் சனிபகவானும், நல்வாழ்வை ராகுவும், குலவளர்ச்சியை கேதுவும் யாவர்க்கும் அருளுவதாக நம் முன்னோர் வகுத்துள்ளனர்.

நவக்கிரகங்களில் 'ஈஸ்வரன்' என்ற சிறப்புப் பெயரால் சுட்டப்படுபவர் சனீஸ்வரன் ஒருவரே.

சனீஸ்வர பகவான் சர்வ வல்லமை பெற்றவர் எவருக்கும் அஞ்சாதவர், நேர்மை தவறாத நீதி தேவன் எவரொரு வருக்கும் பாரபட்சம் காட்டாதவர். தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் அனைவரையும் ஆட்டி வைப்பவர். மும்மூர்த்திகளையும் கூட அவர் விட்டு வைக்கவில்லை.

தன் பார்வையில் வரும் வேளையில் அவர்களுக்கும் சிரமங்களை ஏற்படுத்துபவர் சனி பகவானுக்கு ஆட்சி வீடாக மகரம், கும்பம் ஆகிய ராசிகளும் உச்சம் பெறும் வீடாக துலாராசியும் அமைவதுடன், புதன், சுக்கிரன், ராகு, கேது, நண்பர்களா கவும், சூரியன், சந்திரன், செவ்வாய் பகைவர்களாகவும், குருபகவான் சமமானவராகவும் அமைந்துள்ளனர். மேஷ ராசியில் நீசமடைபவர் 3,7,10 ஆம் வீடுகளைப் பார்ப்பவர். இதில் 3 ஆம் பார்வையும் 10ஆம் பார்வையும் வலுமிக்கதாகும்.

### மனமுருகி வேண்டுவோர்க்கு நல்லருள் புரிபவர் சனீஸ்வர பகவான்

அயோத்தி மன்னனான தசரதச் சக்கரவர்த்தி குடிமக்களின் நன்மையே பிரதானமாக கருத்தில் கொண்டு ஆட்சி புரிந்தவர் ஒரு சமயம் ஜோதிட வல்லுனர்கள் தசரத மன்னனிடம் ''மன்னா வெகு விரைவில் சனிபகவான் 'கார்த் திகை' நட்சத்திரத்திலிருந்து 'ரோஹினி' நட்சத்திரத்தில் பிரவேசிக்கப் போகிறார். அந்தக் கால கட்டத்தில் நாட்டில் மழை பொழியாது, பஞ்சம் பட்டினி நிலவும், நோய்கள் பெருகும் மக்கள் பெருமளவில் மடிவர் எனக் கூறினர். அதிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் காக்க வேண்டி வசிஷ்டர் முதலான முனிவர்களிடம் ஆசி பெற்ற தசரத மன்னன் சனி பகவானைக் காணச் சென்றான். சுயநலம் கருதாமல் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக தனது கையிலிருந்த வில்லை யும், அம்பையும் தேரிலே போட்டுவிட்டுக் கீழே இறங்கி சனிபகவானை மும்முறை வலம் வந்து வணங்கித் துதிசெய்தான்.

தசரத மன்னனின் தோத்திரத்தில் மகிழ்ந்த ஸ்தோத்திரப் பிரியனான சனிபகவான் தசரதா, வேண்டும் வரம் கேள் தருகிறேன் என்றான்.

தாங்கள் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து ரோஹினி நட்சத்திரத்துக்கு பிரவேசிக்கும் போது நாட்டில் எந்த வித குறையும் இல்லாது மக்கள் சுபீட்சமாக வாழ அருள்வேண்டுமென தசரத மன்னன் வேண்டி நின்றான்.

கருணை வள்ளலான சனீஸ்வரன் ''தசரதா உன்விருப்படியே ஆகட்டும் நீ என்மீது பாடிய ஸ்தோத்திரத்தை யார், யார் எனக்கு விருப்பமான சனி வாரத்தில் பாராயணம் செய்து வன்னிப் பத்திரத்தால் அர்ச்சனை செய்து வழிபடுகிறார்களோ அவர்களுக்கு எந்தத் தீமையும் ஏற்படாது '' என அருளிச் செய்தார்.

### அண்டசராசரங்களை ஆளும் ஈசனையே பீடித்தவர் சனிபகவான்

அங்கிங்கெனாதபடி எங்கும் ஜோதி மயமாய் விளங்கும், விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டாத மெய்ப் பொருளாய் அம்பலத்தில் ஆடும் உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவனான பரமேஸ்வரனையே சனிபக வான் பீடிக்கின்ற ஒரு கிரக வேளை ஏற்பட்டது. அதை ஈசனிடமே கூறினார். சனிபகவான் உன்னால் என்னைப் பிடிக்க முடியாது என்று கூறிய இறைவன் மூன்றே முக்கால் நாழிகை நீர்க் குகையில் மறைந்திருந்தார். பின்னர் வெளியே வந்த போது சனிபகவான் எதிரில் தோன்றினார். ''உன்னால் என்னைப் பீடிக்க முடியவில்லையே'' என்று சிவன் கூறினார்.

அதற்கு சனிபகவான் "எவராயிருந்தாலும், பாரபட்சம் பாராமல் உரியவேளை வரும்போது நீதிதவறாது நீ உன் கடமையைச் செய்ய வேண்டும்' என்று எனக்கு வரமளித்த கட்டளையை நிறைவேற்றவே உங்களையும் பீடிக்கின்ற நேரம் வந்த போது அது பற்றி உங்களிடம் தெரிவித்தேன்.

நீங்களோ எனக்களித்த வரத்தையும், கட்டளையும் புறந்தள்ளி உங்கள் வலிமையைக் காட்ட தொடங்கினீர்கள். உங்களுடைய கட்டளையின் முன் உங்களுடைய வலிமை பயனற்றுப் போய் விட்டது. அதனாலே தான் அண்டசராசரங்களையும் ஆளுகின்ற ஈசனாகிய தாங்கள் எனக்குப் பயந்து மூன்றே முக்கால் நாழிகை மறைந்திருக்க வேண்டி நேர்ந்தது, எனவே இதுவே நான் உங்களைப் பீடித்த காலமாகும் என்றார் சனி பகவான்.

பரமேஸ்வரனும் மன மகிழ்ந்து நான் எனது வரத்தையோ, கட்டளையோ மறக்கவோ அலட்சியப்படுத்தவோ இல்லை. என் வரம் பெற்ற நீ, நீதி தேவன் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டவே இவ்வாறு செய்தேன் என்று கூறி மேலும் பலவரங்களையும், அளித்ததோடு அகில உலகையும் ஆளும் ஈசன் என்று கூடப் பாராமல் எனது கட்டளையை மதித்து உனது கடமையைச் செய்ததால், ஈஸ்வரனாகிய என்னையே பீடித்தால் உன்னையும், ''சனீஸ்வரன்'' என்றே எல்லோரும் போற்றட்டும் என வரமளித்தார்.


### ஏழரைச்சனி

• ஒருவருடைய ஜாதகத்தில் ஜென்ம ராசியில் இரண்டரை (2 1/2) ஆண்டும் முன்னய ராசியில் (2 1/2) ஆண்டும், ஜன்மராசிக்கு அடுத்த ராசியில் 2 1/2 ஆண்டுமாக ஏழரை (7 1/2) ஆண்டுகள் ஏழரை நாட்டுச் சனியின் காலமாகும்.

இதற்கிடையில் சனி வக்ரம் பெற்று பின்னோக்கிச் செல்வதுமுண்டு இந்தக் காலத்தில் ஜாதகருக்குப் பல்வேறு துன்பங்கள், இடையூறுகள், கஷ்டங்கள் வந்துசேரும், மேலும் கடகராசி, சிம்மராசி, விருச்சிக ராசிகளில் சஞ்சரிக்கும் இரண்டரை ஆண்டு காலம் அந்த ராசி காரர்களுக்கு மிகுந்த சிரமத்தைச் சனிபகவான் கொடுப்பார்.

ஒருவருடைய ஜன்ம ராசிக்கு எட்டாம் இடத்தில் சஞ்சரிக்கும் (2 1/2) இரண்டரை ஆண்டு காலம் அட்டமத்துச் சனி காலமாகும். ஜன்மராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்யும் போது கண்டச் சனி காலமாகும். சனி பகவான் 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் காலம் அர்த்தாஷ்டம சனி காலமாகும்.

இந்தக் காலங்களில் ஆசார சீலராக ஆலய வழிபாடுகள் செய்து சனி பகவானுக்கு வன்னி பத்திரத்தாலும், கருங்குவளை மலர்களாலும் அர்ச்சனை செய்வித்து, கறுப்பு வஸ்திரம் சாத்தி வழிபட்டு வன்னி சமித்து, கருங்காலி, எள்ளு தானியங்கள் கொண்டு விஷேட திரவியங்களால் ஹாமம் செய்து, எள்ளெண்ணைத் தீபம் ஏற்றி, காக்கைக்கு எள் அன்னம் வைத்து மன முருகி வழிபட்டு, சனீஸ்வரனுக்கு பிரீதியான துதிகள் பாடி, சனீஸ்வர அஷ்டகம், கோளாறு பதிகம் பாராயணம் செய்து வந்தால் சனீஸ்வர பகவானின் அருள் கிட்டும்.



கலாநிதி ஸ்ரீ ஜயப்பதாஸக் குருக்கள்
சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம் - கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் வகையில் நாட்டில் 7 ஆயிரம் தொழிற்சாலைகள்

கொழும்பு, ஒக்.15

உரிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமின்றி 7,000 வரையிலான தொழிற்சாலைகள் நாடளாவிய ரீதியில் இயங்கிவருகின்றன என்று மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அனுமதிப்பத்திரம் மாத்திரமின்றி, வரையறுக்கப்பட்ட நடைமுறை ஒழுங்குகளும் பின்பற்றப்படாது செயற்படுத்தப் பட்டுவரும் இத்தகைய தொழிற்சாலைகளால் சுற்றுச்சூழலுக்கு பெரிய அளவிலான பாதிப்பு ஏற்பட்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சபையின் 400 உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி இத்தகைய தொழிற்சாலை நிர்வாகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்ட விரோதமான வகையில் இயங்கிவரும் இருநூறு வரையிலான தொழிற் சாலைகளின் நிர்வாகங்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் தற்போது நீதிமன்ற விசாரணையில் இருந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-ரு)



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியர் தின நிகழ்வின்போது பாடசாலைஅதிபர் ஜெபறோ செல்வநாயகம் அடிகள் மற்றும் ஆசிரியர்கள் திருப்பலிக்கு முன்னதாக வரவேற்கப்படுகின்றனர். (135)

# காணிகளைப் பதிவு செய்வதில் தென்மராட்சி மக்கள் ஆர்வம்

தென்மராட்சி,ஒக்.15

தென்மராட்சிப் பிரதேசத்தில் காணிகள் பதிவு செய்வதில் பிரதேச மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் .

பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் படிவங்கள் வினியோகம் ஆரம்பித்து குறுகிய நேரத்தில் படிவங்கள் தீர்ந்து போய்விடுகின்றன.

நேற்றுமுன்தினம் நண்பகல் வரை 37 ஆயிரம் படிவங்கள் கிராம அலுவலர்களால் வினியோகிக்கப்பட்ட போதிலும் இந்தத் தொகையின் இரு மடங்கு படிவங்கள் இன்னும் தேவையாக உள்ளது என்று கூறப்பட்டது.

படிவ வினியோகத்தின் பிரகாரம் ஒரு லட்சம் படிவங்கள் வினியோகிக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் படிவங்கள் பதிவு செய்வதில் ஆர்வமாக உள்ளதால் தமக்கு உள்ள காணிகளின் தொகைக்கேற்ப படிவங்களைப் பெற்று வருகின்றனர்.

சிலருக்கு குடியிருப்புக் காணி, தென்னந்தோட்டக் காணி, மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக் காணி, வயற்காணி பனங்கூடல் காணி உட்பட பல்வேறு காணிகள் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் அந்தந்தக் கிராம அலுவலர்களிடம் படிவங்கள் பெற்று வருகின்றனர்.

படிவங்கள் பெறுவதற்கென உள்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் வசிப்பவர்களும் வெளிநாடுகளில் வசிப்பவர்களும் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் படிவங்கள் பெறுவதைக் காணமுடிகின்றது. (ம-207)

# நிர்வாகசேவைக்கு தமிழ் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக்.15

இலங்கை நிர்வாக சேவையில் தமிழ் அலுவலர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது.

இறுதியாக நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப்பரீட்சையில் 150 இற்கும் மேற்பட்டவர்கள் நியமனம் பெற்றபோதிலும் தமிழ், முஸ்லிம்பட்டதாரிகள் இடம்பெறாமை நாடாளுமன்ற உறுப்பினர்களால் நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் தற்போது தமிழ், முஸ்லிம் பட்டதாரிகளிடம் இருந்து இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏற்கனவே இருந்த வயதெல்லை 30 ஆக மாற்றப்பட்டுள்ளதுடன் தமிழ் மொழியை எந்தவொரு பாடத்திலும் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை கடந்த 7 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (ச-86)

# புத்தகக் கண்காட்சியைப் பார்வையிட பெருந்திரளாகச் செல்லும் மக்கள்

தென்மராட்சி,ஒக்.15

தேசிய வாசிப்பு மாதத்தை யொட்டி சாவகச்சேரி நகரசபைப் பொது நூலகத்தில் நடை பெறும் புத்தகக் கண்காட்சியை நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகளவு பொது மக்களும் மாணவர்களும் பார்வையிட்டனர்.

நகரசபை பொது நூலகத் தினரும் யாழ்ப்பாணம் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டேர்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியை நகர சபை தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்தக் கண்காட்சியை மாணவர்கள், கல்விமான்கள், வாசகர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டு வருகின்றனர். இந்தக் கண்காட்சி இன்று சனிக்கிழமை 5 மணி வரை இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ச-207)

# தீபாவளியையொட்டி கடைகள் திறக்கப்படும்

தென்மராட்சி, ஒக்.15

தீபாவளிப் பண்டிகையையொட்டி சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்ற எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் 23 ஆம் திகதியும் திறந்திருக்கும் என்று வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார். (ச-207)

**தேவை**

யாழ்ப்பாணம் நகரச் சுற்றாடலில், 4,000 சதுர அடி விஸ்தீரணம் உள்ள கட்டடம் ஒன்று அல்லது 2 பரப்புக் காணி உடன்தேவை. தொடர்பு கொள்ளவும்: mollanka@gmail.com

**தேவை**

கொழும்பில் நீண்ட காலமாக இயங்கும் பிரபல கைத்தொழில் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் புதிய ஆலை ஒன்றை நிறுவ உள்ளது. யாழ்.நகருக்கு அண்மித்ததாகவோ, போக்குவரத்து வசதிகள் கொண்ட சற்றுத்தொலைவான இடத்திலோ ஐந்து அல்லது இரண்டு ஏக்கர் காணி உடனடியாகத் தேவைப்படுகிறது. விவரங்களுக்கு: mollanka@gmail.com என்ற மின்னஞ்சலுக்குத் தொடர்பு கொள்ளவும்.

**Dr.Pimple**
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது.
வவுனியா-19,20 ஆகிய திகதிகளில்.
முன் பதிவுகளுக்கு-021-2220288.

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.
Head Office Colombo - 011 4874854

**வீடு வாடகைக்குண்டு**

4 வாகனங்களுக்கு மேல் தரித்து நிற்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு கொக்குவில் கேணியடியில் உண்டு. அரச/ அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0773058872, 0779799706

**பாடசாலை பஸ்சேவை**
SAVE YOUR CHILDREN

சுன்னாகம், அச்செழு, மாசிவன்சந்தி, நீர்வேலி, கோப்பாய், இரு பாலை ஊடாக யாழ்ப்பாணம் நகரில் உள்ள பிரபல பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான பஸ்சேவை.
THARGA: 021 2240026,0774129250, 0779217375

**சந்நிதியான் ஆச்சிரமம்**
இலவச வைத்திய சேவைக்கு அகவை பத்து
சேவையின் செம்மல்களுக்குப் பாராட்டு விழா

*14.10.2001 இல் சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஆரம்பிக்கப்பட்ட இலவச மருத்துவ சேவைக்கு இம் மாதம் வயது பத்து நிறைவடைகிறது.
*ஆரம்பகாலம் முதல் இற்றைவரை எம்மோடு இணைந்து பணியாற்றிய, இன்றும் பணி செய்து வரும் வைத்திய சேவையின் செம்மல்களை நன்றியுடன் கௌரவிக்கும் விழா.
இடம்: சந்திநியான் ஆச்சிரம வைத்தியசேவை மண்டபம்.
காலம்: 16.10.2011 ஞாயிறு காலை 09.00 மணி

வரவேற்புரை
டாக்டர் அ.செந்தில்குமரன் அவர்கள்
(பல் வைத்திய நிபுணர்)
பிரதம விருந்தினர்
திரு.ஆ.கேதீஸ்வரன் அவர்கள்
(யாழ்.மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர்)
சிறப்பு விருந்தினர்கள்
டாக்டர் க.மயிலேறும்பெருமாள் அவர்கள்
(வைத்திய அதிகாரி, மாவட்ட வைத்தியசாலை- -வல்வெட்டித்துறை)
திரு.இ.வரதீஸ்வரன் அவர்கள்
(பிரதேச செயலாளர், பருத்தித்துறை)
திரு.ந.அனந்தராஜ் அவர்கள்
(தலைவர், நகரசபை-வல்வெட்டித்துறை)
கௌரவம் பெறும் விழாவின் நாயகர்கள்
திரு.சி.கதிரைவேற்பிள்ளை அவர்கள்
திரு.மா.யோகேஸ்வரதேவர் அவர்கள்
மகப்பேற்று நிபுணர்.G.பவானி அவர்கள்
கண் வைத்திய நிபுணர் திரு.ச.குகதாசன் அவர்கள்
திரு.இ.ஞானசீலன் அவர்கள்
திரு.சி.இராசலிங்கம் அவர்கள்
திரு.பொன்.சின்னத்தம்பி அவர்கள்
திரு.சி.சிவயோககுரு அவர்கள்

விருந்தினர்களும்-விழா நாயகர்களும் செல்வச்சந்நிதி முருகன் ஆலய முன்றிலில் இருந்து விழா மண்டபம் வரை மங்கல வாத்தியங்கள் சகிதம் அழைத்துவரப்படுவார்கள்.
அனைவரும் வருக!
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

O/L, A/L, பல்கலைக்கழக (Phy. Sc.), தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களே நீங்களும், குறுகிய காலத்தில் British Qualified Engineer/Quantity Surveyor ஆகலாம்

City & Guilds UK
JUNE 2012
CLASSES

Telecommunication Systems Engineering
Electrical & Electronic Engineering
Civil Engineering / Quantity Surveying
With Theory, Practical Assignments & Projects
Advanced Diploma தராதரத்தோடு U.K. பல்கலைக்கழகங்களில் 2nd year or Final Year அனுமதிகள் பெறமுடியும்

இலவச ஆலோசனை
Prof. K. Chandirabose Member of IET(U.K.)
16/10/2011 (மாலை 3 மணி முதல் 5 மணி வரை)
17/10/2011 (காலை 9 மணி முதல் மாலை 2 மணி வரை)
உங்கள் வரவை முன்கூட்டியே உறுதிப்படுத்திக்கொள்ளவும்

விபரங்களுக்கு:
APSS International
242 Dr. Subramanium Road,
Chunnakam.
T.P. 021-2241731
Hotline: 077-3867695, 077-2306642

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளம் அணு மின் உலை திட்டத்தை நிறுத்துமாறு நீதிமன்றில் மனுத் தாக்கல்

டில்லி, ஒக்15

அணுமின் உலை செயற்பாட்டை நிறுத்தி வைக்கக் கோரி உச்ச நீதிமன் றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கூடங்குளம் அணுமின் உலையால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளதை அடுத்து இந்தப் பகுதி மக்கள் கடந்த மாதம் பெரியளவில் உண்ணாவிரதம் ஆரம்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து முதல்வர் மற்றும் பிரதமருடன் போராட்டக்குழுவினர் சந்தித்துப் பேசினர். இதில் பிரதமர் அலுவலகச் செய்திக்குறிப்பில் அணு உலை விவகாரம் பாதுகாப்பானதுதான், மின் உற்பத்தியின் அவசியத்தை வலியுறுத்துவதுடன் மக்கள் பாதுகாப்பும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனை ஏற்க மறுத்து இந்தப் பகுதி மக்கள் மீண்டும் தர்ணா, முற்றுகை, உண்ணாவிரதம் என்று போராட்டத்தை ஆரம்பித்தனர். விஞ்ஞானிகள், தொழிலாளர்கள், பொறியியலாளர்கள் என்று பணிக்கு செல்ல விடாமல் மக்கள் தடுத்து வருகின்றனர். இதன் காரணமாக இங்கு பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




இந்த நிலையில் அணு மின் நிலையங்களின் செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என்று கோரும் மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. டி.எஸ்.ஆர்., சுப்பிரமணியம், ஈ.வி.எஸ்., சர்மா, மற்றும் கோபால்சாமி ஆகியோர் இந்த மனுவை கூட்டாக தாக்கல் செய்துள்ளனர்.

இந்த அணு உலை பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் தற்போது சந்தேகம் எழுந்துள்ளது. அறிக்கை மூலம் முழு விளக்கம் மற்றும் மக்கள் அச்சம் போக்கப்பட்ட பின்னர் இந்த பணிகளை ஆரம்பிக்கலாம். இது வரை அணு உலைப் பணியை நிறுத்தி வைக்க வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது. இதில் கூடங்குளம் பிரச்சினையும் சேர்த்து விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது. (வ)

# இம்மானுவல் அடிகளாருக்கு இந்தியா அனுமதி மறுப்பு

## வன்மையாகக் கண்டிக்கிறார் சீமான்



துபாயில் இருந்து உரிய பயண ஆவணத்துடன் சென்னைக்கு வந்த உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானுவல் அடிகளாரை, இந்திய மத்திய அரசின் குடியேற்றத் துறையினர், விமானத்தில் இருந்து இறங்க விடாமல், அதே விமானத்தில் திருப்பி அனுப்பியதை நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

ஈழத் தமிழ் மக்களின் இன்னலைத் துடைக்கவும், உலக நாடுகளிடையே ஈழத் தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் சட்டபூர்வ அமைப்பான உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானுவல் அடிகளாரை, விமானத்தில் இருந்து இறங்க அனுமதிக்காத மத்திய அரசின் குடியேற்ற அதிகாரிகள், அப்படியேதிருப்பி அனுப்பியுள்ளனர்.

இது மனிதாபிமானமற்ற, சட்டத்திற்குப் புறம்பான அக்கிரமச் செயலாகும். 77 வயதான மதிப்புமிக்க பெருமகனை திருப்பி அனுப்பியதன் மூலம், உலகத் தமிழினத்தை மீண்டும் ஒரு முறை இந்திய மத்திய அரசு அவமதித்துள்ளது. இந்தச் செயலை நாம் தமிழர் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்தியாவிற்கு எத்தனை முறை வேண்டுமொனாலும் வந்து செல்லத்தக்க பயண அனுமதியை இம்மானுவல் அடிகளார் வைத்திருந்தும், அவரிடம் எந்த ஒரு காரணத்தையும் கூறாமல், வந்த விமானத்திலேயே மீண்டும் துபாய்க்கு திருப்பி அனுப்பியுள்ளது இந்தியக் குடியேற்றத் துறை.

தமிழ் மக்களை அவமானப்படுத்த வேண்டும் என்கிற திட்டமிட்ட நோக்குடன் இவ்வாறான நடவடிக்கைகளில் இந்தியக் குடியேற்றத்துறை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ)



பாரதிய ஜனதா மூத்த தலைவர் அத்வானி மேற்கொண்டுள்ள ரதயாத்திரையை யொட்டி, வாரணாசியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற முரளிமனோகர் ஜோஷி, ரவிசங்கர் பிரசாத் உள்ளிட்ட பா.ஜ., தலைவர்கள், அத்வானியுடன் கூட்டாகக் கைகோர்த்து நிற்கின்றனர்.

# மன்மோகனின் கடிதம் கிடைக்கவில்லை என்கிறார் ஜெயலலிதா

கூடங்குளம் பிரச்சினை தொடர்பாக பிரதமர் எழுதியதாகக் கூறப்படும் கடிதம் இன்னும் தமக்குக் கிடைக்கவில்லை," என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரம் முடித்து சென்னை திரும்பிய, முதல்வர் ஜெயலலிதா அளித்த பேட்டியின் போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கூடங்குளம் விவகாரத்தில், தமிழக அரசு அடுத்து என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது? என்று செய்தியாளர்கள் கேட்ட போது இவ்வாறு பதிலளித்தார்.

# தகவல் அறியும் சட்டம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் -பிரதமர்

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மேலும் வலிமையடையச் செய்யவேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் நடைபெற்ற மத்திய தகவல் ஆணைய மாநாட்டில் கலந்து கொண்டு பிரதமர் மன்மோகன்சிங் பேசுகையில்:

தகவல் பெறும் உரிமைச்சட்டம் மூலம் நன்மைகளே அதிகம் விளைந்துள்ளன. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். தகவலறியும் உரிமைச்சட்டத்தை குறை கூறுவதை ஏற்க முடியாது.

சம்பந்தபட்டவர்களின் பொறுப்பை அதிகரிப்பதாகவும் ஊழல் கட்டுப்படுத்தும் ஒரு பயனுள்ள கருவியாகவும் இந்தச் சட்டம் பயன்படுகிறது. தகவல் பெறும் உரிமை சட்டம் நேர்மையான பொது ஊழியர்களுக்கு ஊக்கமாக அமையும் என்று கூறினார்.

# சி.பி.ஐ. சுமத்திய குற்றச்சாட்டை வன்மையாக மறுக்கிறார் கனிமொழி

டில்லி, ஒக்.15

தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினரான கனிமொழி மீது சி.பி.ஐ. சுமத்தியுள்ள நம்பிக்கைத் துரோகக் குற்றச்சாட்டை அவர் வன்மையாக மறுத்துள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் கனிமொழி. கலைஞர் ரிவிக்கு ரூ. 200 கோடி லஞ்சப் பணம் கைமாறியதாக சி.பி.ஐ. கூறியுள்ள குற்றச்சாட்டின் அடிப்படையில் கலைஞர் ரிவியின் ஒரு பங்குதாரர் என்ற அடிப்படையில் கனிமொழி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் ராசா, கனிமொழி உள்ளிட்டோர் மீது சமீபத்தில் சி.பி.ஐ. புதிய குற்றச்சாட்டை சி.பி.ஐ. நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அதில் நம்பிக்கைத் துரோகம் செய்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அதிகபட்சம் ஆயுள் தண்டனை வரை சிறைத் தண்டனை கிடைக்கும் என்பதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில், கனிமொழி உள்ளிட்டோர் தங்கள் மீதான நம்பிக்கை துரோகக் குற்றச்சாட்டை கடுமையாக மறுத்துள்ளனர். நேற்று முன்தினம் நீதிபதி ஓ.பி.ஷைனி முன்னிலையில் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் 2ஜி வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது கனிமொழி உள்ளிட்டோரின் சட்டத்தரணிகள் தங்களது மறுப்பு ஆவணங்களைத் தாக்கல் செய்தனர்.

கனிமொழி, கலைஞர் ரி.வி தலைமை செயலதிகாரி சரத்குமார் ரெட்டி ஆகியோர் தங்களது சட்டத்தரணி அல்தாப் மூலம் தாக்கல் செய்த மறுப்பில் கூறுகையில்: 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு வழங்கியதில் எனக்கு எந்தப் பங்கும் இல்லை. அலைக்கற்றைகளை நான் பெறவில்லை, அதை விற்கும் பதவியிலும் நான் இல்லை. இந்த நிலையில் அரசுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததாக என் மீது கூடுதலாகக் குற்றஞ் சாட்டுவதை ஏற்க முடியாது. அலைக்கற்றை ஒதுக்கீட்டில் எனக்குப் பங்கு இருப்பதாக சி.பி.ஐ.யே இதற்கு முன்னால் குற்றம் சாட்டவில்லை என்று கூறியிருந்தனர். (வ)

# கனிமொழியின் பிணை மனுவை சி.பி.ஐ. கடுமையாக எதிர்க்கும்

டில்லி,ஒக்.15

2 ஜி அலைக்கற்றை வழக்கில் கனிமொழியின் பிணை மனுவை சி.பி.ஐ. எதிர்க்கும் என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் ஹரேன் ராவல் தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானவை என்றும் அவர் கூறினார்.

2 ஜி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட யூனிடெக் வயர்லெஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சஞ்சய் சந்திரா, ஸ்வான் ரெலிகொம் இயக்குநர் வினோத் கோயங்கா ஆகியோரது பிணை மனுக்கள் மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் புதன் கிழமை நடந்தது.

சட்ட அமைச்சர் கூறியதாக வெளியான செய்தி சரியானது தானா? என்று கேட்டபோது, இந்த செய்தி தவறானது என்று உச்சநீதிமன்றத்திடம் சி.பி.ஐ. விளக்கமளித்தது. நீதிமன்றத்தில் கனிமொழி உள்ளிட்ட 2ஜி குற்றவாளிகளின் பிணை மனுவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்போம் என்று சி.பி.ஐ. சட்டத்தரணி தெரிவித்தார்.

இதனிடையே 2ஜி வழக்குத் தொடர்பாக சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்த கருத்துக்கு உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்தது.

தொழிலதிபர்கள் சிறையில் அடைத்தால் அது முதலீட்டைப் பாதிக்கும் என்று சல்மான் குர்ஷித் தெரிவித்திருந்தார். இந்த செய்தி உண்மையாக இருந்தால் அது எங்களைப் பாதிக்கச் செய்யும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

சல்மான் குர்ஷித்தின் கருத்து வெளியான ஊடகச் செய்தியைக் குறிப்பிட்டுப் பேசிய நீதிபதி எச்எல். தத்தி, எங்களுக்கு குழப்பமாக உள்ளது. தொழிலதிபர்களை சிறையில் அடைப்பதில் உச்சநீதிமன்றம் ஆர்வமாக உள்ளது என்பது போன்ற தோற்றத்தை அமைச்சரின் அறிக்கை உண்டாக்கியுள்ளது. அது எங்களைப் பாதிக்கச் செய்துள்ளது. அமைச்சர் வெளியிட்ட அறிக்கை சரியா தவறா? இதில் அரசின் நிலையை விளக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (வ)

# உடல் தானம் செய்யவுள்ள சினேகா



உடல் தானம் செய்யமுடிவு செய்துள்ளதாக நடிகை சினேகா கூறியுள்ளார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளதாவது: - சமூகத்துக்கு ஒவ்வொருவரும் நல்லது செய்ய வேண்டும். எனது பிறந்த நாள் விழாக்களை ஏழைகளுக்கு உதவிகள் வழங்கிக் கொண்டாடுகிறேன். இந்த ஆண்டுக்கான பிறந்த நாளை மாற்றுத் திறனாளிகளுக்கு விருந்து கொடுத்து கொண்டாடினேன். இது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

இரு வருடங்களுக்கு முன் எனது கண்களை தானம் செய்தேன். விரைவில் உடல் தானம் செய்யவும் முடிவு செய்துள்ளேன். ரசிகர்கள் கண்களைத் தானம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் -என்றார் அவர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதகு திருத்தப்பட்டது

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் சந்தியிலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் உள்ள பழுதடைந்த மதகு தற்காலிகமாகத் திருத்தியமைக்கப்பட்டதால் பருத்தித்துறையிலிருந்து வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய இடங்கள் வரையான பஸ் சேவைகள் மீண்டும் நடைபெற்று வருகின்றன.கடந்தகால யுத்தத்தால் சேதமடைந்த இந்த மதகு மீது இரும்புத் தகடுகள் பொருத்தப்பட்டு அதனூடாக போக்குவரத்துக்கள் இடம்பெற்று வந்தன. இந்த மதகின் மீது இணைக்கப்பட்டிருந்த இரும்புத் தகடுகள் மதகைவிட்டு நகர்ந்ததையடுத்து அதனூடாகப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.

மீண்டும் இந்த மதகின் மீது இரும்புத் தகடுகள் பொருத்தப்பட்டுத் தற்காலிகமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-236)

காலத்தினால் செய்த உதவி
ஞாலத்தின் மாளப் பெரிது

**நன்றி கலந்த பாராட்டுக்கள்**

வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாக சேவை பரீட்சையில்
பொருத்தமற்ற விதத்தில் அறிவிக்கப்பட்ட நிபந்தனைகளை
நியாயமான முறையில் மாற்றியமைக்க உழைத்த
தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்

**பொன். செல்வராசா**

அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகள்

**பயன்பெற்ற வடமாகாண பட்டதாரிகள்.**

# விடுதலையாகும் சிறைக் கைதிகளில் 50 வீதமானோர் மீண்டும் வருகின்றனர்

கொழும்பு, ஒக்.15

சிறைகளில் தண்டனைக்காலம் முடிவடைந்து விடுதலையாகும் கைதிகளில் 50 சதவீதமானோர் மீண்டும் உள்ளே வருகின்றனர் என்று சிறைச்சாலைகள் சேமநலன் ஆணையாளர் லக்ஷ்மன் சில்வா தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறையில் கடந்த செவ்வாய்க்கிழமை புதிய சிறை அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதன் காரணமாக சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சேவை சரியாக நிறைவேற்றப்படுகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது .

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் கைதிகளைச் சீர்திருத்தி நற்பிரஜைகளாக மாற்றுவதற்கு ஆலோசகர்கள் உள்ளனர். அதனால், விடுதலையாகும் கைதிகள் மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபடுவது குறைகின்றது.

எனினும், துரதிஷ்டவசமாக நமது நாட்டுச் சிறைகளில் அத்தகைய ஆலோசகர்கள் இல்லை. பொதுமக்களின் பணத்தைக் கொண்டே சிறை அதிகாரிகளுக்கு சம்பளமும், இதர வசதிகளும் கொடுக்கப்படுகின்றன.

எனவே, கைதிகளுக்கு சரியான அறிவுரைகளை வழங்கி அவர்கள் மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபடாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு சிறை அதிகாரிகளுக்கு உள்ளது -என்றார். (ச-5)

வாடிக்கையாளர்களுக்கு
விரிவான சேவையை
வழங்கும் நோக்குடன்...

இலங்கை வங்கி

**வவுனியா நகர**

விரிவாக்கற் காரியாலயம்
(வட மாகாணம்)

**கடை வீதி,
வவுனியா**

என்ற முகவரியில் 2011 ஒக்டோபர்
மாதம் 15ம் திகதி சனிக்கிழமை
திறந்து வைக்கப்படும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறிவித்துக்
கொள்கின்றோம்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# சமய சந்நிதிகள்

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் நவக்கிரக மகா ஹோமம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-313)

***

சுழிபுரம்,ஒக்.15

பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயத்திலுள்ள சனீஸ்வரருக்கு இன்று சனிக்கிழமை காலை முதல் சனீஸ்வர பூசை இடம்பெறவுள்ளது.

***

**மரண அறிவித்தல்**

**திருமதி இலட்சுமி வைரமுத்து (தியாகு)**



கடுக்காய், கட்டைவேலி, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமி வைரமுத்து கடந்த (13.10.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்துவின் அன்பு மனைவியும் அருட்சோதிமலர் (லண்டன்), ஞானமலர், தங்கமணி (லண்டன்), சிவமணி (லண்டன்), இரவிசங்கர் (மீள் எழுச்சித் திட்டம் - கச்சேரி, யாழ்.) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ் சென்ற குலவீரசிங்கம் மற்றும் ஜெயகுமார், சத்தியானந்தன் (லண்டன்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), உமையாள் (HNB காப்புறுதி ஆலோசகர்) ஆகியோரின் அன்பு மாமியும் நிஷாந்தன், நிதர்ஷா, துருபதாஸ், சயன், ஜனிஷா, பாதுஷன், தனுஷன், கீர்த்தனா, ஆரணி ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகன கிரியைகளுக்காக கரவெட்டி வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கடுக்காய்,
கட்டைவேலி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

தகவல்:
(9051) குடும்பத்தினர்.

**தரம் 5 மாணவர்களுக்கான
விசேட ஆங்கிலக் கற்கை நெறி (TKY-5)**

அடுத்தவருடம் 2012 இல் தரம் 6 இல் ஆங்கிலமொழி English Mediam மூலம் கற்கப்போகும் மாணவர்களின் அடிப்படை ஆங்கிலக் கற்கை நெறி.
கணித விஞ்ஞான கலைச் சொற்கள் அறிமுகம் செய்யப்படும்.
**5 ஆவது புதிய பிரிவு ஆரம்பம்**
15.10.2011 மு.ப.10 மணி
திசைகாட்டி. (முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்)
37 'சிவகுரு நாதர்' ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0214914527

**போட்டிப் பரீட்சைக்குரிய
வழிகாட்டி வகுப்புக்கள்.**

SLAS, அஞ்சல் சேவை உத்தியோகத்தர், விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிக்கான போட்டிப் பரீட்சைகளுக்குரிய வழிகாட்டி வகுப்புக்கள்.
விரிவுரை: இலங்கை நிர்வாக சேவை அதிகாரி
2011.10.15 பி.ப.1 மணி
"திசை காட்டி"
*(முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்)*
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 4914527

**விற்பனைக்கு**

முட்டை மொத்தமாக விற்பனைக்குண்டு.
விலை ரூபா 10/=
தொடர்புக்கு: 0773936455
நெல்லியடி

**திருமண சேவை**

82 இல் பிறந்த, செவ்வாய் இல்லாமல், 4 பாவமுடைய, சிவில் இஞ்சினியருக்கு, படித்த மணமகள் தேவை. (ஆஸ்திரேலியா போகவுள்ளார்)
83 இல் பிறந்த, 2 இல் செவ்வாய், 21 பாவமுடைய சைவபோசனமுள்ள, இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
80 இல் பிறந்த, 7 இல் செவ்வாய் உள்ள, 61 பாவமுடைய, பட்டதாரி ஆசிரியருக்கு ஆசிரியை மணமகள் தேவை.
80 இல் பிறந்த, செவ்வாய் இல்லாமல், 76½ பாவமுடைய B.C.S. டிப்ளோமா முடித்து வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு உத்தியோக மணமகள் தேவை.
78 இல் பிறந்த 4 இல் செவ்வாய், 39¼ பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (5 அடி 6 அங்குலம்) உயரம் விரும்பத்தக்கது.
70 இல் பிறந்த, செவ்வாய் இல்லாமல், 14 பாவமுடைய லண்டன் எக்கவுண்டன் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
71 இல் பிறந்த, 4 இல் செவ்வாய் உள்ள, 30¼ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
74 இல் பிறந்த, 2இல் செவ்வாய் உள்ள 64 ¼ பாவமுடைய சைவபோசனமுள்ள பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு சைவ போசனமுள்ள மணமகள் தேவை.
84 இல் பிறந்த, 7 இல் செவ்வாய் உள்ள, 50 ¼ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு ஊரில் படித்த மணமகன் தேவை. கனடாவும் விரும்பத்தக்கது.
80 இல் பிறந்த, 12 இல் செவ்வாய் உள்ள, MBBS டாக்டருக்கு டாக்டர், இஞ்சினியர் மணமகள் தேவை.
தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல.171/7, மனோன்மணி அம்மன்
கோயிலடி, நல்லூர். தொ.பே:0776070862

CIS
College of Informatics Studies

**CIS வழங்கும் வேலை வாய்ப்புடன் கூடிய கற்கைநெறிகள்.**

**Professional Courses with Work Opportunities**
- Hardware & Networking
- Graphic Designs
- Programming Languages
- Web Development

***Duration: - 6 months Start On 19th Oct 2011***

எம்முடன் இணைந்து உங்கள் பொன்னான எதிர்காலத்தை உறுதிப்படுத்துங்கள்.

**Other Courses**
Ms Office Solution & Development DTP
Accounting Packages Multimedia
Hardware & Networking

CIS
College of Informatics Studies

**CIS Developers Inuvil**
**Our Services Are**
- **Software Development**
- Student Management System
- Point of Sales System • Pay roll System etc
- **Web Development**
- Educational Institutes • Temples
- Social service Clubs etc
- **Designing**
- Logo Design • Advertisements
- Greeting Cards
- **Hardware & Networking Services**

வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்ப உலகில் உங்கள் வேலைகளை இலகுவாக்க எம்முடன் இணையுங்கள்.
தொடர்புகளுக்கு:
CIS, K.K.S Road, Inuvil
T.P:- 0759402236 / 0777205162 / 0771240071

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகள் மீதான துன்புறுத்தல்களை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்

## லிபிய இடைக்கால அரசுக்கு மன்னிப்புச் சபை வலியுறுத்து

லிபியாவில் மேற்குலகின் ஆதரவுடன் கடாபியை ஒழித்துக் கட்டி அரசமைக்கும் முயற்சியில் இறுதிக்கட்டப் போரில் ஈடுபடுகின்ற கிளர்ச்சிப் படைகளின் இடைக்கால நிர்வாகத்தினர் கைதுகளையும் கைதிகள் மீதான துன்புறுத்தல்களையும் நிறுத்த வேண்டும் என்று மனித உரிமை அமைப்புக்கள் குரல் எழுப்பியுள்ளன.

அண்மைய மாதங்களில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான மக்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு மோசமாக நடத்தப்படுவதாகத் தமக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக லண்டனைத் தலைமையகமாகக் கொண்டிருக்கும் ''அம்னஸ்டி இன்ரநஷனல்'' அறிக்கை வெளியிட்டுள்ளது.

சுமார் 300 கைதிகளிடம் பேசியுள்ள அம்னஸ்டி இன்ரநஷனல் ''புதிய லிபியாவில் கறைபடியச் செய்யும் தடுப்புக் காவல் துஷ்பிரயோகங்கள்'' என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்டுள்ளது.

திரிபோலிக்குள்ளும் வெளியில் சாவியா, மிஸ்ரட்டா உள்ளிட்ட நகரங்களில் உள்ள 11 தடுப்புக் காவல் முகாம்களுக்குச் சென்றுள்ள அம்னஸ்டி இன்ரநஷனல் கடாபி விசுவாசிகள் என்று நம்பப்படுபவர்கள், கடாபி இராணுவ ஆளணியைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகப்படுவர் மீது கடுமையான சித்திரவதைகள் பிரயோகிக்கப்படுவதைக் கண்டறிந்துள்ளது.

குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களை எடுப்பதற்காக தடுப்புக் காவலில் இருப்பவர்கள் மீது சித்திரவதைகள் புரியப்பட்டுள்ளமைக்குத் தெளிவான சான்றுகள்இருப்பதாகவும் அந்த அமைப்புக் கூறுகின்றது. மேலும் முகாம் ஒன்றில் சித்திரவதை ஆயுதங்களை அவதானித்ததாகவும் கசையடி மற்றும் கதறல் சத்தங்கள் கேட்டதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

எனினும் கிளர்ச்சிப் படையின் இடைக்கால நிர்வாகம், தாம் மனித உரிமைகளைப் பேணுவதாகவும் நாட்டின் நீதிக் கட்டமைப்பை மறுசீரமைப்பதாகவும் கூறி வருகின்றது. (ந)

# மெச்சிகோ கவுதமாலாவில் புயல் தாக்கி 29 பேர் உயிரிழப்பு

கவுதமாலா, ஒக்.15

மெக்சிகோ, கவுதமலா நாடுகளில் புயல் தாக்கியதில் 29 பேர் உயிரிழந்தனர்.

வட அமெரிக்கா கண்டத்தில் உள்ள பசிபிக் கடலில் ஜோவா என்ற புயல் உருவானது. அந்த புயல் மத்திய அமெரிக்க நாடுகளான கவுதமலா, எல்சால்வாடோர், நிகாராகுவா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளில் தாக்கியது. சுறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால் பசிபக் கடலில் ராட்சத அலைகள் உருவாகின. அவை ஊருக்குள் புகுந்தன.

இதனால் மக்கள் குடியிருப்பு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. வீதிகள் துண்டிக்கப்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மின்சாரம் தடைபட்டது. நிலச்சரிவு காரணமாக வீடுகள் மண்ணுக்குள் புகுந்தன. பாலங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. இந்த புயல் தாக்குதலில் வட அமெரிக்க கண்டத்தில் உள்ள மத்திய அமெரிக்க நாடுகள் மற்றும் மெக்சிகோவில் 29 பேர் உயிரிழந்தனர். அவர்களில் கவுதமலா நாட்டில் மட்டும் 15 பேர் பலியாகி உள்ளனர். எல்சால்வாடோர், நிகாராகுவா நாடுகளில் 5 பேர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மெக்சிகோவில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

மழை வெள்ளம் காரணமாக இந்த நாடுகளில் 1 லட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். புயல் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகள் நடைபெறுகின்றன. (ந)

# பிரிட்டனில் வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பு

லண்டன், ஒக்.15

பிரிட்டன் கடற்கரையில் 87க்கும் மேற்பட்ட வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

பிரிட்டன் கடற்கரைப் பகுதியில் வெடி குண்டுகள் இருப்பதாக அந்தநாட்டின் கப்பல் படைக்குத் தகவல் கிடைத்தது. அதனடிப்படையில் கப்பல் படை வீரர்கள் அதிரடி சோதனை மேற்கொண்டனர். சோதனையில் நீர்மூழ்கிக் கப்பலில் பயன்படுத்தக்கூடிய இரண்டு குண்டுகள் மற்றும் ஆறு சிறிய வகை பீரங்கிகளில் பயன்படுத்தப் படும் குண்டுகள் என மொத்தம் 87 மேற்பட்பட குண்டுகளைக் கைப்பற்றினர். (ந)



அமெரிக்க அதிபர் ஒபாமா (வலது) தென்கொரியாவின் அதிபர் லீ மியாங் பக்கை வாஷிங்டன் வெள்ளை மாளிக்கையில் உள்ள அலுவலகத்தில் வரவேற்றுப் பேசினார்.

# புலம் பெயர்ந்தவர்கள் பிரெஞ் மொழியை புழக்கத்தில் பிரயோகப்படுத்த வேண்டும்

## பிரான்ஸில் புதிய சட்டம் அறிமுகம்

பரிஸ், ஒக்.15

பிரான்ஸ் அரசானது கடந்த புதன்கிழமையிலிருந்து குடியேற்ற உரிமைகளுக்கான சட்டதிட்டங்களை சற்று வலுப்படுத்தி உள்ளது. அதன்படி புலம் பெயர்ந்த மக்கள் தங்கள் குடியுரிமையை நிலைநாட்டிக் கொள்ள அவர் களது அன்றாட வாழ்வில் பிரெஞ் மொழியைப் புழக்கத்தில் உபயோகப்படுத்த வேண்டும் எனக் கண்டிப்பான முறையில் தெரிவித்தது.

அத்துடன் இவ்வாறான மக்களுக்கு அரசால் நேர் காணல் நடத்தப்பட வேண்டும் அல்லது பிரெஞ் மொழியைக் கற்றுக்கொண்ட பட்டதாரியாக இருக்க வேண்டும். இந்தச் சட்டதிட்டமானது பிரெஞ் மொழியை அனைவரும் கற்றுக் கொள்ளவும், புரிந்துகொள்ளவும் அந்த மொழிக்கேற்ப அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவுமே கொண்டு வரப்பட்டுள்ளது .

இதுவரை ஒரு பில்லியன் புலம் பெயர்ந் தவர்கள் பிரெஞ் மொழி தெரி யாமல் பிரான்ஸில் வாழ்வதாக கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

இதே வேளை பிரான்ஸ் அரசு வளர்ந்து வரும் சூழலில் 60 பில்லியன் யூரோவைப் புலம் பெயர்ந்தவர் களுக்கு பிரெஞ் மொழியைக் கற்றுக் கொடுப்பதற்காகச் செல விடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

## நேபாளத்தில் சோகம்

# ஆற்றில் பஸ் வீழ்ந்து 40 பேர் சாவு

காத்மாண்டு, ஒக்.15

நேபாளத்தில், பயணிகள் பஸ் ஆற்றில் கவிழ்ந்ததில், 40 பேர் பலியாயினர்.

நேபாளத்தின் சிந்துலி மாவட்டத்திலிருந்து தலைநகர் காத்மாண்டு நோக்கி வந்த பயணிகள் பஸ், ரித்திபர் என்ற இடத்தில் சன்கோஷி நதியில் கவிழ்ந்தது. இந்த விபத்தில், 40 பயணிகள், ஆற்றில் மூழ்கி இறந்தனர்; 16 பேர் காயமடைந்தனர். பஸ் கூரை மீது பயணித்த, 11 பேர், காயமின்றி தப்பினர். ஆற்றில் மூழ்கியவர்களின் உடல்களை மீட்கும் பணி நடக்கிறது.

மோசமான சாலைகள், மிக பழைய பஸ்கள், அதிக கூட்டம் காரணமாக நேபாள நாட்டில் அடிக்கடி சாலை விபத்துகள் நடக்கின்றன. (ந)

# கோலாகலமாக நடைபெற்ற பூட்டான் மன்னரின் திருமணம்



திம்பு, ஒக்.15

பூடான் மன்னர் ஜிக்மே கீசர் நாம்கியால் வாங்சுக், சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

இந்தியாவின் அண்டை நாடான பூட்டானின் இளம் மன்னர் நாம்கியால் வாங்சுக், ஜெட்சன் பெமா ஆகியோருக்கு தலைநகர் திம்புவிலிருந்து, 71கிலோமீற்றர் தொலைவில் உள்ள புனாகா கோட்டையில், புத்தமத சடங்குகளின் படி, எளிமையான முறையில் திருமணம் நடந்தது.

இந்திய தூதர் பவன் கே வர்மா, மேற்கு வங்க ஆளுநர் எம்.கே. நாராயணன் ஆகியோர் இந்தத் திருமணத்தில்கலந்துகொண்டனர்.

இவர்களது திருமணத்தைக் காண ஏராளமான பழங்குடி மக்கள் குவிந்திருந்தனர். அதுமட்டுமன்றி இவர்களது திருமணம் தொலைக் காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்ட தால் பூட்டானின் 7 லட்சம் மக்களும் கண்டுகளித்தனர். (ந)

# ஸ்பெயின் மருத்துவ பணியாளர்களை தேடும் கென்ய நாட்டுப் பொலிஸார்

சோமாலிய கென்ய எல்லைப் பகுதியில் கடத்தப்பட்ட ஸ்பெயின் நாட்டின் மருத்துவப்பணியாளர்களைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளை கென்யப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சோமாலிய அகதி முகாம்களில் மருத்துவப் பணிகளை மேற்கொண்டிருந்த குறித்த பணியாளர்கள் பயணித்த வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது காயமடைந்த வாகனச் சாரதி வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே வேளை அல் ஷபாப் கிளர்ச்சியாளர்களால் இவர்கள் கடத்தப்பட்டுள்ளதாக சோமாலியா குற்றம் சுமத்தியுள்ளது. (ந)

# ஆஸி. விமான விபத்தில் 28 பேர் மரணம்

போர்ட் மோர்ஸ்பே, ஒக்.15

பப்பூவா நியூகினியாவில் நடைபெற்ற விமான விபத்தில் 2 8 பயணிகள் பலியாகினர்.

ஆஸ்திரேலியாவின் லேவிலிருந்து தெற்கு பசிபிக் தீவான மடாங் பகுதிக்கு பப்பூவா நியூகினியா வழியாக இரட்டை இன்ஜின் பொருத்தப்பட்ட விமானம் ஒன்று சென்று கொண்டிருந்த போது விமான கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதனையடுத்து விசாரணை நடத்திய ஆஸ்திரேலிய நிறுவனம் விமானம் விபத்துக் குள்ளானதை உறுதி செய்தது.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் விமானத்தை ஆஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த விமானிகள் இயக்கியதாகத் தெரிவித்துள்ளது. (ந)

# பரசூட் செயலிழந்து பாட்டி, பயிற்றுவிப்பாளர் மரணம்



விமானத்தில் இருந்து குதிக்கும் சாதனையின் போது பரசூட்டில் ஏற்பட்ட எதிர்பாராத கோளாறு காரணமாக 75 வயது பாட்டி, பயிற்சியாளர் ஆகியோர் பரிதாபமாகப் பலியாகினர்.

அமெரிக்காவின் நெவாடா மாநிலம் லாஸ் வேகாஸ் நகரை சேர்ந்த பாட்டி கிளாடட் போர்ட்டருக்கு(75) விமானத்தில் இருந்து குதிக்கும் சாகசம் செய்ய வேண்டும் என்பது நீண்ட கால ஆசை. இதற்கு ஏற்பாடு செய்யுமாறு கணவர் ஜிம்மிடம் கடந்த 20 ஆண்டுகளாக கூறி வந்துள்ளார். அவரும் ஏதேதோ காரணம் சொல்லி தட்டிக் கழித்து வந்தார்.

பாட்டி கிளாடட்டுக்கு கடந்த மாதம் பிறந்த நாள் வந்தது. அவருக்கு சூப்பர் பிறந்த நாள்பரிசு தருவதாக பேத்திகள் உறுதி அளித்தனர். அதன்படி அவருக்கு தெரியாமல் பாராசூட் சாகசத்துக்கு ஏற்பாடு செய்தனர். ஜிம் போன்ஸ்பெக்(60) என்பவரது உதவியுடன் விமானத்தில் இருந்து குதிப்பதாக முடிவானது.


நெவாடாவின் மெஸ்கொயட் பகுதியில் சாகச நிகழ்ச்சி கடந்த 9 ஆம் திகதி நடந்தது.

பாட்டி , பயிற்சியாளருடன் பிரதான பாராசூட், துணை பாராசூட் என 2 பாராசூட்கள் இணைக்கப்பட்டன. நடுவானில் விமானம் பறக்கும்போது, 2 பாராசூட்களுடன் பாட்டியை அணைத்தவாறு பயிற்சியாளர் போன்ஸ்பெக் குதித்தார். சிறிது நேரம் மிதந்த பின் பாராசூட்களை விரிக்க முயற்சித்தார். துரதிர்ஷ்டவசமாக 2 பாராசூட்களும் விரியவில்லை.

இதனால் பல அடி உயரத்தில் இருந்து இருவரும் கீழே வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே பயிற்சியாளர் இறந்தார். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி பாட்டி கிளாட் இறந்தார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவோதயப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஒக.15

வடமாகாணத்தைச் சேர்ந்த 23 நவோதயப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் ஆரம்பமானது.

இந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனும், சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனியஸ், வடமாகாண நவோதயப் பாடசாலைகளின் இணைப்பாளர் கே.செல்வன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் மாணவ, மாணவியரின் 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஆரம்ப நிகழ்வில் தேசியக் கொடியைக் கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஏற்றிவைத்தார். மாகாணக் கொடியை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து 23 நவோதய பாடசாலை மாணவர்களின் அணி வகுப்பு இடம்பெற்றது.

இதனையடுத்து ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது. தொடர்ந்து மாணவர் சார்பில் சத்தியப் பிரமாணம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் இ.இளங்கோவன் விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

சிறப்பு நிகழ்வாக இசையும் அசைவும் இடம்பெற்றது.(த-23)

## வடமாகாண அஞ்சல் ஊழியரின் விளையாட்டு விழா அரியாலையில்

யாழ்ப்பாணம், ஒக.15

137 ஆவது சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு வடமாகாண அஞ்சல் ஊழியர்களுக்கான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

வடமாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் என்.ரட்ணசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகிய போட்டிகள் முதன்மையாக இடம்பெறவுள்ளன.

வடமாகாணத்தில் உள்ள அஞ்சல் உத்தியோகஸ்தர்கள், அத்தியட்சகர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் என்.ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

(த-311)

## சண்டிலிப்பாய் இந்து மூன்றாமிடம்

வலி-வடக்கு, ஒக்.15

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப்போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மூன்றாமிடத்துக்கான போட்டியில் நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயமும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒரு அணி மற்றய அணிக்குச் சளைத்தவர்கள்அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்ட போதும் கோல்கள் எவையும் பெறப்படவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் மோதிக் கொண்டன. இதில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி தனது இலக்கை இரண்டாம் பாதி ஆட்டத்தில் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி 03:00 என்ற கோல் கணக்கில் நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயத்தை வென்று மூன்றாமிடத்தைப் பெற்று வலய மட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86-23)

## கழகங்களுக்கான சதுரங்கம் இம்முறை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.15

இலங்கைச் சதுரங்கச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் கழகங்களுக்கு இடையிலான சதுரங்கத் தெரிவு போட்டி 30 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 28ஆம் 29ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது.

கண்டி ,கொழும்பு,காலி,குருநாகல் ஆகிய இடங்களில் இதுவரை காலமும் கழகங்களுக்கு இடையிலான சதுரங்கத் தெரிவுப் போட்டிகள் இடம் பெற்று வந்தன.

இம்முறை இந்தப் போட்டிகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-23)



மன்னார் உதைபந்தாட்ட லீக் அமரர் சின்னச்சாமி கணேசன் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (த-23)

## போட்டிகள்

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி புதன் கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

***

தென்மராட்சிக் கல்வி வலய மட்ட பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சதுரங்கச் சுற்றுப்போட்டி எதிர்வரும்18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.(த-23)

## இன்றைய ஆட்டங்கள்

மன்னார் உப்புக்குளம் அல்பதா விளையாட்டுக் கழகம் நடத்தும் 8 ஓவர்கள் கொண்ட மென்பந்துத் துடுப்பாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் காலிறுதியாட்டங்கள் இன்று சனிக் கிழமை காலை தொடக்கம் மாலை வரை இடம்பெறவுள்ளன. (த-23)

## முல்லை பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்



முல்லைத்தீவு,ஒக்.15

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்துக்கும் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு (கிரிக்கெற்) உபகரணங்களும் காதலியார் சமளங்குளம் சிவநகர் கிராம மக்களுக்கு 100 சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் முதல்வர் கருணாகரன் தலைமையில் முல்லை உயர் இராணுவ அதிகாரியின் ஏற்பாட்டில் இராணுவ அதிகாரி மகேல ஜயவர்த்தன அனுசரணையுடன் தொண்டு நிறுவனம் ஒன்றினால் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்துக்கும் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப் பட்டன.

வழங்கப்பட்ட உபகரணங்கள் மூலம் முல்லை மாவட்டத்தில் இருபாடசாலை மாணவர்களும் நன்மையடைய உள்ளனர். அத்துடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற காதலியார் சமளங்குளம், சிவநகர் , கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பத் தலைவர்களுக்கும் சைக்கிள்களு வழங்கப்பட்டது. (த-500)

## பரந்தன் இளைஞர் வட்டம் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.15

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பூநகரி நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## சதுரங்க இறுதிப் போட்டி இருதினங்கள் வைத்தீஸ்வராவில்

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக இடம்பெறவுள்ள சர்வதேச சதுரங்கப் போட்டிக்கான வீரர்கள் , வீராங்கனைகளைத் தெரிவு செய்வதற்கான சதுரங்க இறுதிப்போட்டி இன்று சனிக் கிழமை நாளை ஞாயிற்றுக் கிழமையும் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.மேற்படி போட்டியில் வெற்றி பெறும் ஆறு வீரர்கள் ,ஆறு வீராங்கனைகள் டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை யாழப்பாணத்தில் இடம் பெறவிருக்கும் சர்வதேச சதுரங்கப் போட்டிக்குத் தகுதி பெறுவார்கள் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற சதுரங்கத் தெரிவுப் போட்டியில் பங்கு பற்றியவர்களுக்கான சான்றிதழ்கள் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெறும் பரிசளிப்பு வைபவத்தில் வழங்கப்படும்.

தெரிவுப் போட்டியில் பங்கு பற்றிய வீரர்கள், வீராங்கனைகள் தவறாது நேரகாலத்துடன் பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழி வாங்கும் படலம் ஆரம்பம் இந்தியா முதலாவது வெற்றி



ஐ.சி.சியின் புதிய விதிமுறைக்கு அமைவாக இடம்பெற்ற இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்திய அணி 126 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வெற்றி கொண்டு தனது பழி தீர்க்கும் படலத்தை ஆரம்பித்துள்ளது. இந்திய அணித் தலைவர் மகேந்திர சிங் டோனியின் அபார அதிரடி ஆட்டமும், இங்கிலாந்தின் சொதப்பலான களத்தடுப்பும் ஒன்று சேர்ந்து இந்தியாவின் அபார வெற்றிக்கு காரணமாயின.


இங்கிலாந்து அணி, இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டம் ஹைதராபாத்தில் நேற்று பகலிரவு ஆட்டமாக இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இந்திய அணி ஆரம்பத்தில் துடுப்பாட்டத்தில் தடுமாறியது. 28.5 பந்துப் பரிமாற்றங்களில் 123 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறியது.

பின்னர் இணைந்த டோனி, ரெய்னா ஜோடி சிறப்பாக ஆடி அணியை வலுவான நிலைக்கு அழைத்துச் சென்றது. இந்தியாவின் தடுமாற்றத்தை இங்கிலாந்து அணி உரிய முறையில் பயன்படுத்தவில்லை. களத்தடுப்பில் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை இங்கிலாந்து அணி சொதப்பியது. ரெய்னா 55 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 61 ஓட்டங்களை அணிக்காகச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். இறுதி 15 பந்து பரிமாற்றங்களில் இந்திய அணி 150 ஓட்டங்களைக் குவித்தது.

டோனியின் அதிரடியாட்டத்தின் உதவியுடன் இந்திய அணி 300 ஓட்டங்களை 7 இலக்குகளை இழந்து பெற்றுக் கொண்டது. டோனி ஆட்டமிழக்காமல் 70 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம், 10 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 87 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் பின், டேர்ன்பர்ச், சுவான், பட்டேல் தலா ஒரு இலக்கை கைப்பற்றினர்.

கடினமான இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணி முதலாவது இலக்கை 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இழந்தது. தொடர்ந்து குக், பீற்றர்ஸன், ரொரட் ஆகியோரது சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான இலக்கை நோக்கிப் பயணித்தது. 22.4 பந்து வீச்சுக்களில் 111 ஓட்டங்களை அணி பெற்ற நிலையில் குக் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததை தொடர்ந்து இங்கிலாந்தின் சரிவு ஆரம்பமானது.



சரிவை உரிய முறையில் பயன்படுத்திய இந்திய அணி இங்கிலாந்தை கட்டுப்படுத்தியத்துடன் அதன் இலக்குகளை சுழற்பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்தி சரித்தது. இறுதியில் இங்கிலாந்து அணி 36.1 பந்து பரிமாற்றங்களில் 174 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் அஸ்வின், ஜடேஜா தலா 3 இலக்குகளையும், உமேஷ் யாதவ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகன் விருதினை டோனி தட்டிச் சென்றார். (15)

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய ஆஸ்திரேலியா

தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்கும் இடையிலான முதலாவது 'ரி - 20' ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள ஆஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் கேப்ரவுனில் இடம்பெற்ற முதலாவது 'ரி - 20' ஆட்டத்தில் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. தென்னாபிரிக்க அணி சார்பில் டுமினி அதிக பட்சமாக 53 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 67 ஓட்டங்களைக் குவித்தார். இங்கிராம் 28 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 33 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பில் குமின்ஸ் 3 இலக்குகளை சரித்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி ஆரம்பத்திலேயே அதிரடி வீரர் வோர்னரை இழந்தது. இருப்பினும் அதிரடியாய் வொட்ஸன் ஆட ஆஸ்திரேலியா வென்றது. வொட்ஸன் 39 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். ஏனையோர் 20 ஓட்டங்களுக்கு மேல் பெற 19.3 பந்து வீச்சுக்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஆட்ட நாயகனாக வொட்ஸன் தேர்வானார். (15)



# இவர்களின் தந்திரம் எனக்கு தெரியும்

**சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) புதிய விதிமுறைகள் தந்திரமானவை. இரண்டு புதிய பந்துகளை ஒரே நேரத்தில் பயன்படுத்துவதால், இனி 'ரிவர்ஸ் சுவிங்' செய்வது சிக்கலாகி விடும், என்று இந்திய அணியின் தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.**

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி, ஐந்து ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் பங்கேற்கிறது. இரு அணிகள் இடையிலான முதல் ஒரு நாள் ஆட்டம் நேற்று ஹைதராபாத்தில் உள்ள ராஜிவ் மைதானத்தில் நடந்தது. இதில், ஐ.சி.சி. அண்மையில் அறிமுகம் செய்த புதிய விதிமுறைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

ஆட்டம் ஆரம்பமாக முன்னர் டோனி இது தொடர்பாக தெரிவித்தமை வருமாறு:

ஐ.சி.சி. சார்பில் கொண்டு வரப்பட்டுள்ள புதிய விதிகள் தந்திரமானவை. இந்த முறைப்படி இதுவரை விளையாடியது இல்லை. இதன் படி 16, 40 ஆவது பந்து பரிமாற்றத்தில் இரண்டாவது, மூன்றாவது (பந்து வீச்சு, துடுப்பாட்ட) 'பவர் பிளேயை' எடுக்க வேண்டும் என்பதால், இனி வித்தியாசமான முறையில் திட்டமிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**வித்தியாசமான முடிவு:**

இதற்கு முன், இலக்கை துரத்தும் அணிகள், கடைசி ஐந்து பந்து பரிமாற்றங்களில் 'பவர்பிளேயை' பயன்படுத்துவதை வழக்கமாக கொண்டிருந்தன. இப்போது புதிய விதிகள் காரணமாக, வேறுசில தந்திரங்களை பயன்படுத்த வேண்டியதுள்ளது. இதனால் போட்டியில் வித்தியாசமான முடிவுகள் ஏற்படலாம்.

**'சுவிங்' சிக்கல்:**

பழைய பந்துகளை பயன்படுத்தும் போது, 35 பந்து பரிமாற்றங்களின் பின்னர் 'ரிவர்ஸ் சுவிங்' செய்ய ஏதுவாக இருக்கும். தற்போது, இரண்டு புதிய பந்துகளை ஒரே நேரத்தில் பயன்படுத்துவதால், இதற்கும் வழியில்லாமல் போயுள்ளது. வேறு வழியின்றி, மைதானத்தின் தன்மைக்கு ஏற்ப, பந்தின் வடிவத்தில் மாற்றம் ஏற்படுவதைப் பொறுத்து இனி 'ரிவர்ஸ் சுவிங்கை' எதிர்பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**வெற்றி வாய்ப்பு:**

தற்போதுள்ள இந்திய அணியில் இளம் வீரர்கள் அதிகம் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் இங்கிலாந்தில் சிறப்பாக செயல்பட்டுள்ளனர். இருந்தாலும், இங்குள்ள ஆடுகளங்கள் முற்றிலும் வித்தியாசமானவை. மொத்தத்தில் துடுப்பாட்டம், பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பில் எப்படி செயல்படுகிறோம் என்பதைப் பொறுத்து தான் அணியின் வெற்றி அமைந்துள்ளது - என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்தமான வேட்பாளர்களைத் தெரிவு செய்க

## அரசியல் கட்சிகளிடம் 'பவ்ரல்' கோரிக்கை

பொருத்தமான வேட்பாளர்களை அரசியல் கட்சிகள் தெரிவு செய்ய வேண்டும் என முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள் ளது.

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான சர்ச்சை நிலைமை குறித்து விபரிக்கையிலேயே பவ்ரல் அமைப்பு இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளது.

சரியான வேட்பாளர்களை தெரிவு செய்வதில் மக்களும், சிவில் அமைப்புகளும் கவனம் செலுத்த வேண்டும் என்றும், அது தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அது தெரிவித்துள்ளது. தேர்தல்களில் போட்டியிடக் கூடிய வேட்பா ளர்களை தெரிவதில் அரசியல் கட்சிகள் கிரமமான விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

கட்சித் தலைவருக்கு நெருக்க மானவர்கள், அடியாள் பலம் கொண்டவர்கள், பண பல முடையவர்களே இன்று வேட் பாளர்களாக தெரிவு செய்யப் படுகின்றனர். இது ஓர் பிழையான அரசியல் நடவடிக்கை யாகும் எனவும், இவ்வாறான காரணிகளினாலேயே முல்லேரியா தாக்குதல் சம்பவம் போன்ற துரதிஷ்டமான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்காக போட்டி யிடும் வேட்பாளர்களை அரசியல் கட்சிகள் நிதானமாக தெரிவு செய்ய வேண்டுமென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரொஹண ஹெட்டி யாரச்சி தெரிவித்துள்ளார்.

# குடாநாட்டில் பரவலாக மின்வெட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ்.குடாநாட்டில் பரவலாக நேற்றிரவு இரண்டு மணிநேரத்துக்கும் அதிகமாக மின்வெட்டு அமுலில் இருந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் இலங்கை மின்சார சபைக்கு தொடர்பு கொண்ட போதும் அதுகை கூடவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை 6மெணி தொடக்கம் 8.30வரை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மின்சாரம் தடைப்பட்டிருந்தமையால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாகவும். தற்போது தினமும் சுழற்சி முறையில் மின் வெட்டு தமது பகுதிகளில் அமுல்படுத்தப்படுவதா கவும் மக்கள் உதயனுக்குத் தொலை பேசி மூலம் தெரிவித்துள்ளனர்.

நேற்றிரவு சுன்னாகம், தெல்லிப் பழை, மல்லாகம், அளவெட்டி, கோண்டாவில்,கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, உடுவில், புன்னாலைக் கட்டுவன், ஈவினை போன்ற பல இடங்களிலும் மின்சாரம் தடைப் பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கோப்பாய், நீர்வேலி, ஊரெழு, அரியாலைப்பகுதிகளிலும் இரவு நீண்ட நேரம் மின்சாரம் தடைப்பட் டிருந்தது என்று மக்கள் தெரிவித்தனர்.

(ஒ-10-86)

# விடுதலை செய்யப்பட்டோர் மீண்டும் சிறைக்குள்

விடுதலையாகி வீடுகளுக்கு சென்ற சிறைக்கைதிகள் 32 ஆயிரத்து 128 பேரில் 12 ஆயிர்த்து 597 பேர் கடந்த ஆண்டில் மீளவும் சிறைச்சாலைகளுக்கு வந்துள்ளதாக சிறைச்சாலைகளின் தகவல்கள் தெரிவிக்கின் றன.

கடந்த ஆண்டில் ஒரு தடவைக்கு மேற் பட்டு சிறைச்சாலைகளுக்கு வந்துள்ளோரின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 596 ஆகும். 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட தரப்பினர் இரு தடவைக்கு மேல் சிறைச்சாலைகளுக்கு வந்துள்ளதாக அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு சிறைச்சாலைகளிலிருந்து விடு தலையாகிச் செல்வோரில் ஒவ்வொரு ஆண்டிலும் நூற்றுக்கு ஐம்பது வீதமானோர் மீளவும் சிறைச்சாலைகளுக்கு வருவது தெரிய வந்துள்ளது.

கடந்த ஆண்டில் 86 பேர் 11 தடவை களுக்குமேல் சின்றச்சாலைகளுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம-22)

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை அல்வின் (மேதா)



யாழ்ப்பாணம், குருநகர்இல.08, சென்.செபஸ்ரியன் வீதியைப் பிறப்பிடமாகவும், இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அல்வின் (மேதா) 13.10.2011 வியாழக்கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை- லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தேவசகாயம் மற்றும் பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வதியின் அன்புக் கணவரும், அல்பாவின் அன்புத் தந்தையும், மரியதாஸ், ராணி, யூஜின் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாப்பா, பிறிற்ரோ, வலன்ரைன், இராஜேஸ்வரி, சந்திரா, வனிதா, கொன்சல்பட், துரை, தியோமார், டட்லி, சோக்கிறடீஸ், லபோன் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இத்தாலியில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்: வலன்ரைன் குடும்பத்தினர்.

## திருமதி மார்க்கண்டு புஸ்பவதி (குஞ்சம்மா)



இல.113/1, பாரதி வீதி, கச்சேரி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு புஸ்பவதி நேற்று (14.10.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மார்க்கண்டுவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராஜா, பவளராணி மற்றும் இரத்தினம், கமலா ஆகியோரின் சகோதரியும், வரதராஜா (பிரான்ஸ்), வரதராணி, வனமோகனா(பிரான்ஸ்), வசந்தராணி(குடும்ப நல உத்தியோகத்தர்), வசந்தராஜா (ஆட்டோ வசந்தன்), வனஜா(இத்தாலி), வாசுகி ஆகியோரின் அன்புத் தாயும், பாமா(பிரான்ஸ்), வாமதேவன், தங்கராசா(பிரான்ஸ்), சிவராசா, சாந்தலட்சுமி, கருணாமூர்த்தி (இத்தாலி), ஈஸ்வரன்(ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு மாமியும், அனுசியன்(பிரான்ஸ்), அஜந்தன் (பிரான்ஸ்), அஜித் (பிரான்ஸ்), தனரஞ்சன், லக்ஷ்மன் (இத்தாலி), நிஷாந்தினி, தர்சிகா, ரினோயன், ஜீவிதன், மஞ்சுலா, மாலதி, சாருஹாசன், மதீனா, சுவர்னியா, ஆதித்தன், பிரதீபன், சூரியா(இத்தாலி), நிலா (இத்தாலி), ஹேமவாசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (17.10.2011)திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

113/1, பாரதி வீதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.

# நூலகக் கட்டடம் நேற்றுத் திறப்பு

தென்மராட்சி, ஒக்.15

கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையில் அமைக்கப்பட்ட நூலகக் கட்டடமும் கணினி அறையும் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூலக கட்டடப்பணிக்கு அனுசரணை வழங்கிய கதிரேசு விக்னேஸ்வரன் நூலகக் கட்டடத்தையும் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் கணினி அறையினையும் திறந்துவைத்தனர்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.கதிர்கமாநாதன், பாடசாலையின் முன்னாள் அதிபர் நா.அருட்சோதி ஆகியோரும் விருந்தினர்களாக்க் கலந்து கொண்டனர். (207)

# ஆவணங்கள் இல்லாத டிராக்டர் சாரதிக்கு ரூ.8,500 அபராதம்

தென்மராட்சி ,ஒக் .15

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி,மற்றும் உழவு இயந்திரப்பெட்டிக்கு இலக்கத்தகடு ஆகியன இல்லாத நிலையில் உழவு இயந்திரச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பலாலி தெற்கைச் சேர்ந்த சாரதிக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் மா.கனேசராஜா எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மூன்று குற்றங்களுக்குமாக 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத்தவறின் 5 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

சாரதி வைத்திருந்த சாரதிய அனுமதிப்பத்திரம் திகதி காலாவதியாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-207)

# தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு முப்படை பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று 'ரிட்' மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி பாட்ஷா அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

நீதிபதி, தமிழக மீனவர்களுக்கு இந்தியக் கடற்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று மாநில மற்றும் மத்திய அரசுகளுக்கு உத்தரவிட்டார்.


## வாழ்த்தி வணங்குகின்றோம்



கிளிநொச்சி கல்வி வலயத்தில் இருந்து அலரிமாளிகையில் ஜனாதிபதியால் நல்லாசிரியர் விருதான "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட ஜனாதிபதி சாரணன் (2004-2007)

மகாலிங்கம் ஜெகதீஸ்வரன்
B.Ed., Comtrin

(கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை)

அவர்கள் மேலும் பல சிறப்புகளும், விருதுகளும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ். வீதி, யாழ்ப்பாணம்.
அன்பான மருமக்கள்.

## கார் விற்பனைக்கு

TOYOTA Vitz(8 AIR Bag)KMxxxx
இலக்கமுடைய One Owner Car
விற்பனைக்கு உண்டு
0750431145

## பணியாளர்கள் தேவை

பருத்தித்துறை ராஜா சுவைச் சோலைக்கு இருபாலாரும் உடன் தேவை

01.தேநீர் தயாரிப்பாளர்
02.ரொட்டி தயாரிப்பாளர்
03.சாப்பாடு பரிமாறுபவர்
04.சமையலுக்கு பெண்கள்

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப் படும்.
தொலைபேசி இல:0779605260

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCIES

Applications are invited by me up to **28th October 2011** from suitably qualified persons for the following posts:

The selected officers should be prepared to work in the **Siddha Medicine Unit**, **Kaithady and Ramanathan Academy** of Fine Arts, **Maruthanamadam** of this University.

**1.VISITING MEDICAL OFFICER**

Qualification:- Medical Degree of a recognized University
Rate of payment per hour:-Rs.275.00

**2.VISITING NURSING OFFICER**

Qualification :- Certificate of competence as a Nurse recognized by the Medical Council.
Rate of payment per hour:- Rs.200.00

Applications should be sent with full bio-data. Retired officers may also apply. The envelope containing the application and the bio-data must bear the name of the post which they apply on its top left corner and either hand delivered or sent under rgistered post to reach the office of the Registrar on or before 28th October 2011.

REGISTRAR
University of Jaffna.
14.10.2011.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றுப்படியில் கயிற்றில் தொங்கியவாறு இளைஞரின் சடலம்

தென்மராட்சி, ஒக்.15

கிணற்றுப் படியில் கட்டப்பட்ட கயிற்றில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம் நேற்று மந்துவில் மேற்குப் பகுயிலிருந்து கொடிகாமம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த குணசிங்கம் சுபாஷன் (வயது-27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்ற அப்பகுதி மக்கள் கொடுத்த தகவலையடுத்தே பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்ட பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(ஒ-207-323)

## இந்தியா - சீனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகம் தெரிவித்துள்ளது.

தென் சீனக் கடலில் எண்ணெய் வளம் குறித்த ஆய்வில் வியட்நாம் நாட்டுடன் இணைந்து இந்தியா ஈடுபட்டு வருவதை சீனா எதிர்த்து வருகிறது. இதனால் ''வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகள் மீது போரை ஆரம்பிக்கும்படி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் வெளியிடப்படும் 'குளோபல் ரைம்ஸ்' என்ற பத்திரிகை சீன அரசிடம் வலியுறுத்தி இருந்தது'' என்று 'சிலிகோன் இந்தியா' தெரிவித்துள்ளது.

எனவே, ''1962இல் இடம்பெற்றதைப் போல், சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு பெரிய ஆசிய நாடுகளுக்கும் இடையில் போர் மூள்வதற்கான சாத்தியங்கள் அதிகமாகவே உள்ளன.

தற்போது தென்சீனக் கடல் தொடர்பில் இவ்விரு ஆசிய நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதலானது பூகோள ரீதியில் திடீரென கவனத்தைத் திசைதிருப்பியுள்ள விடயமாகி உள்ளது.

தென்சீனக் கடலானது உலகிலேயே இரண்டாவது பரபரப்பு மிக்க கடற்பாதை. இதன் கரையோரம் உள்ள சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், தாய்வான், மலேசியா, புறூணை நாடுகளுக்கு இடையில் தீர்க்கப்பட முடியாத பிராந்திய முரண்பாடுகள் நிலவி வருகின்றன. அதாவது தென்சீனக் கடலில் தனக்கே அதிக பங்கு உள்ளதாக சீனா உரிமை கோரிவருகின்றது.

இந்த நிலையில் தென் சீனக் கடலில் உள்ள எண்ணெய் வளம் மற்றும் ஏனைய செல்வம் ஈட்டித் தரக்கூடிய வளங்கள் காரணமாக எதிர்காலத்தில் யப்பான், அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற மிகப் பெரிய நாடுகளுக்கிடையிலும் ஏனைய சிறிய நாடுகளுக்கிடையிலும் ஏற்படக்கூடிய முரண்பாடானது உலகப் போர் ஒன்றுக்கு வழிவகுக்கும் என எதிர்வுகூறப்படுகின்றது.

இந்தோ - சீனா முரண்பாடானது இவ்வாறானதொரு உலகப் போர் ஆரம்பிப்பதற்குக் காலாக அமையுமா எனவும் சந்தேகம் நிலவுகின்றது. தற்போது இதற்கான வரவேற்புக் குறைவாக உள்ள போதிலும், போர் மூள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமானதாகவே உள்ளன'' 'சிலிகோன் இந்தியா' குறிப்பிடுகிறது.

(உ)


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பத்மநாதன்



480/1, கனகசபை அவெனியூ, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பத்மநாதன் 11.10.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இரட்ணதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் ஆசைமகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-சுந்தரம் தம்பதியரின் மருமகனும், பக்தவத்சலன், யசோதா, ராதை(கனடா), பரந்தாமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பதேவி, காலஞ்சென்ற ரவிராஜ் மற்றும் தங்கராசா (கனடா) ஆகியோரின் மாமனும், சோபனா, யதுசன், கிருஸ்ணி (கனடா), கிருஸ்ஷாந் (கனடா), ஷாமினி (கனடா), ஷாருயன் (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பக்தவத்சலன் (கண்டு-மகன்).
480/1, கனகசபை அவெனியூ,
யாழ்ப்பாணம்.


## காணிப்பதிவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநாயகமூர்த்தி சபையில் கொண்டு வந்தார். அதனை வழிமொழிய எந்த நாடாளுமன்ற உறுப்பினரும் அப்போது சபையில் இல்லாத காரணத்தால் விவாதத்தை நடத்த முடியாமல் போனது.

அடுத்த வாரத்தில் காணிப் பதிவு குறித்து மீண்டும் விவாதம் நடத்துவதற்கான முயற்சிகளை கூட்டமைப்பு எடுத்துள்ளது. நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்ட மறுநாள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைக் கூட்டமைப்பு தாக்கல் செய்யும்.

''நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்த பின்னர் நாடாளுமன்றில் விவாதத்தைக் கோரினால், நீதிமன்றில் உள்ள விவகாரம் குறித்துப் பேச முடியாது என்று தட்டிக் கழித்துவிடுவார்கள். அதனால் நாடாளுமன்ற விவாதம் முடியும் வரைக்கும் காத்திருக்க வேண்டி இருக்கிறது'' என்றார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர். (உ)

## நகர அபிவிருத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. இதற்கு முற்றுப்புள்ளி வைத்து அதனை அமைச்சாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

முன்னதாக, முக்கியமான மாநகர சபைகளைக் கூட்டுத்தாபனமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக செய்திகள் வெளிவந்திருந்தன. ஏற்கனவே முக்கியமான மாநகரசபைகளின் செயற்பாடுகளில் சிலவற்றை நகர அபிவிருத்தி அதிகாரசபையே மேற்கொள்வதும் குறிப்பிடத்தக்கது.

அரசு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் பிரகாரம் இனிவரும் காலங்களில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சானது மாநகர சபைகளின் செயற்பாடுகளை நேரடியாக நிர்வகிக்கும் ஆற்றலைக் கொண்டிருக்குமெனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு என்று வர்த்தமானி அறிவித்தல் வந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபை தொடர்ந்து அதிகாரசபையாக இயங்குமெனவும், அதில் மாற்றங்களை செய்யும் உத்தேசம் இல்லையென்றும் அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

(உ-சி)

## வீதி அகலிப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் காணி தனக்கு உரித்தானது என்பதையும் பிரதேச சபையின் விதிமுறைகளுக்கு அமைவாகக் கட்டப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்தினால் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த விடயம் தொடர்பில் எம்மால் விசாரணைகள் மேற்கொண்டு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

இதனடிப்படையில் பலாலி வீதி அகலிப்பின் போது பாதிக்கப்பட்ட ஒருவர் குறிப்பிட்ட ஆதாரங்களுடன் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது இதற்கான பதில் கிடைத்ததும் குறித்த முறைப்பாட்டுக்காரர்களுக்கான தீர்வு வழங்கப்படும் -என்றார் கனகராஜ். (ஒ-15)

## உயர்பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் தங்கியுள்ள மல்லாகம் முகாமையும் அவர்கள் பார்வையிட்டனர். அதன்போது யுத்தம் முடிவடைந்த பின்னர் இவ்வாறான முகாம்கள் இருப்பது தொடர்பிலும், மக்கள் கூடாரங்களில் வாழ்வது தொடர்பாகவும், பல பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்தாதது தொடர்பாகவும், மக்களின் வீடுகள் கட்டடங்களில் இராணுவத்தினர் பல இடங்களிலும் தங்கியிருப்பது தொடர்பாகவும் தாம் அவதானித்து தமது அறிக்கையில் குறிப்பிடவுள்ளதாக ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

மேலும் தெல்லிப்பழையில் துர்க்கை அம்மன் கோயிலில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்துக்கும் குழுவினர் சென்றனர். இறுதி யுத்தத்துக்கு முன்னர் 40 சிறுவர்கள் வரையே இருந்தனர் என்றும் தற்போது 150 சிறுவர் கள் வரை அங்கு தங்கியுள்ளனர் என்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினரிடம் எடுத்துக் கூறப்பட்டது. இந்த விடயங்கள் அனைத்தையும் ஆணைக் குழுவினர் செவிமடுத்து குறிப்பெடுத்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-15)

## இழுத்தடிக்காது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்றுத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருமித்த கருத்துடன் பேசுவதற்கு முன்வரவேண்டும் என நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்தபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இது தொடர்பாக மாவை சேனாதிராஜா தெரிவித்ததாவது:-

பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருமித்த கருத்துடனேயே கலந்துகொள்கிறது. ஆனால், அரசு ஒருமித்த கருத்துடன், நோக்கத்துடன் பங்குகொள்கிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பேச்சில் தமிழ் மக்களின் ஒருமித்த யோசனைகளையே கூட்டமைப்பு அரசிடம் சமர்ப்பித்திருக்கிறது. எனினும், அரசு அவ்வாறு செயற்படுவதில்லை. ஒவ்வொரு கலந்துரையாடலின் போதும் ஏதாவது ஒரு காரணத்தைச் சுட்டிக்காட்டி, திகதிகளை இழுத்தடிக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யோசனைகளைச் சமர்ப்பித்தபோது அவற்றை நிராகரிப்பதாகக் கூறிய அரசு, காலம் தாழ்த்தியது. தொடர்ந்து வந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலைச் சுட்டிக்காட்டிப் பேச்சை ஒத்திவைத்தது. இப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருமித்த கருத்துடன் பேச்சு நடத்த முன்வரவேண்டும் என்ற காரணத்தை அரசு கூறியுள்ளது.

பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பங்கேற்க வேண்டும் என்று இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் என்பன வலியுறுத்தி வருகின்றன.

தமிழ் மக்களும் கடந்த தேர்தலின்போது அதனையே எடுத்துக்காட்டினர். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணையைக் கருத்திற்கொண்டு, இனிமேலும் தீர்வை இழுத்தடிக்காது தனது திட்டத்தை அரசு முன்வைக்கவேண்டும். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் - என்றார். (உ-சி)

## தெற்கு மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், எதிவரும் ஜனவரி மாதம் முதல் தெற்கில் இருந்து வருபவர்கள் தமது பகுதிகளில் தங்கியிருந்து கடல்தொழிலில் ஈடுபட அனுமதிப்பதில்லை என்று உறுதியான தீர்மானம் நிறைவேற்றி உள்ளன.

கடல் அட்டை பிடிப்பதற்காக என்று கூறிக்கொண்டு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் தெற்கு மீனவர்கள் நூற்றுக்கணக்கானோர் வடமராட்சி கிழக்கில் தங்கி இருந்து தொழில் செய்து வருகின்றனர். எனினும் அட்டை பிடிப்பது மட்டுமன்றி சங்கு பிடித்தல் உட்பட மீன்பிடித் தொழிலில் அவர்கள் அத்துமீறி ஈடுபடுகின்றனர் என்றும் அதற்காகத் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்றும் அந்தப் பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

''வடமராட்சி கிழக்கில், தென்னிலங்கையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்திக் கடல்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இதனை அடுத்து வடமராட்சி கிழக்கு கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், இனிவரும் காலங்களில் தெற்கு மீனவர்களை வடக்குக் கடலில் தொழில் செய்ய அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் தொடக்கம் இந்த நடைமுறையைப் பின்பற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது'' - என்று தெரிவித்தார் யாழ். மாவட்ட கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர்.

(உ-14)


## கடை வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி A9 பிரதான வீதியில் கந்தசாமி ஆலயத்துக்கும் சென் திரேஸா தேவாலயத்துக்கும் இடையில் சகல வசதிகளுடனும் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0750760922 , 0771916979

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் அரவணைப்பில்
18.09.1962
ஆண்டவன் அரவணைப்பில்
12.10.2003

திதி: திருதியை (15.10.2011)

### அமரர் அப்புக்குட்டி உதயசீலன்

(அப்பன்)

கண்ணின் இமையாக எமைக் காத்த அப்பாவே!
வருடங்கள் எட்டு மறைந்தாலும் ஆறவில்லை - எம்துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன அப்பா
உங்கள் அன்பைப் போல் வருமா?
எம்மோடு நீங்கள் வாழ்ந்த பசுமையான நினைவுகள்
என்றென்றும் எம்மனதில் நிலைத்திருக்கும்
ஆண்டுகள் பல சென்றாலும் - உங்கள்
அருமை நினைவுகள் என்றென்றும் நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!!!

கணேஸ்வரம்,
அளவெட்டி.

என்றென்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட் சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

குறிப்பு:-ஜேர்மன் மொழி Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.

GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

MyWay ஆசிரியரிடம் நேரடியாக பயிற்சிபெற.... கடைசி சந்தர்ப்பம்

A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளலாம்

ஆங்கிலம் கதைக்க வேண்டுமா வேண்டாமா... தீர்மானிக்க இது கடைசி சந்தர்ப்பம்...

பயிற்சியில் சேர 15.10.2011 சனிக்கிழமை இன்று கடைசி நாளாகும்
இன்று சேர முடியாதவர்கள் தகுந்த காரணம் இருப்பின் நாளை பயிற்சியில் சேரலாம்

காலம் : 1 - 3 மாதங்கள் | கட்டணம் : 3000 மட்டும்

திங்கள்,புதன், வெள்ளி - 4 பிரிவுகள்
8-9.30, 9.30-11, 3-4.30, 4.30-6

சனி, ஞாயிறு - 4 பிரிவுகள்
8-10, 10-12, 2-4, 4-6

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி
## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

**காலம்:-** 2011.10.16 ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:-** மாலை 4.00 மணி

**இடம்:-** கல்லூரி பிரதான மண்டபம்.

சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்
வே.அரசகேசரி

செயலாளர்
இ.கிருஷ்ணர்.

# சிறுவன் சாவு

தென்மராட்சி, ஒக்.15

நோயினால் பாதிக்கப்பட்ட பத்து வயதுச் சிறுவன் ஒருவனை அம்புலன்ஸில் கொண்டு சென்றவேளை வழியில் மரணமானான்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு, முள்ளியானைச் சேர்ந்த ரஜனிகாந்த் ஜெபநேசன் (வயது-10) என்னும் சிறுவனே மரணமானான்.

மூச்சு விடுவதற்கு சிரமப்பட்ட சிறுவனை வாகனத்தில் கொண்டு வந்தபோது நித்தியவெட்டை படையினர் தமது அம்புலன்ஸில் ஏற்றி பளை வைத்திய சாலையில் அனுமதித்து அங்கிருந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் அந்தச் சிறுவன் மரணமானதாக தெரிவிக்கப்பட்டது. சிறுவனின் சடலம் சாவகச்சேரி வைத்திய சாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

# மீசாலை தேவாலயத்தில் உறுதி பூசுதல் சடங்கு

மிருசுவில், பளை பங்கைச் சேர்ந்த 122 பேருக்கு உறுதி பூசுதல் சடங்கு இன்று காலை 7 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலாஸ் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் யாழ். ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் கலந்து கொண்டு உறுதி பூசுதல் சடங்கை நடத்திவைப்பார்.

மிருசுவில் பங்குத் தந்தை பத்தி நாதர் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு இடம் பெறும். (131)



இரண்டு வருட முழு உத்தரவாதத்துடன் இந்தியன் நீர் மோட்டர்களை சிறந்த விலையிலும் கட்டடப்பொருள்கள் (சீற், சிமெந்து, கம்பி வகைகள்), பெயின்ற் வகைகள் (25% விலைக் கழிவு) மின்சாரப் பொருள்கள், நீர்க்குழாய்கள் போன்றவற்றை மலிவு விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**தக்ஷா ரேடிங்**

பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய். TP: 021 223 0202

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் மங்கையற்கரசி



கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மீசாலை மற்றும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் மங்கையற்கரசி நேற்று (14.10.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், சிவானந்தன் (கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்), சரவணமுத்து (மீசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், பொன்னம்மா, காலஞ்சென்ற கனகம்மா, அருணாசலம் மற்றும் கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரியும், அஜந்தினி, திருவரங்கன், அனுசா, நிலானி, ஜனகன், நிலக்சி, யாமளன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2011 வெள்ளிக்கிழமை கோண்டாவிலில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தட்டுமட வீதி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
தி.சிவானந்தன்.

**MARSHA SYSTEMS (PVT) LTD**
Solution to the People
74 Kannathiddy Road, Jaffna.
TP : 021 222 1200 , 021 222 9418
SOLUTION TO THE PEOPLE

**தீபாவளிக்கான மாபெரும் மலிவு விற்பனை**

இதோ ஒரு அரிய சந்தர்ப்பம்....

Intel 3.0 Ghz (2M)
Astrock G31
1 GB DDR II
160 GB Sata
16" LCD View Sonic
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
32000.00

Intel 3.0 Ghz Dual core
Astrock G31MS
1 GB DDR II
500 GB Sata
16" LCD view Sonic
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
38000.00

Intel 3.0 Ghz Dual core
Astrock G41
2 GB DDR III
500 GB Sata
19" LCD ASUS/Dell
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
41000.00

Life Time Service Free Computer Sales & Repairing

Intel 3.0Ghz Dual core
ASUS P5G41T-MLX
2 GB DDR III
500 GB Sata
19" LCD Dell/Asus
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
45000.00

Intel i3 3.10Ghz
Astrock H61M-HVS
2 GB DDR III
500 GB Sata
19" LCD Dell/Asus
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
50000.00

Intel i3 3.10Ghz
Astrock H61M-HVS
2 GB DDR III
500 GB Sata
19" LED View sonic
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
53000.00

யாழ் நகரில் கணனி விற்பனையில் 7 வருட முன்னோடிகள்

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**



**IELTS**
**GENERAL /ACADEMIC**
**Full Time & Part Time**
British Council test registered centre.
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

**DIPLOMA IN ENGLISH**
Duration : 3 Month
* ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்
* மாணவர்களின் தேவைக்கு ஏற்ப வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்

**Weekend Batch-15.10.2011(Saturday)**
**Weekday Batch-17.10.2011(Monday)**

LONDON METROPOLITAN COLLEGE
No:197,Arasady Road,Jaffna
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230, 021 753 8395

**தவறிவிட்டது**

இல. 558, 5 ஆம் யூனிற் வளநகர் யோகபுரம் மல்லாவியைச் சேர்ந்த சபாரத்தினம் செல்வரட்ணம் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் வவுனியாவுக்கும் - மல்லாவிக்கும் இடையில் தொலைந்துவிட்டது. எனவே இதனைக் கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது 077- 0724479 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி கரந்தன் சந்தியில்தோட்டக்காணி [கிணறு, பாதை] 35 பரப்பு விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 0772367508

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள சிரேஷ்ட உதவி பொறியியலாளர் திரு.தி.சிவானந்தன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
**மங்கையற்கரசி தில்லையம்பலம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரும், ஊழியர்களும்
கமநல சேவை குழு, வேலணை - புங்குடுதீவு.

**Quick Learning Course**
**Spoken English With Grammar**

உரையாடட் பயி சிக . , பேச்சுப் பயி சிக , உச்சரிப்புப் பயி சிக யாவும் புதிய தொழி நுட்பத்தி கமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.

A/L பரீட்சை எழுதிய மாணவர்க ம றும் ஆங்கிலம் க க விரும்பும் அனைவருக்கும்

திங்க , செ வா , , வியாழ ஆகிய நாட்களி வகுப்புக ந டைபெறும்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகி கொசி Hotel மே
Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935
No. 13A Annai Teresa Lane, Rambakulam, Vavuniya. Tel: 024 3245287

புதிய வகுப்புக்க 17.10.2011 ஆரம்பம்
Batch I 09.00 a.m. - 12.00 p.m.
Batch II 12.00 p.m. - 03.00 p.m.

அனுமதிக மட்டுப்படுத்தப்பட்டு ள்ளதா மு கூட்டியே தங்க பதிவுகளை மே கொ வத மூலம் ... தெரிவு செ து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15 .10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.